# கலைச்செல்வி

மாசி... 1962.

4-2



## தமிழ் நாட்டுத்தொழிலை ஆதரியுங்கள்

உங்கள் வீட்டுப் பாவனைக்குத் தேவையான

# அலுமினியப் பாத்திரங்களை

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.

ONE DOLLAR

DOLLAR BRAND

இந்த

## டொலர் டிரேட் மார்க்கைப்

பார்த்துத் தெரிவு செய்யுங்கள்.

அவை

பார்க்கக் கவர்ச்சியானவை. உறுதி மிக்கவை

பாவனைக்கு ஏற்றவை. உத்தரவாதமானவை.

பிரகாசம் பொருந்தியவை.

## யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்திலுள்ள

நமது தொழிற்சாலையில்

இவை தயாராகின்றன.

# டொலர் கோர்ப்பரேஷன்,

**14, டாம் வீதி, கொழும்பு-12.**

போன்: 6910

## FOURTH YEAR OF PUBLICATION

After completing three full years of continued service to Literature and Fine Arts KALAICHELVI enters with Pride Confidence and Hope into the Fourth year.

KALAICHELVI is the largest circulated Tamil Monthly, published from Jaffna.

KALAICHELVI is read and preserved in almost every Tamil homes.

KALAICHELVI is by far the best, the cheapest and the most effective medium to advertise your goods!

Rates on application to:

*The Advertisement Manager*

KALAICHELVI

226, K. S. Road, Jaffna.

Telephone: 348

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை வெளியீடுகள்

பாடசாலை மாணவர்களின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைய வெளியான பாடநூல்கள்.

**Practice Tests**
(in English)
for
Std. V.
BY
*A. Mahadevan*

**Practice Book 2**
Composition & Comprehention
(in English)
for
J. S. C. Classes
by *A. S. Kanagaratnam*

**இரசாயனம்**
(தமிழில்)
S. S. C. வகுப்பிற்குரியது
எழுதியவர் :
*அ. க. சர்மா*

**தாவரவியல்** (தமிழ்)
*நா. இராமநாதன்*
S. S. C. வகுப்புக்குரியது.

**குடியியல்**
6, 7, 8, 9-ம் வகுப்புகளுக்குரியது
A. *விசுவநாதன்*

கிடைக்குமிடம் :

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

*234 கே. கே. எஸ், வீதி* யாழ்ப்பாணம்.

---

Dealers in NESTLE'S Products
DIRECT IMPORTERS
WHOLESALE & RETAIL MERCHANTS FOR
*PROVISIONS, GROCERY & TINNED FOODS*

"நெஸில்ஸ்" தயாரிப்புகளின்
விநியோகிஸ்தர்களும்
மொத்த சில்லறை விற்பனையாளர்களும்

# SELVARATNAM & CO.,

262-264, Pickerings Road,
KOTAHENA.

## கவனியுங்கள்

அடுத்தமாதம் முதலாம் திகதி (1-3-62) தொடக்கம் "கலைச்செல்வி"யின் புதிய அலுவலகம் கீழ்க்கண்ட இடத்தில் அமைந்திருக்கும்.

சந்தாதாரர்கள்,

விற்பனையாளர்கள்.

விளம்பரதாரர்கள்

எழுத்தாளர்கள்.

இம்முகவரியைத் தயவு செய்து குறித்துக்கொள்க.


கலைச்செல்வி அலுவலகம்

226, கே. கே. எஸ். வீதி.

யாழ்ப்பாணம்.

போன்-348



'கல்லழகி' தொடர் காவியம் அடுத்த இதழில் நிறைவுறும்.

சினிமாப் பகுதியில்

புதுமுகம் விஜயனும், விஜயலட்சுமியும் என்றிருப்பதை பாலாஜியும், சாவித்திரியும் என வாசிக்குக

### இலக்கிய பரம்பரை

பண்டிதர் வ. நடராஜன் அவர்களின் தொடர் கட்டுரையின் இரண்டாம் பகுதி அடுத்த இதழில் இடம்பெறும்.




"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்"


கலை: 4. | மாசி 1962 | காட்சி 2.


உள்ளே.........


1. திருக்குறள் கீர்த்தனை
2. அன்பார்ந்த நேயர்கள்
3. உங்கள் கருத்து
4. வெள்ளி மணி
5. தேர்தல் சூடு
6. கோள்வினை தீர்க்கும் கோடியர்ச்சனை
7. சந்திப்பு (தொடர் நாவல்)
8. யாழ்-நூல் நிலையம்.
9. ஆசிரியர் சொன்னகதை
10. அன்பு அன்னை
11. மலர்ந்தது நெடுநிலா (குறுநாவல்)
12. என்னை உருவாக்கியவர்கள்.
13. நான் கண்ட கவியோகி
14. மனக்கோலம்.
15. யாழ்-இளம் எழுத்தாளர் சங்கம்
16. பட் பட்
17. சினிமாச் செய்திகள்
18. ஒருலட்சம் கேட்டநடிகை
19. பொன்விளக்கு

திருக்குறள் கீர்த்தனை :

## கடவுள் வாழ்த்து 2.

இராகம் : கல்யாணி. தாளம் : ஆதி.

**பல்லவி**

பெற்ற பயன் என்ன சொல்வாய் ... ஈசன்
பொற் பதங்கள் தமைப் போற்றித் துதிக்காமல்

**அனுபல்லவி**


முற்பவம் தனையறுக்கும் நற்பதம் தொழுதிடாமல்
கற்பவை கசடறக் கற்றும் உலகினிலே

**சரணம்**

வேதமும் ஆகமமும் விழுமிய நூல்களெல்லாம்
போதனை செய்வதொன்றே பொருந்திறை தாள்கள் இன்றே
சாதனை நீயுமிங்கு சாதித்த தேதுமுண்டோ
நாதனும் ஞானனின் நற்றுள் தொழாமல் நீயும்.

...யாழ்ப்பாணம் என். வீரமணி

## வாழ்க மணமக்கள்



யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற ஐவுளிமாளிகை அதிபர் S. R. செல்னத்துரை அவர்களின் சிரேஷ்ட புத்திரன் திரு. S. **தேவதாசன்** அவர்கட்கும், காரைநகரைச்சேர்ந்த **செல்வி வே. நாகேஸ்வரி** அவர்கட்கும், காரைநகரில் வெகுசிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

## அன்பார்ந்த நேயர்களே!

**வணக்கம்.** பொங்கல் மலர் பொங்கலுக்கு முன்பே வெளியானதைப் பாராட்டியும் மலரின் உயர்ந்த தரம் குறித்தும் எழுதிய அன்பர்கள் அனைவர்க்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

'கலைச்செல்வி' வாசகர்களின் தொகை கணிசமான அளவிற்கு அதிகரித்துள்ளது. தமிழ் மக்களின் குடும்பப் பத்திரிகையாக 'கலைச்செல்வி' விளங்குவது உண்மையிலேயே மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. "தரமான விஷயங்களைத்தாங்கி வருவது மட்டுமல்ல, குறிப்பிட்ட ஒரு திகதியில் 'கலைச்செல்வி' வெளிவந்தே ஆகவேண்டும்" என்ற உங்களின் அன்புக் கட்டளையை இனியும் புறக்கணிக்கமுடியுமா? ஒவ்வொரு மாதமும் அதிக பிரதிகளை அச்சிடவும் வேறு பல வேலைகளை உடனுக்குடன் கவனிக்கவும் கௌரவ அங்கத்தினர்களை மட்டும் உடைய யா. த. இ. மன்றத்தினுல் முடியாது. ஆகவே அடுத்த மாதம் தொடக்கம் யாழ்ப்பாணத்திலுள்ள சில பிரபல எழுத்தாளர்களும் பிரசுரகர்த்தர்களும் 'கலைச்செல்வி'யின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கின்ருர்கள் அச்சகமொன்றில் 'கலைச் செல்விக்கென தனிப்பகுதியை ஏற்படுத்தப் பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன.

'கலைச்செல்வி' வளர்ச்சி அடைவதால் தனிப்பட்ட ஒரு மனிதனே அல்லது தனிப்பட்ட ஒரு ஸ்தாபனமோ வளரவில்லை; ஈழத்துலுள்ள எழுத்தாளர்கள் வளர்கின்ருர்கள்.

'கலைச்செல்வி'யின் சேவை மென்மேலும் வளர்வதற்கும் இலங்கையிலுள்ள ஒவ்வொரு தமிழ் மகனின் கையிலும் 'கலைச்செல்வி' இருப்பதற்கும் என்னென்ன பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என்பதை அன்பர்கள் எழுதுவார்கள் என எதிர்பார்க்கின்ருேம். வணக்கம்.

ஆசிரியர்.

# வெள்ளி — மணி!

அவர் ஒரு நடிகர்.
அவர் ஒரு சங்கீத வித்துவான்.
அவர் ஒரு மிருதங்க வித்துவான்.
அவர் ஒரு நடன ஆசிரியர்.
அவர் ஒரு சாஹித்ய கர்த்தா.
அவர் ஒரு சொற்பொழிவாளர்.
அவர் ஒரு கதாப்பிரசங்கி.
யார் இந்த அவர்?

இத்துணை சிறப்புக்களும் திறமையும் பெற்ற ஒருவர்...ஒரே ஒருவர் இலங்கையில் இருக்கின்றூர் என்றுல் அவர் நமது மணி பாகவதராகத்தான் இருக்க முடியும். இக்கலேஞருடைய கதாப் பிரசங்க வாழ்க்கையின வெள்ளி விழா இலங்கையின் பல பகுதி களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது

தமிழறிஞர் மகாவித்துவான் கணேசையர் அவர்களின் பேரணுகிய மணிபாகவதர் அவர்கள் 25 ஆண்டுகட்குமுன்னர் கொழும்பு தட்டாதெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஸ்வாமி கோ விலில் முதல் முதலாகக் கதாப்பிரசங்கம் செய்யத் தொடங்கி இன்று வரை இலங்கை, இந்தியா, மலாயா, சிங்கப்பூர் மூதலிய இடங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரசங்கங்கள் செய்துள் ளார். இரண்டு ஆண்டுகட்கு முன் பாகவதர் மலாயா சுற்றுப் பிரயாணத்தை ஒட்டி, சிறம்பான் தவ நெறி மன்றத்தினர் வெளியிட்ட “மணிமலர்” என்ற சிறப்பு மலரிலிருந்து மலாயா வாழ் தமிழ் மக்களும் மற்றும் இலங்கை இந்தியாவிலுள்ள சைவத் தமிழறிஞர்களும் எத்துணே மதிப்பு வைத்திருக்கின்றூர் கள் என்பதை அறிய முடிகின்றது.

இப்பொழுது நல்லூர் ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்துப் பிரசாரகராக விளங்கும் பாகவதர் அவர்களே, இவ்வாண்டு சென்னேயில் நடைபெறவிருக்கும் இசைவிழா ஒன்றில் அழைப் பித்துக் கதாப்பிரசங்கம் செய்விப்பதற்குச் சென்னேயிலுள்ள தமிழன்பர்கள் முயன்று வருகின்றூர்கள் என்ற செய்தி கேட்டுப் பெருமையும் பெருமகிழ்ச்சியும் அடைகின்றோம்- திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்யாது விடுவார்களா?

முத்தமிழ் மணி, புலவர் மணி, கதா காலட்சேப கலாநிதி மணி பாகவதர் அவர்கள் நீடுழிவாழ்ந்து சைவத்தையும் தமி ழையும் வளர்க்க இறையருளே வேண்டுகின்றோம்.

# உங்கள் கருத்து

எங்கள் செல்வி

"கலைச் செல்வி" இளம் எழுத்தாளர்கட்குக் கொடுக்கும் உற்சாகம் போற்றத்தக்கது... நாடு உங்களை வரவேற்கும்.

கல்முனை–3 மு. சடாட்சரம்.

கரும்பினிது தேனினிது என்பர்.

இலக்கியப் பொக்கிஷமாகிய "கலைச்செல்வி" என் கரங்களில் ஏறியவுடன் அகமகிழ்ந்தேன். "கலைச்செல்வி" மூலம் தாங்கள் தந்த பொங்கல் பிரசாதம் தேனிலும் பார்க்க இனிமையாக இருந்தது.

நிந்தவூர். நிந்தவூரான்

சிந்தைக்கினிய சிறந்த கதை, கவிதை, கட்டுரைகளையும் மற்றும் பல சுவையான அம்சங்களையும் தாங்கிவந்த "கலைச்செல்வி" பொங்மலர் வெகு பிரமாதம்...

கல்முனை-6 செயினுல் ஆப்தீன்.

கலைச்செல்வி பொங்கல் மலர் கண்டேன். உணர்ச்சி வசப்பட்டு முழுவதும் வாசித்தேன். உணர்ச்சி ததும்பும் பல சிறந்த அம்சங்கள். ஒவ்வொரு பக்கமும் பார்க்கச் சலிப்பற்ற முறையில் அமைந்திருந்தது.

காவத்தை. பி. செல்லத்துரை

"கலைச்செல்வி"யின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. களிப்படைகிறோம், பெருமைப்படுகிறோம், பெருமிதம் கொள்கின்றோம்.

வேலணை. இரா சிவசந்திரன்

சொர்ண மலர்!

கம்பீகரத் தோற்றத்துடன் சொர்ணலிங்கத்தார் காட்சியளிப்பதைத் தங்கள் பொங்கல் மலரில் கண்டேன். மலரினுள்ளே மூவர்ணப் படம் வெளியிட்டபெருமை உங்களுக்கே உரியது. நாடகரசிகர்கள் சார்பாகவும் கலைஞர்கள் சார்பாகவும் உங்களுக்கு என் நன்றியும் பாராட்டும்.

கொழும்பு. நாடகமணி.

நிலா விருந்து.

பொங்கல் மலரில் வெளியான செ. யோகநாதனின் 'மலர்ந்தது நெடுநிலா' அறிவுச் சுவை சொட்டும்படி அமைந்திருப்பதுடன் உணர்ச்சியைத் தொடுவதாகவும் அமைந்துள்ளது.

பேராதனை. "மாமுனி"

கொஞ்சும் மொழி!

"நெடுநிலா" குறுநாவலில் ஆசிரியரின் தமிழ்நாட்டை கொஞ்சுகின்றது.

கைதடி க. பரராசசிங்கம்.

**நன்றி**

தைப்பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய பெரியோர்களுக்கும் "கலைச்செல்வி" வாசகநேயர்களுக்கும், நண்பர்களுக்கும் எங்களது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மண்ணுசை!

அ. ந. சர்மா அவர்களின் 'மண்ணிலே மாயம்' படித்தேன். சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும்படி எவ்வளவு எளிமையாக இவ்விஷயத்தை விளக்கியுள்ளார்! விஞ்ஞான முறைப்படி இந்தத் தொழிலை விருத்தி பண்ணப் பணம் படைத்தவர்கள் முன்வருவார்களா?

திருநெல்வேலி க. இராஜி

பெண்ணுசை!

"பானுஸிம்ஹன்,, அவர்களின் ''அவள் பெண்'அருமை! தொடர்ந்து நல்ல பல கதைகளை அவர் படைக்க வேண்டும் என்பது என் ஆசை.

நல்லூர். இ. தியாகராஜன்.

பா, பா, அப்பா!

பொங்கல் மலரில் பா. பாலேஸ்வரி எழுதிய ''அப்பாதான் வேண்டும்"— என் உள்ளத்தை நெகிழவைத்தது.

கல்பிட்டி M. H. M. ராஸிக்

உள்ளத்தைக் கவர்ந்தமலர்!

பொலிவுடனும் புது மெருகுடனும் ''மலர்ந்த பொங்கல் மலர்" கண்டு பூரிப்படைந்தேன். இது ஈழத்திலே பூத்துக்குலுங்கும் இலக்கியப் பூங்கா' எல்லோரும் படிக்கவேண்டிய மலர்; கலைப்பொக்கிஷம்.

திருக்கோணமலை பத்மாசனி ஏரம்பு

---

# மதிப்புரை

ஸ்ரீ லங்கா பஞ்சாங்கம்: அரசாங்க தவல் பகுதி; கொழும்பு. இலவச விநியோகம்.

இலங்கை அரசாங்கத்தின் தகவல் பகுதினரால் முதன் முதலாகத் தமிழில் வெளியிடப்பட்டுள்ள இவ்வாண்டுக்குரிய பஞ்சாங்கம் காலஞ்சென்ற பிரதமர் அவர்களதும், இப்போதைய பிரதமர் அவர்களதும், அழகான புகைப்படத்துடன், பகிரங்க விடுமுறை நாட்கள், வளர் பிறை, தேய் பிறை, வருடப்பிறப்புக்கருமம், அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களின் சாதனைகள், பாராளுமன்ற உறுப்பினரின் கட்சிவாரியான பட்டியல் முதலிய பல விபரங்களுடன் தெளிவாக அச்சிடப்பட்டுள்ளது. இவ் வெளியீட்டிற்கு காரணமாயிருந்த தகவல் அதிகாரி திரு. லயனல் பெர்ணுண்டோ அவர்களையும் ''ஸ்ரீலங்கா'' ஆசிரியர் முதலியார் குல. சபாநாதன் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

ஆசிரியர்

# தேர்தல் சூடு

உலகத்திலேயே மிகப்பெரிய இந்தியப் பொதுத் தேர்தல் அண்மையில் நடைபெற இருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே. இந்திய உப கண்டத்தின் ஒரு இராஜ்யமான தமிழ் நாட்டுத் தேர்தல் பிப்ரவரி 17, 18, 19, 24, திகதிகளில் நடைபெற இருக்கின்றது. தமிழகத்தில் தேர்தல் பிரசாரங்கள் சூறுவளி வேகத்தில் வெளிவருகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 10 கட்சிகள் போட்டியிடுகின்றன. 206 சட்டசபைத் தொகுதிகளைக் கொண்ட தமிழகத்திற்கு 797 அபேட்சகர்களும், 41 அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டிய டில்லி லோக் சபைக்கு 151 அபேட்சகர்களும் இறுதியாகப் போட்டியிடுகின்ருர்கள். கூடுதலான தொகுதிகளுக்கு காங்கிரஸ் கட்சியும் தி. மு. க. கட்சியுமே போட்டியிடுகின்றன.

மிகவும் பலத்தபோட்டி காங்கிரஸ்க்கும், தி. மு. க. சுதந்திரக்கட்சிகளுக்குமிடையே ஏற்பட்டிருக்கின்றன. சில தொகுதிகளில் தி. மு. கவும், சுதந்திரக்கட்சியும் சேர்ந்து காங்கிரஸை எதிர்க்கின்றன. ஆனல் காங்கிரஸ்க்கு ஈ. வி. கே. சம்பத்கட்சியும், பெரியார் கட்சியும், இரகசிய ஆதரவு கொடுக்கின்றன. சம்பத், கண்ணதாசன் தேர்தலில் தோல்வியுற்ருலும், மேல்சபைக்கு நியமனம் பெறும்வாய்ப்பைக் காங்கிரஸ் தேடிக்கொடுக்குமாம். அதனுல் சம்பத் கட்சி காங்கிரஸின் வெற்றிக்கு தீவிரமாக உழைக்கின்றது.

கூட்டு ஒப்பந்தம் என்ற அடிப்படையில் சிலகட்சிகள் ஒன்று சேர்ந்திருந்தால் பலம் வாய்ந்த எதிக்கட்சிதோன்ற ஏதுவாக இருந்திருக்கும். இன்றுள்ள நிலையில் தி. மு. க. எதிர்க்கட்சிக்குரியளவு ஸ்தானங்களைப் பெற்ருல், தமிழ் நாட்டு அரசியல் நிர்வாகத்தில் நல்லதோர் மாற்றம் ஏற்படலாம். ஆனுல் காங்கிரஸ்ஆளும் கட்சியாக வந்தால் வியப்பொன்றுமில்லைத்தானே.

## அகில இந்தியாவிலும்

### லோகசபைக்குப் போட்டியிடும் கட்சிகளின் விபரம்

| கட்சிகள் | அபேட்சகர்கள் |
|---|---|
| காங்கிரஸ் | 485 |
| ஜனசங் | 198 |
| சுதந்திரா | 172 |
| பி. சோஷலிஸ்ட் | 166 |
| கம்யூனிஸ்ட் | 137 |
| சோஷலிஸ்ட்கள் | 107 |
| குடியரசு | 80 |
| ஹிந்து மகாசபை | 42 |
| சாம்ராஜியபரிஷத் | 41 |
| தி. மு. க. | 18 |
| ஜர்அகண்ட் | 11 |
| கனதந்திரபரிசத் | 10 |
| விவசாயிகள் தொழிலாளர் | 10 |
| பார்பட்பிளாக் | |
| அகாலிதளம் | |
| முஸ்லீம் லீக் | |
| சுயேச்சைகள் | |
| இதரகட்சிகள். | |

## தமிழ் நாட்டில்

### போட்டியிடும் கட்சிகளின் விபரம்

| கட்சிகள் | சட்ட சபை | லோக சபை |
|---|---|---|
| காங்கிரஸ் | 205 | 40 |
| தி. மு. க. | 142 | 18 |
| சுதந்திரா | 94 | 16 |
| கம்யூனிஸ்ட் | 68 | 14 |
| பி. சோசலிஸ்ட் | 21 | 05 |
| சோசலிஸ்ட் | 7 | 02 |
| ஜனசங்கம் | 4 | 1 |
| ரிவப்ளிகன் | 4 | 2 |
| பார்வர்டுபிளாக் | 6 | 1 |
| தமிழ்தேசியக்கட்சி | 8 | 1 |
| சோஷி.தொழிலாளர் | 7 | 1 |
| சுயேச்சைகள் | 227 | 50 |
| | 793 | 151 |


## கலைச்செல்வி விற்பனையாளர்கள்

**வ. ஐயாத்துரை,**
நியூஸ் ஏஜன்ற்,
காங்கேசன்துறை.

**V. M. கந்தசாமி,**
நியூஸ் ஏஜன்ற்,
வல்வெட்டித்துறை

# கோள்வினை தீர்க்கும் கோடி அர்ச்சனை

டாக்டர் கா. கைலாசநாதக் குருக்கள். M. A Ph. D.

ஏட்டுக் கிரகங்கள் ஒரே இராசியில் ஒன்றுகூடியதை முன்னிட்டு நேரக்கூடிய தீமைகளை அகற்ற வழி தேடிப் பாரதத்தின் பலபாகங்களிலும் மக்கள் தெய்வ வழிபாட்டில் ஈடுபட்டு வந்தது அனைவரும் அறிந்ததே. சமய உணர்ச்சி தலைசிறந்து ஓங்கி விளங்கும் பாரதத்தின் தென் பகுதியிலும் இவ்வழிபாடு சிறந்த முறையில் நடைபெற்று வந்ததைச் செய்தித் தாள்கள்மூலம் அனைவரும் அறியக்கூடியதாக இருந்தது. தென்னிந்தியாவை அடுத்து அமைந்து விளங்கும் இலங்கைத்தீவிலும் இதே வழிபாட்டு முறையைக் கடைப்பிடித்து மக்கள் வழிபாடாற்றிவந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைத்தீவு பாரதத்தினின்றும் பிரிந்து வேறுநாடாகக் காணப்படினும் இருநாடுகளும் வெவ்வேறனவையல்ல என்ற உண்மையை இருநாடுகளுக்கும் பொதுவாக விளங்கும் பண்பாட்டை உற்றுநோக்கும் பொழுது எளிதில் உணரலாம். சைவம் தழைத்தோங்கி வளரும் இந்நாட்டில் மிகப் பிரசித்திபெற்ற தலங்கள் பல உள. அவற்றுள் முன்னேஸ்வரம், கோணேஸ்வரம், கேதீஸ்வரம் என்பன மிகப்புராதன ஷேத்திரங்கள். அருணகிரிநாதரால் பாடப்பட்ட கதிர்காமம் என்னும் திருத்தலமும் இங்கு உண்டு.

தானமான ஸ்ரீ முன்னேஸ்வரம் இராமாயணத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. இங்கு தனிவிசேஷம் ஒன்று உண்டு. பல மதத்தவர்களும் இங்குவந்து வழிபடுகின்றனர். சைவர்கள் மட்டுமன்றிப் பௌத்தர்களும்(புத்த பிக்குகள்கூட) இங்குவந்து செல்வதைக் காணலாம் கிறிஸ்தவர்களும் திரள்திரளாகவந்து வழிபடுவது இங்குமட்டுமே நிகழ்வதொன்று. ஜாதிமத பேதமின்றி அன்றுதொட்டு இன்றுவரை மக்கள் வழிபாடாற்றிவரும் ஒப்புயர்வற்ற தலம் இது. இங்கு கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் வடிவழகி அம்மையாருக்கு நூற்றெட்டுத் தினங்களாகக் கோடி அர்ச்சனை நடைபெற்றுச் சமீபத்தில் இனிது நிறைவேறியது.

பேரும உருவும் அற்றவன் இறைவன். அவனுக்குப் பல பெயர்களையும் பல உருவங்களையும் கற்பிக்கும் முறை இந்திய வழிபாட்டுமுறையில் மட்டுமே உண்டு. கண்ணுற் காணமுடியாதவாறும், மனதாற் கிரகிப்பதற்கரிதாகியும் விளங்கும் நிஷ்களப் பரம்பொருளை, அறிவு முதிர்ச்சியற்ற பாமர மக்களது நலங்கருதிப் பெயரும் உருவும் அமைத்துக்காட்டி மறைநூல்களான வேதங்களே விளங்கவைத்துள்ளன. சிவபெருமானின் நூறுநாமங்களைக்கூறும் முக மிகப்புரமாகச் சதருத்திரியம் அமைந்துள்

ளது. பிரமத்தின் சகுண, நிர்குண இயல்புகளை உபநிடதங்களில் வரும் பல பகுதிகள் விளக்கிக் கூறுகின்றன. பரம்பொருளின் சகுணநிலையில் கையாளவேண்டிய உபாசனு மார்க்கம் கூறுவதும் உபநிடதங்களே. பாரதம் அனைத்திற்கும் பொதுவான வழிபாட்டுமுறையின் இவ்வம்சங்கள் இரண்டும் தென்னிந்தியாவின் ஏக போக உரிமைகளாக இன்றும் விளங்குவதை நாம் கணூரக் காண்கின்ளேம். இங்குதான் பல உருவங்களில் இறைவனைப் பிரதிட்டைசெய்து பல பெயர்களைக்கூறி அவனை மக்கள் வணங்குகின்றுர்கள். உருவமற்ற சிவபெருமானின் ரூபாரூபமான சிவலிங்கத் திருவுருவத்தையும், உருவம் பெற்றுத் தோற்றம் அளிக்கும் அறுபத்திநான்கு மூர்த்திபேதங்களின் திருவுருவங்களையும் ஸ்தாபித்து வணங்கும் முறை தென்னுட்டுக் கோவில்களில் மட்டுமே உண்டு. இவ்வாறு பல உருவங்களில் கற்பிக்கப்படும் இறைவனுக்குப் பல நாமங்களை இட்டுக்கூறி அழைப்பதுடன் இப்பெயர்களை வழிபாட்டு முறையிலும் ஈடுபடுத்திவரும் முறை தென்னிந்தியாவில் மட்டுமே காணப்படுகின்றது. இங்குதான் 16 நாமங்களையோ, 108 நாமங்களையோ, 1000 நாமங்களையோ கூறி அர்ச்சனைசெய்யும் வழக்கம் உண்டு. அடியவர்கள் கோவிலுக்குச் செல்லும்பொழுதெல்லாம் தத்தம் நன்மைகளை நாடி அர்ச்சனைகள் செய்விப்பது, தென்னிந்தியத் திருக்கோவில்களில்—இலங்கைத் திருக்கோவில்களிலும்கூடச் சாதாரணமாக நிகழும் அன்றன்றுடைய நிகழ்ச்சி. இலக்ஷம் தடவைகள் இவ்வாறு செய்யப்படும் அர்ச்சனை இலக்ஷார்ச்சனையென்றும் கோடி முறை நிகழ்த்தப்படும் அர்ச்சனை கோடி அர்ச்சனையென்றும் கூறப்படும். ஒரு குறிக்கோளை மனதிற் பதியவைத்துச் செய்யும் வழிபாடு இது எனவும் லக்ஷார்ச்சனைக்கு விளக்கங் கூறலாம். லக்ஷம், லக்ஷயம் என்ற சமஸ்கிருதச் சொற்கள் குறிக்கோள் எனப் பொருளுணர்த்தி நிற்பன. கோடிமுறை நிகழ்த்தப்படுவதுடனமையாது அளவுகடந்த இன்னல்விளைய இருக்கும்வேளை முடியும் வரை, அதாவது எல்லை (கோடி) காணப்படும்வரை நிகழ்த்தப்படுவதற்குக் கோடி அர்ச்சனை எனப் பெயரிடுதல் முக்காலும் பொருந்தும். அர்ச்சிக்கும்பொழுது கண்கள் இறைவன் திருவுருவை நோக்குகின்றன; வாய் அவன் நாமங்களை உச்சரிக்கின்றது; காதுகளும் இவற்றைக் கேட்கின்றன. மனமும் இறைவனில் இலயித்துவிடுகின்றது இவ்வாறு வழிபாடாற்றுவோன் முற்றிலும் இறைவன் வழிப்பட்டு இறைவழிபாடு செய்யும் இம்முறை தனிச்சிறப்புடையது, இதுவே அர்ச்சனையின் மகத்துவம்.

கிரியை முறைகள் ஆகமவிதியின்றும் இம்மியளவேனும் பிசகாமலும் பார்ப்பவர்களைப் பரவசமுறச் செய்யும் முறையிலும் நடைபெறும் பரம்பரை வழக்கை நெடுங்காலம் கடைப்பிடித்து வருவது ஸ்ரீமுன்னேஸ்வர க்ஷேத்திரம். இதற்குச் சான்றுகளோ விளக்கங்களோ வேண்டப்படா. இவ்வுண்மையை நேரிற்சென்று இன்றும் கண்ணுரக் காணலாம். இப்பொழுது இவ்வாலத்தை அறநெறி தவருது பரிபாலித்துவரும்

முன்னேஸ்வர ஆதீன தர்மகர்த்தர் ஸ்ரீ சி. பாலசுப்பிரமணியகுரு அவர்கள் இக்கோவிலின் நித்திய நைமித்திய கிரியைகளை ஒழுங்காக நடப்பித்து வருகின்றார்கள். கிரகங்கள் ஒன்றுசேருவதற்கு ஒருவருடத்துக்கு முன்னரே திட்டமிட்டு இக்கோடி அர்ச்சனையை உரியவாறு குறையெதுவுமின்றி நடத்தத் தெய்வத் திருவருளால் உந்தப்பட்டு அதற்கு வழிவகைகள் வகுத்து மிகவுஞ் சிறப்பாக இதை நிறைவேற்ற மனம் வாக்குக் காயங்களால் பெரிதும் உழைத்தது தம்நலங் கருதியல்ல மக்கள் பெருநலங் கருதியென்பதை இவ்வைபவத்தை நேரிற் பார்த்தவர்கள் தாமே உணர்வர்.

முன்னேஸ்வரம் 64 சக்திபீடங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. அளகேஸ்வரம் என்னும் இப்பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டு விளங்கும் ஸ்ரீ சக்ர (மேரு) மகாயந்திர பூஜையே இவ்வைபவத்தின் பொழுது நிகழ்ந்த முக்கிய நிகழ்ச்சி என்பது கிரியை முறைகளை உணர்ந்தவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உடனே தெளிவாகிவிடும். நாடு அல்லலுற இருக்கும்பொழுது இவ்வழிபாடு நிகழ்ந்தது முற்றிலும் பொருத்தமே. நாத்திகம் பரவி நாடழிய இருந்த அக்காலத்தில் இவ்வுபாசனையின் மகத்துவத்தினாலன்றோ ஸ்ரீ சங்கரர் பரமதங்களையகற்றி உயர்ந்த சநாதன தர்மத்தை நிலைநாட்டினார். 23-10-61 திங்கட்கிழமைமுதல் 5-2-62 திங்கட்கிழமைவரை 108 தினங்களாக இங்கு தொடர்ச்சியாக, கல்ப சூத்திரம் கூறும் முறைப்படி ஸ்ரீசக்ர யந்திரபூஜை நிகழ்ந்துவந்தது. இதன் அங்கமாக நிகழ்ந்தது கோடி அர்ச்சனை. தினந்தோறும் ஒரு லக்ஷம் அரச்சனை நடைபெற்றது. எனவே 108 தினங்களிலும் நூற்றெட்டு லக்ஷார்ச்சனைகள் நடைபெற்றன. இவை ஒருகோடியே எட்டு லக்ஷம் அர்ச்சனைகளாக அமைந்துவிட்டன. நவாவரணங்களுடன் நூற்றெட்டுமுறை நிகழ்ந்த சக்ரபூஜையின் அங்கமாக விளங்கியது கோடியர்ச்சனை.

நூற்றெட்டுத்தினங்களிலும் நிகழ்ச்சிகளனைத்தும் இடையில் ஒருவகையான இடையூறுமின்றி இறுதிவரை ஒரேமாதிரியாக நடைபெற்றன. காலையில் நித்தியபூஜைகள் நிறைவேறியதும், பத்து அர்ச்சகர்களும் மூலத்தானத்தில் எழுந்தருளியிருக்கும் மூலவரையணுகி வழிபட்டு அவரது அனுஞ்ஞைபெற்று அங்கிருக்கும் ஸ்ரீ சக்ரமேரு யந்திரத்தை எடுத்து வலமாக அர்ச்சனைக்காக நிறுவப்பட்டிருக்கும் மண்டபத்திற்குக் கொண்டுவருவர். பலவகையான அலங்காரங்களுடன் விளங்கும் மண்டபத்தின் புறத்தில் பத்துத்திக்குப் பாலகர்களின் உருவம் தீட்டப்பட்ட படங்கள் நிறுவப்பட்டுள்ளன. அவர்களின் சக்திகளின் உருவங்களும சித்திரரூபமாகத் தேவியை நோக்கியவாறு அமைக்கப்பட்டுள்ளன. இ ர்களுக்குப் பூஜை முதலில் நிகழும். இவர்களின் காவலில் மண்டபம் பாதுகாக்கப்படுவது என்பதே இப்பூஜையின் தத்துவார்த்தம். மண்டபத்தின் நடுவில் திரிகோணவ வமான வேதியின்மீது அமைக்கப்பட்ட பைந்தவாசனத்தின்மீது வீற்றிருக்கும் வடிவழகியம்மனின்முன் று

வப்பட்ட பீடத்தின்மீது யந்திரம் கொண்டுவந்து வைக்கப்பட்டதும் சுருக்கமான ஸ்ரீ சக்ர நவாவரண தேவதைகளின் தியானம் ஆவாகனம் முதலிய கிரியைகளுடன் அர்ச்சகர்கள் உபாசனையை ஆரம்பிப்பர். நவாவரணங்களுக்கும் ஒன்பது இருத்துவிக்குகளாக ஒன்பதின்மர் பிரதான அர்ச்சகருக்குத் துணைபுரிவர் எனவே, அருச்சகர்கள் பதின்மரும் ஒருங்குகூடி குங்குமத்தினுல் அருச்சனை செய்வர். ஆறு சகஸ்ர நாமங்கள் (ஒருவர் 6000 வீதம் 60,000 அர்ச்சனைகள்) நடைபெற்றதும் அம்பிகையின் முன்னிலையில் அமைக்கப்பட்ட ஓமகுண்டத்தில் அர்ச்சகர்கள் ஓமம் நிதழ்த்திப் பூர்ணுகுதி கொடுப்பர். இதையடுத்து நிகழும் உச்சிக்காலபூஜை தீபாராதனையுடன் பகல் நிகழ்ச்சிகள் நிறைவுபெறும். இதைத்தொடர்ந்து பூஜையில் அம்பிகைக்கு நிவேதித்த பிரசாதமான அறுசுவையுணவு கோடி அர்ச்சனையைத் தரிசிக்கவரும் அடியவரனைவருக்கும் அளிக்கப்படும். தினந்தோறும் நிகழும் இந்நிகழ்ச்சி அம்பிகைக்கு ஏற்கனவே திரும்பத் திரும்ப நிகழ்ந்துவரும் லலிதா சகஸ்ரநாமத்தில் உணவளிப்பவள் என்னுங் கருத்தையுடைய அன்னதா என்னும் நாமத்தின் பொருளைச் சொற்களால் விளக்காது செயலால் சுட்டி விளக்குவதுபோல் அமைந்து விளங்கும். பின்னேரம் 4–30 மணியளவில் நித்திய பூஜை நிறைவேறியதும் எஞ்சிய நான்கு சகஸ்ரநாமங்கள் (40,000 அர்ச்சனைகள்) தொடர்ந்து நிகழும். ஒவ்வொருநாளும் ஒன்பதாவது அர்ச்சனை முடிந்ததும் விரிவான ஸ்ரீ சக்ர யந்திரபூஜை பரசுராம கல்பசூத்திரங்கூறும் முறைப்படி விஸ்தாரமாக நடைபெறும். யந்திர பூஜையின் முடிவில் நடக்கும் பத்தாவது சகஸ்ரநாமம் அன்றன்ருடு ஒவ்வொரு லக்ஷர்ச்சனையையும் பூர்த்தியாக்கும் வகையில் அமையும். இதையடுத்து விசேஷ தீபாராதனையும் ஓமப் பூர்ணுகுதி முதலிய கிரியைகளும் அன்றைய கிரியா நிகழ்ச்சிகளை நிறைவாக்குவன. பின்னர் ஸ்ரீ சக்ர யந்திரம் மூலத்தானத்தில் மூலவரிடம் ஒப்படைக்கப்படும்; அர்த்தயாமப் பூஜையும் நிகழும்.

இடையூறெதுவுமின்றி, மந்திரலோபமோ, கிரியாலோபமோ, சிரத்தை லோபமோ சிறிதும் இல்லாது. இவ்வைபவம் சென்ற 5. 2. 1962 திங்கட்கிழமை இரவு இனிது நிறைவேறியது. இத்தினத்தில் முன்னேஸ்வரம் கண்கொள்ளாக் காட்சியளித்தது. மூன்று சகஸ்ர சங்காபிஷேகங்கள் ஒரேதினத்தில் நடந்தன. காத்தற்கடவுளாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவுக்கும், முன்னை நாதஸ்வாமிக்கும் வடிவழகியம்பாளுக்கும் இவ்வாறு சங்காபிஷேகங்கள் தனித்தனி நடைபெற்றன. கோடியர்ச்சனையை உள்ளடக்கி 108 தினங்களாக நிகழ்ந்த ஸ்ரீ சக்கரயந்திர மஹோபாசனை, அம்பாள் சர்வாலங்கிருதையாக நாநாவித வாத்தியங்களுடன் பவனி வந்த பெரும் உற்சவ வைபவத்துடன் இனிது நிறைவேறியது. வடிவழகி மூலவரின் முன்னிலையில் வழமைபோல் போயமர்ந்ததும் மூலவரான ஸ்ரீ முன்னை நாதஸ்வாமிக்கும் வடிவழகிக்கும் சம்மேளன மஹார்ச்சனை நடைபெற்றது. சிவ சக்தி-ஐக்யரூபத்தின் உயரியதத்துவத்தை எடுத்துக்கூறும் முகமாக இம் மகார்ச்சனையமைந்தது.

கோடி அர்ச்சனை நடக்கும் வேளை அம்பிகையைத் தரிசிக்க நாட்டின் பல பாகங்களிலிருந்து மக்கள் தினந்தோறும் வந்து சென்றனர். அண்மையிலிருக்கும் கொழும்பிலிருந்து அரசாங்க உத்தியோகம் வசிக்கும் அடியவர்கள் ஓய்வு தினங்களாகிய சனி ஞாயிறு ஆகிய தினங்களில் கூட்டமாக வந்து தரிசித்ததுடன் சம்ஸ்கிருதப் பயிற்சியற்றவராயிருப்பினும் கையில் தமிழில் அச்சிடப்பட்ட சகஸ்ரநாமபுத்தகங்களைத் தாங்கித் தேவியின் சந்நிதியிலமர்ந்து அர்ச்சனையின் போது நாமங்களுச்

எந்நேரமும் வீட்டில் தண்ணீர் கிடைக்க வசதி செய்துகொள்ளுங்கள்.

**தண்ணீர் யந்திரம், குழாய் வசதிகள்**

அமைத்தால்

**வேலைக்காரர் தொல்லை தீர்ந்துபோகும்.**

இவ்வசதி செய்வதற்கும், வேறு மின்சார தேவைகளுக்கும் எங்களுடைய விலைக்குறிப்பு மிக மலிவானது.

**எங்களிடம் கேளுங்கள் :**

# ஒட்டோஸ் லிமிட்டெட்

# AUTOS Ltd.

**யாழ்ப்பாணம்.**

போன் : 496. தந்தி: ஒட்டோஸ்


சரிப்பதைக் கவனித்துத் தாமும் அவற்றை உச்சரிக்க மானசிகமாகப் பயிலுங் காட்சி அவர்கள் ஆர்வத்தையும், தேவியின் நாமங்களை உச்சரிக்க அவர்கள் கொண்டுள்ள அவாவையுங் காட்டிற்று எல்லோரும் அமைதியாக இருந்து அர்ச்சனை நேரங்களில் தரிசித்து கண் காட்சியே நூற்றெட்டு நாட்களில் அர்ச்சனையை முன்னிட்டு அன்றன்று செலவாகும் தொகையைப் பலர் போட்டியிட்டுக் கொடுக்க முன் வந்தனர். தமக்கு இவ்விஷயத்தில் பணம் கொடுக்க கொடுக்க வாய்ப்புக் கிட்டாததையிட்டு வருத்த முற்றவர் பலர். பௌத்தர் களான சிங்கள மக்கள் அநேகர் பலதினங்களில் பெருந்தொகையாள உபயச் செலவுகளை ஏற்று நடத்தியது குறிப்பிடத் தக்கது. அரசாங்கத்தில் முதலிடம் வகிக்கும் மந்திரிகளும் இக் கோடியர்ச்சனை விழாவில் பங்குபற்றியது இப்பொழுது நடக்கும் அரசாங்கம் ஆஸ்திக மனப்பான்மையுடைய தென்பதை வலியுறுத்துகின்றது.

கோடியர்ச்சனை நிகழ்ச்சியில் ஒரு முறை அம்பிகையைத் தரிசிக்கும் பேறுபெற்றவர்கள் கணப்பொழுது பெற்ற மனச் சாந்தி இனித் திரும்பத்திரும்ப பிறவிகள் பல எடுத்து இடைவிடாது சாதனைகள் பல நிகழ்த்திப் பெறவல்ல சாந்தியிலும் பன் மடங்கு அதிகமானது

# கவிதையைத் தருவாள் தோழா!

—பா. சத்தியசீலன்—


பாளையின் வெடிப்பிற், பொய்கைப்
　　பங்கயச் சிரிப்பிற், தோட்ட
வாழையின் குருத்திற், தென்னை
　　வட்டிளங் குலையில், அந்தி
வேளையின் மயக்கில், வான
　　வெண்குடை நிலவிற் தோன்றிக்
காளையென் நெஞ்சிற் கள்ளி
　　கவிதையைத் தருவாள் தோழா!

காந்தளின் மலர்விற், காலைக்
　　கதிரவன் ஒளியிற், சோலைப்
போந்தமென் மலரில், வாசம்
　　புதைந்துலாந் தென்றல் வீச்சில்,
மாந்தளிர் வனப்பில், வாவும்
　　மான்களின் மருண்ட நோக்கில்
ஏந்தெழிற் செல்வி தோன்றி
　　என்மனம் நிறைப்பாள் தோழர்!

மயில்களின் இயலில், மாலை
　　மல்லிகை மணத்தில், சோலைக்
குயில்களின் இசையில், குன்றின்
　　குளிர்புனல் அருவிவீழ்வில்
கயல்களின் பிறழ்வில், தோப்புக்
　　கனிகளின் சுவையில், அந்த
மயில்விழி மங்கை தோன்றி
　　'மன்னவா' என்பாள் தோழா!

தும்பியின் பண்ணில், வானந்
　　தூக்கிய மீனில், கானில்
கொம்பிடைத் துளிக்கும் தேனில்
　　குழவியின் மழலைப் பேச்சில்
செம்பொருட் கவியில் ஆழும்
　　சிந்தையின் சிலிர்ப்பில் வந்து!
அம்பிடைப் பட்ட கண்ணுள்
　　'அன்பனே' என்பாள் தோழா!

புவனு உயர்சாதிப் பணக்காரர் குடும்பத்துப்பெண். முத்தையாவோ,ஏழைக்குடும்பத்தில்பிறந்த குறைந்தசாதிக்காறன்.தம்சகோதரி சரசுவின் உதவியால் முத்தையாவின் தொடர்பு அதிகரிக்கின்றது புவனுவிற்கு. முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படவில்லை. ஆனுல் கொம்புத்தேன் முடவன்மேல் ஆசைகொண்டது. இருவரினதும் காதல் வளர்ந்துவிட்டது பின்நடந்ததை வாசித்துசுவையுங்கள்......




## 4. முள்

"பேரூர்ச் சிற்பங்களைப் பார்த்து வரலாம் வருகிறீர்களா? என்ருள் புவனு. முத்தையாவின் வீட்டு வாசலில் அவளுடைய கார் நின்றது. சரஸ்வதி பள்ளிக்கூடம் போய்விட்டாள்.

"நான் முன்பே பலதடவை பார்த்திருக்கிறேன்" என்ருன் முத்தையா. அவனுக்குத் திரும்பவும் அவற்றைப் பார்க்கவேண்டும் என்கிற ஆசைதான், என்ருலும் அவளுடன் ஒன்ருய்க் காரில் போவதற்கு அவனுக்குத் தயக்கமாயிருந்தது. அதுவரை அவன் அப்படிப் போனதில்லை.

"நானுந்தான் பலதடவை பார்த்திருக்கிறேன், என்ருலும் நாம் இருவரும் ஒன்ருய் அவற்றைப்

பார்த்ததில்லையே! சித்திரக்காரருடன் சேர்ந்துசென்றால், சிற்பக்கலையின் ரகசியங்களை அதிகமாய்த் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?" என்றாள் புவனா.

பேரூருக்குச்சென்று இருவரும் சிற்பங்களைப் பார்த்துக்களித்தார்கள். ஓரிடத்தில் உட்கார்ந்து சுவராஸ்ய மாய்ப் பேசிக்கொண்டே இயற்கைக் காட்சிகளை அநுபவித்தார்கள். உல கத்தில் உள்ள எல்லாக் கடிகாரங்க ளுமே நின்றுபோய்விடவேண்டு மென்றும் சூரியன் வானத்தில் உல வாமல் அப்படியே வானத்தோடு ஒட்டிக்கொள்ளவேண்டுமென்றும் அவர்களுக்கு ஆசையாக இருந்தது.

கார் திரும்பிக்கொண்டிருந்தது. புவனாவின் பிடிவாதத்தின்மேல் முத் தையா அவளுக்குப் பக்கத்தில் முன் ஸீட்டில் உட்கார்ந்திருந்தான். புவனா காரை ஓட்டிக்கொண்டிருந்தாள். வெகுநேரம் தங்களை மறந்து பேரூரில் தங்கிவிட்டதால் புவனா காரை வேக மாக ஓட்டிக்கொண்டிருந்தாள்.

எதிரே ஒரு பர்லாங் தூரத்தில் இன்னொரு கார் வந்தது. புவனா அதை உற்றுக் கவனித்தாள். அவ ளுடைய கை கொஞ்சம் நடுங்கியது. முத்தையாவிடம் பேசிக்கொண்டு வந்தவள் திடீரென்று பேச்சை நிறுத்தினாள். முத்தையாவுக்கு ஒன் றும் புரியவில்லை,

"அப்பா வருகிறார்; முன்ஸீட்டில் தான் உட்கார்ந்திருக்கிறார்!" என் றாள், நடுங்கும் குரலில் புவனா.

முத்தையாவுக்கு உலகம் தலை கீழாக உருண்டது. புவனாகூடத் தன்னுடைய தைரியமத்தனையும் இழந்துவிட்டாள். அவளுடைய கைகள் பிடியிலிருந்து நழுவின. மின் வெட்டும் நேரத்திற்குள் புவனாவின் கார் அருகில்நின்ற புளியமரத்தை நோக்கிப் பாய்ந்தது.

பயங்கரமான சத்தம்! கண் ணாடிச் சில்லுகள் சிதறி இருவர் நெற்றியிலும் பாய்ந்தன. இருவரும் நினைவிழந்து ஒருவர்மேல் ஒருவர் சாய்ந்தனர். காரின் இன்ஜின் தூள் தூளாகிச் சிதறியது.

திருஞானம்பிள்ளையும் ஏற்கனவே தம் பெண்ணைப் பார்த்துவிட்டார். அவருடைய கார் நின்றது. பதறித் துடித்துக்கொண்டு ஓடிவந்தார். புவ னாவுக்கு அதிகக் காயமில்லை. நெற் றியில் மட்டும் இரத்தம் வழிந்தது. அவள் மயங்கி அவன் தோளில் சாய்ந்துகிடந்தாள், இந்தக் காட்சி யைக் கண்டவுடன் திருஞானம் ஒரு முறை தம்முடைய கண்களை இறுக மூடித் திறந்தார். அவளுடைய நெற் றிக் காயமோ, அடிபட்ட நிலையோ இப்போது அவருக்கு ஒரு பொருட் டாகத் தோன்றவில்லை. தமக்கு அறி முகமே இல்லாத ஒரு இளைஞனின் தோளில், தமக்கெதிரே...! அவன் யார்? அவன் யார்? அவன் யார்?

அவரோடு அவருக்குத் தெரிந்த ஒருவரும் கூடவந்திருந்தார். பிள்ளை வாளுக்கு ஒன்றுமே தோன்றாதநிலை ஏற்பட்டபடியால், அந்த நண்பரும் டிரைவருமாகச் சேர்ந்து முத்தையா வையும், புவனாவையும் மற்ற காருக் குத் தூக்கிச்சென்றனர்.

"அவனை முன்ஸீட்டில் போடுங் கள்!" என்று கத்தினார் பிள்ளை.

பிள்ளைவாள், நண்பர், புவனா ஆகியோர் பின்ஸீட்டில் இருந்தார் கள். கார் வந்தவழியே திரும்பியது.

"பையன் யார்? புதிதாக இருக்கிறதே?" என்றார் நண்பர்.

"வேண்டிய பையன்தான்!" என்று சுருக்கமாய்ப் பதிலளித்தார் திருஞானம்.

காற்றுகாருக்குள்ளே தாராளமாய் வீசியவுடன் புவனாவுக்கு மயக்கம் தெளிந்தது. கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தாள், "முத்து... முத்து எங்கே அப்பா?" என்று பிள்ளைவாளைக் கேட்டாள். அவர் பதில் பேசவில்லை. வாயை மூடிக்கொண்டு வந்தார்.

எதிரே கிடந்த முத்துவைக் கவனிப்பதற்கு அவளுக்கு ஒரு நிமிஷம் ஆகியது. ஆவலோடு தாவி அவன் முகத்தைத் திருப்பிப் பார்த்தாள். "முத்து! முத்து!" என்று அலறினாள். பிள்ளைவாளுக்குப் பற்றிக்கொண்டு எரிந்தது நெஞ்சு. யார் இந்த முத்து?

"அவன் உயிரோடுதான் இருக்கிறான்; சாகவில்லை. பேசாமல் வா!" என்று உறுமினார்.

புவனா டிரைவரிடம் முத்தையாவின் வீட்டு விலாசத்தைச் சொன்னாள். தகப்பனாரின் கோபத்தை அறிந்தபிறகு தன்வீட்டில் வைத்து அவனைக் கவனிக்கமுடியாதென்பதை உணர்ந்துகொண்டாள்.

முத்தையாவின் வீட்டிற்குக் கார் வந்தது. இந்தமாதிரிச் சிறியவீட்டிற்கெதிரே ஒருபோதும் பிள்ளைவாள் தம் காரை நிறுத்தியதேயில்லை!

புவனாதான் வருகிறாள் என்று நினைத்து, சரஸ்வதி குதித்துக்கொண்டே வீட்டிற்கு வெளியே வந்தாள். முத்தையாவை அந்தக் கோலத்தில் கண்டவுடன் அவளுக்குப் பகீரென்றது. "அண்ணா!" என்று தாவிச்சென்று கதவைத் திறந்தாள்.

"அண்ணாவா? இவளுடைய அண்ணனா இவன்?" பிள்ளைவாள் சற்றுமுன்பு தம்முடைய நண்பருக்குச் சொன்ன பொய்யையும் மறந்துவிட்டுப் புவனாவிடம் இப்படிக்கேட்டார்.

"ஆமாம்!" என்றாள் புவனா.

டிரைவரும் சரஸ்வதியும் முத்தையாவை அவன் அறைக்குள் கொண்டுவந்து போட்டார்கள். புவனா வேகமாய்க் கீழே இறங்கி அவனைப் பிடிக்கப்போனாள். "நீ சும்மா இரு" என்று சீறினார் திருஞானம்.

புவனா அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. காரிலிருந்து இறங்கி அவன் அறைக்குள் நுழைந்


எப்பொழுதும் கலப்பற்ற
சுத்தமான

**குளுக்கோரஸ**

என்று கேளுங்கள்

60% குளுக்கோஸ் கொண்ட சிறந்த ஜூஜூப்ஸ். குழந்தைகளுக்குக் கொடுக்கக்கூடிய பாதுகாப்பான இனிப்பு.

USWATTE
CONFECTIONERY WORKS
Moratuwa.
Phone: 363

தாள். பிள்ளைவாளும் வேறு வழியில்லாது அவளோடு வந்தார்.

படுக்கையில் கிடந்த முத்து மெதுவாய்க் கண்திறந்து எல்லோரையும் பார்த்தான். கண்ணீரும் சிரிப்பும் ஒன்றுகலந்தது புவனாவுக்கு.

"இந்தா! இருநூறு இருக்கிறது. டாக்டரிடம் காண்பித்துக் கவனித்துக்கொள். நீ புவனாவுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்தது போதும். இன்றிலிருந்து வீட்டுக்கு வரவேண்டாம். தெரிந்ததா!? என்றார் கடுமையான குரலில், பிள்ளைவாள் சரஸ்வதியைப் பார்த்து.

பணத்தைச் சரஸ்வதி வாங்கிக் கொள்ளவில்லை. "பணம் வேண்டாம்; நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் போகலாம்" என்றாள்.

"புவனா! வா போகலாம்".

"நான் வரவில்லையப்பா! என்னால்தான் இவர் இப்படிக் கிடக்கிறார். நீங்கள் போங்கள்; நான் அப்புறம் வருகிறேன்.


பிள்ளைவாளுக்கு மீசை இருந்தால் துடித்திருக்கும், கோபத்தால் முகம் மட்டும் கறுத்தது அவருக்கு.

"வருகிறாயா, இல்லையா!" என்று அவளுடைய கையைப் பிடித்தார்.

"பேர, புவனா! நான் பார்த்துக் கொள்கிறேன், போ!" என்றாள் சரஸ்வதி.

தகப்பனாரின் இந்த முரட்டுத்


# 26 % நீடிய ஆயுள்




புதிய எவரெடி

ரேடியோ பற்றியுடன் தங்கநிற அடையாளத்தைப் பாருங்கள். இதுஉத்தரவாதமளிக்கும.

# மஹாதேவன்ஸ் லிமிடெட்

பாங்ஷல் வீதி, : கொழும்பு.

தனத்தைக் கொஞ்சமேனும் எதிர்பாராத புவனு விம்மிக்கொண்டே போய்க் காருக்குள் விழுந்தாள். மற்ற மனிதர்களுக்கு முன்னிலையில் தன் தந்தையை அவள் தாழ்த்த விரும்பவில்லை.

வீட்டில் விசாரணை நடந்தது. பிள்ளைவாள் நீதிபதி, புவனு குற்றவாளி, சிவகாமி அம்மாள் சாட்சி! வேறு யாரும் அங்கு கிடையாது. யுத்தகாலத்தில் போர்க்களத்தில் நிறுவும் 'அவசரக் கோட்டு'ப்போல்இந்த விசாரணை ஒரு தனி அறைக்குள்ளே நடந்தது. புவனு நடந்தவற்றையெல்லாம் கொஞ்சங்கூட மறைக்காமல் விவரமாய்ச் சொன்னுள். சரஸ்வதி தங்கள் வீட்டுக்குள் நுழைந்த நாளிலிருந்து சரஸ்வதியின் வீட்டிலிருந்து தாங்கள் இப்போது புறப்பட்டவரை மளமளவென்று சொல்லிக்கொண்டு போனுள். இதைக் கேட்கக் கேட்கச் சிவகாமி அம்மாளின் கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் பெருகியது — அடிபாவி! விஷயம் இவ்வளவு தூரத்திற்குப் போய்விட்டதா?

"அவனுக்கு என்னவேலை? எவ்வளவு சம்பளம்?"

"வாத்தியார் வேலை; எழுபத்தைந்து ரூபாய் சம்பளம்.

"நீ என்னுடைய மகள்தானு? உனக்கு இதையெல்லாம் சொல்ல வெட்கமில்லையா?"

"சொல்லவேண்டிய காலம் வந்திருக்கிறது; சொல்கிறேன். எத்தனை நாள் இதைச் சொல்லாமல் இருக்க முடியும்."?

"சொல்லிப் பிரயோசனம்? முடிவு?"

"கல்யாணம்!" என்றுள் புவனு. மெதுவாக — ஆனுல் அழுத்தமாக.

"வேறு இடத்தில் உனக்கு முடிவு செய்துவிட்டேன். பிறந்த சாதி என்பது கிள்ளுக்கீரையல்ல. மேடைப்பேச்சையும், பத்திரிகை எழுத்தையும் நம்பி மோசம் போகாதே! ஆயிரங்காலத்துப் பயிர்!"

"நீங்கள் நினைத்தால் எதையும் செய்யலாம் அப்பா! அவரைப் பணக்காரராக்கலாம். உங்கள் சாதிக்காரராக்கலாம். நான் நன்முய் வாழ வேண்டாமா?"

"அது எனக்குத் தெரியும். நீ இனி வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது; அவனைப் பார்க்கக் கூடாது!"

"நான் போவேன்; அவரைப் பார்ப்பேன்; கல்யாணமும் செய்து கொள்வேன்!" என்று துடுக்காய்ப் பதில் சொல்லிவிட்டுப் புவனு அந்த அறையைவிட்டு வேகமாய் எழுந்து வெளியில் போனுள்.

பிள்ளைவாளும் சிவகாமியும் தனியே அந்த அறையில் மந்திராலோசனை செய்தனர். சிவகாமி பெண்ணைப் படிக்கவைத்ததற்காகப் பிள்ளையைத் திட்டினுள். பிள்ளை, புவனுவைத் தன்னிஷ்டப்படி விட்டதற்காகத் தம் மனைவியைத் திட்டினுர். கடைசியாக வெகுநேரம் யோசனைசெய்து ஒரு முடிவுக்கும் வராமல் திகைத்தார்கள்.

"வெளியே தெரியாமல் அந்தப் பயலை ஒழித்துக்கட்டிவிட்டால் என்ன?" என்று இரகசியமாகக் கேட்டார் பிள்ளை.

வெளியே தெரியாமல் பல விஷயங்களை ரகசியமாய்ச்செய்து வெற்றி

**கலைச்செல்வி**
மாத இதழ்.

சந்தா விபரம்
தனிப்பிரதி: சதம் 30
ஆண்டுச் சந்தா: ரூ. 4.

விபரங்களுக்கு:
நிர்வாகி,
கலைச்செல்வி,
கந்தரோடை, சுன்னுகம்.


கண்டவர் அவர். அவர் சம்பாதித்த கோடிக்சணக்கான ரூபாய்களுக்குள் பல்லாயிரம் மர்மங்கள் புதைந்து கிடந்தன.

"பெண்களின் மனசு உங்களுக்குத் தெரியாது. அவன் ஒழிந்த அன்றைக்கே அவளும் அழிந்து போவாள்" என்ருள் சிவகாமி.

"வேறு வழி?"

"இப்போதைக்கு அவன் சுகமாகும் வரையில் நாம் ஒன்றும் செய்யக்கூடாது. அவள் இஷ்டப்படி போய்வரட்டும். பிறகு நிதானமாய்ச் செய்வோம்" என்ருள் சிவகாமி.

பிள்ளைவாள் பேசாதிருந்தார். ஆனல் அதன்பிறகு அவருக்கோ அவர் மனைவிக்கோ மன அமைதி ஏற்படவில்லை. புவனுவின் நடவடிக்கைகளைத் தடைசெய்யாமல் கவனித்து வந்தனர். அவர்களுடைய திட்டம் ஒன்று மெதுவாகத் தொழில் புரிந்துகொண்டிருந்தது. பிள்ளைவாளுக்குத் தூரத்து உறவினனை ஒரு பையன் அவருடைய கம்பெனியைக் கவனிக்கும் சாக்கில் அங்கு வந்தான். பிள்ளை வீட்டிலேயே அவனுக்கு எல்லா வசதிகளும் செய்து தரப்பட்டன. "கோபாலா, கோபாலா" என்று அடிக்கடி அவனைச் சிவகாமி வாய்நிறைய அழைத்து உபசரித்தாள். பிள்ளைவாளும் அவனிடம் தனிப்பட்ட மரியாதை காட்டினர்.

ஆனல் புவனு அவனை வெறுக்கவும் இல்லை; விரும்பவும் இல்லை. அவனேடு அதிகமாய்ப் பழகாமல் வீட்டிலும் வெளியிலுமாக நேரத்தை ஓட்டினுள். முத்தையாவின் வீட்டிற்குச் செல்லும பழக்கத்தை அவள் கொஞ்சமும் விடவில்லை. அதிகமாகவே போனுள். அவனுக்கு உடல் சரியான பிறகும் சென்ருள்.

ஒருமாதம் சென்றபிறகும் கோபாலனுக்கும் புவனுவுக்கும் எவ்வித அன்பும் வளராததால் பெற்ருேர் மீண்டும் மந்திராலோசனையில் ஆழ்ந்தனர். புதிய திட்டம் ஒன்று உருவாகியது.

திடீரென்று ஒருநாள் மாலை பிள்ளையின் கார் முத்தையாவின் வீட்டுமுன்னல் நின்றது. டிரைவர் அதிலிருந்து சில பழக்கூடைகளை இறக்கினன். பிறகு சிவகாமி அம்மாள் கையில் சிறிய தோல்பெட்டியுடன் இறங்கினுள். இவற்றையெல்லாம் பார்த்த சரஸ்வதிக்குத் தன் கண்களையே நம்பமுடியவில்லை. தன் அண்ணுவுக்கு அதிருஷ்டம் வீட்டைத் தேடி வந்துவிட்டது என்றே நம்பினுள். சிவகாமி அம்மாளே வீடு தேடி வந்துவிட்டார்களே!

"மன்னித்துக்கொள் சரஸ்வதி. உனக்கும் உன் அண்ணுவுக்கும் எங்களால ரொம்பவும் கஷ்டம். உன் அண்ணுவைப் பரர்ப்பதற்கு நான் முன்பே வரலாமென்றிருந்தேன். முடிந்தால்தானே? எத்தனையோ வேலைக்ள் எனக்கு" என்று சொல்

விக்கொண்டே உள்ளே நுழைந்தாள் சிவகாமி.

சரஸ்வதி அவளை முத்தையாவின் அறைக்கு அழைத்துச் சென்ருள். சாமான்களும் பின் தொடர்ந்தன. முத்தையா ஒருவாறு யாரென்று புரிந்துகொண்டு சிவகாமியை நமஸ்கரித்தான். புவன தன்வீட்டு நடப்பை முன்பே அவனிடம் சொல்லியிருந்ததால்: அவனுக்குச் சிவகாமியின் வரவு பேரானந்தமாயிருந்தது.

"என்வீட்டுக்காரர் ரொம்பவும் முன்கோபக்காரர். எதையும் யோசிக்காமல் செய்துவிடுவார். நான்கூட சரஸ்வதியை நிறுத்திவிட்டதற்காக அவரிடம் வருத்தப்பட்டுக்கொண்டேன். உங்களைக்கூட எங்கள் வீட்டில் வைத்துத்தான் வைத்தியம் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றேன். பிடிவாதக்காரர்; இப்போதுதான் அவருக்குத் தெரிகிறது. அவரேதான் என்னை நேரில் போய்வரச் சொன்ஞர்" என்ருள் முத்தையாவிடம்.

அரைமணிக்குமேல் அங்கு உட்கார்ந்து அன்பொழுகப் பேசிய பிறகு, சரஸ்வதியை அழைத்துக்கொண்டு அடுத்த அறைக்குள் வந்தாள் சிவகாமி அம்மாள். முத்தையா அவள் கொண்டு வந்த பழத்தில் ஒன்றைச் சாப்பிட்டுக்கொண்டே, அடுத்த அறைப் பேச்சை அக்கறையாய்க் கவனித்தான்.

"இந்தா, வேண்டாமென்று தட்டாமல் இந்தப் புடவையை எடுத்துக்கொள். எனக்கு நீ வேறு, புவன வேறு இல்லை. நீயும் அவளுக்கு அக்காளும் தந்தையுமாயிருக்கவேண்டுமென்பது என் ஆசை. உனக்குப் புரிகிறதா?" என்ருள் சிவகாமி.

சரஸ்வதி சந்தேகத்தோடு விழித்தாள்.

சிவகாமி அம்மாள் சரஸ்வதியைத் தன்னுடைய கைகளால் அருகில் இழுத்துக்கொண்டாள், புவனவையே தொட வேண்டாமென்று சொல்லியவள் இப்படிச் செய்தது அவளுக்கு வியப்பாக இருந்தது.

"எனக்கு இதுவரை ஒரு பெண்தான் என்று நினைத்தேன். இனிமேல் மூன்று பிள்ளைகள் என்று முடிவுக்கு வந்துவிட்டேன். நீயும் உன் அண்ணவும் என்னுடைய குழந்தைகள்தான். உனக்குப் புரிகிறதா சரஸ்வதி?"

சரஸ்வதி புரியாமல் திகைத்தாள்.

"நானும் என் வீட்டுக்காரரும் உன் அண்ணவிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிருேம். முத்தையாவிடம் சொல்லிப் புவனவை மறந்துவிடச் சொல்லமாட்டாயா? உன்னைப்போல அவளும் ஒரு தங்கையாக இருக்கட்டுமே! எங்களுடைய அந்தஸ்து குலம், கௌரவம் எல்லாவற்றையும் விட்டு உங்களிடம் இதைக் கேட்கிருேம்."

அடுத்த அறையிலிருந்த முத்துவுக்கு இதைக் கேட்டு மயக்கம் வந்தது.

"நாங்களே எங்களுடைய செலவில் முத்துவுக்கு வேறு பெண் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிருேம். உயர்ந்த வேலை வாங்கித் தருகிருேம். எத்தனை உதவி வேண்டுமானலும் செய்கிருேம். உன் அண்ணவிடம் சொல்லிப் புவனவின் மனசை மாற்றச் சொல்."

சரஸ்வதி தன்னுடைய கண்ணீரைத் துடைத்துககொண்டாள்.

"உன் அண்ணுவால்தான் அவளை மாற்றமுடியும். நீயும் அதற்கு உதவி செய்யவேண்டும். செய்வாயா?"

"நீங்கள்தான் கொஞ்சம் மனமிரங்கிப் புவனுவை அண்ணுவுக்குக் கொடுக்கக் கூடாதா?" என்ருள் சரஸ்வதி.

"அது எப்படியம்மா முடியும்? எங்கள் நிலைமையை நாலுபேருக்கு மத்தியில் நாங்கள் காப்பாற்றிக் கொள்ளவேண்டாமா?"

பட்டுப் புடவைக்குமேல் ஒரு ஜதை வைரத் தோடுகளையும் வைத்து, அத்துடன் ஒரு கற்றை நோட்டாக ரூபாய் ஆயிரத்தையும் வைத்தாள் சிவகாமி. எனக்காக இதை எடுத்துக்கொள் சரஸ்வதி!" ன்ருள்.

சரஸ்வதி] அவைகளைத் தொடவே இல்லை.

சிவகாமி அம்மாள் மேலும் என்ன என்னவோ பேசினுள்; அழுதாள்; விம்மினுள்; கெஞ்சினுள்; தன் மகளை வளர்ப்பதற்காகத்தான் பட்ட பாட்டையெல்லாம் சொன்னுள் தன் புருஷனின் சொத்து முழுவதையுமே முத்தையாவின் காலடியில் போட்டு விடுவதுபோல் பாவனை செய்தாள்.

விளக்கு வைக்கும் நேரமாயிற்று. சிவகாமி அம்மாள் காரில் ஏறிக் கொண்டாள். அவள் கொண்டுவந்த புடவை, நகை, பணம் எல்லாவற்றையும் பத்திரமாகத் திருப்பிக் காரிலேயே வைத்தாள் சரஸ்வதி. "போய் வாருங்கள் அம்மா! முடிந்ததைச் செய்கிறேன், தலை விதிப்படி நடக்கும்" என்ருள்.

அவளை அனுப்பிவிட்டு முத்தையாவின் அறையில் சரஸ்வதி நுழைந்தபோது முத்தையா பச்சைக் குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தான். சரஸ்வதியும் அவனோடு சேர்ந்து அழுதாள்.



மறவாதீர்கள்

# யாழ் மார்க்
# அலுமினியப் பாத்திரங்களே

அழகும் பிரகாசமும் உழைக்கும் திறனும்
ஒருங்கே அமையப்பெற்றவை.

## அலுமினியப் பாத்திரங்கள்
## வாங்கும்பொழுது

# "யாழ் மார்க்"

**பாத்திரங்களையே**

கேட்டு வாங்குங்கள்.

எப்பொழுதும் எங்கும் கிடைக்கும்.

**உள்நாட்டுக் கைத்தொழிலையே**

ஆதரியுங்கள்.

தொழிற்சாலை:

# யாழ் மெட்டல் இண்டஸ்றீஸ்

*250, கே. கே. எஸ் றேட், யாழ்ப்பாணம்.*

Grams: 'Metal' Phone: 260.

# எழிலுடன் தனி யாழ்நகர் நூல்நிலையம் திகழும்

— சம்பந்தன் —

யாழ்ப்பாணத்தின் அறிவுக்களஞ்சியமாக உருவாகிவரும் யாழ் நூல்நிலையத்தைப் பற்றி அறியாதோர் இருக்கமாட்டார்கள். ஆனால் அது எப்படி எவ்வாறு உருவாகின்றது என்பதை பலர் அறியாமல் இருக்கக்கூடும். ஆகவே இந் நூல்நிலையம் பற்றிய வரலாற்றை பொதுமக்களுக்கு அறிவிப்பதோடு, இன்னமும் பூர்த்தியடையாது இருக்கும் கட்டிடவேலைகளை இந்த வருடத்திலேயே நிறைவுறச் செய்ய, பொதுமக்கள்வேண்டியநிதி உதவி நல்கவேண்டும், என்ற அடிப்படை நோக்கத்தையே இங்கு கட்டுரை சித்தரிக்கின்றது.

ஒரு நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்கு நூல் நிலையங்கள் தான் இன்றியமையாத சாதனங்கள் ஆகும். தமிழரின் கலை, கலாச்சாரம், பண்பாட்டிற்கு பேர்போன யாழ்ப்பாணத்திற்கு ஒரு பொதுஜன நூல்நிலையம் இல்லையே என்ற பெரும் குறை பன்னெடுங்காலமாக இருந்து வந்தது.

அமெரிக்காவிலுள்ள காங்கிரஸ் நூல் நிலையம், இங்கிலாந்தின் பிரிட்டிஷ் மியூசியம், மஸ்கோவின் லெனின் நூல் நிலையம், முதலியன உலகப் பிரசித்தி பெற்றவை. அவை அந் நாடுகளின் தேசிய நூல்நிலையங்களாகும். அவ்வாறே இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் தேசிய நூல்நிலையமாக யாழ்ப்பாண முற்றவெளியில் மத்தியில் கம்பீரமாக கட்டப்பட்டு வரும் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம் எம்மவர்களின் தேசிய நூல்நிலையமாகவும் விளங்கவேண்டும் என்பதே இதை ஆரம்பித்தவர்களின் நோக்கமாகும்.

பலரது அயராத உழைப்பாலும் பொதுமக்களுடைய நிதி உதவியாலும் நாம் எல்லோரும் பெருமையடையக்கூடியதான யாழ்ப்பாண பொதுசன நிலையம் கட்டப்பட்டு வரு

கின்றது. 1934ம் ஆண்டு திரு. செல்லப்பா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இந்நூல்நிலையம், படிப்படியாக முன்னேற்றம் அடைந்து, இன்று அறிவு புகட்டும் ஒரு சிறந்தசாதனமாக காட்சியளிக்கின்றது. அதற்கு அரும்பாடுபட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர் வணக்கத்திற்குரிய லோங்சுவாமி அவர்கள்.


**நூல்நிலையஅமைப்பு**

இப்போ கட்டப்பட்டுவரும் நூல்நிலையத்தின் அமைப்பு டில்லி சர்வகலாசாலை நூலக நிர்வாகி டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களால் திட்டமிடப்பட்டது. அதற்காக கட்டடத்தை சென்னைக்கட்டிட கலைக்குரிசில் திரு. நரசிம்மன் அமைத்தார்கள்.

**நூல்நிலையம்**

இத்திட்டம் ஐந்து அம்சங்களையுடையது.

1. நகரின் மத்தியில் ஒருமத்திய இலவச நூல்நிலையம்




சகலவேலைகளும் பூர்த்தியடைந்ததும் யாழ் நூல்நிலையம் இவ்வாறு காட்சியளிக்கும்.

2. மாநகரசபை வட்டாரங்களில் கிளை நூல் நிலையங்கள்.

3. கல்லூரிகள், பாடசாலைகள், ஆகியவற்றில கிளை நூல்நிலையங்கள்.

4. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கிராமச்சபைகள், பட்டின சபைகள், ஆகியவற்றில் கிளைநூல்நிலையங்கள்.

5. இப்படியான நூல்நிலையங்கள் இல்லாத இடங்களுக்கு மோட்டார் வாகனங்கள் மூலம் புத்தகங்கள் எடுத்துச் சென்று விநியோகிக்கும் நடமாடும் நூல்நிலையங்கள்.

இந்த ஐந்து அம்சங்களும் நிறைவாகும் பொழுது யாழ்ப்பாணக் குடாநாட்டின் எந்தப் பகுதியில் இருக்கும் பிரசையும் இந்நூல்நிலையத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை அவரவர் இடங்களிலேயே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இந்த இலக்கையும் நன்நோக்கத்தையும் அடைவதற்கு 10 லட்சம் ரூபா செலவாகும்.

மேற்சொல்லப்பட்ட திட்டத்தில் உள்ள முதலாவது அம்சமான மத்திய இலவச பொதுசன நூல் நிலையத்தின் கட்டிட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நாலு மாடிகளை உடையதாக இந்தக் கட்டிடம் கட்டப்பட்டதும் பத்துலட்சம்நூல்களைகொள்ளக் கூடியநூலநிலையமும் நூற்றுக் கணக்கானவர் வாசிக்கக்கூடிய வாசிகசாலைகளும்விரிவுரைக்கூடமும், இதில்இடம்பெறும்.இக்கட்டிடத்தை கட்டிமுடிப்பதற்கு ரூபாய் 415, 819/- செலவாகும்.

கடந்த வருடங்களில் நடாத்தப்பட்ட களியாட்ட விழாக்களாலும் ஆசிரியர் சங்கம்அளித்த நன்கொடையாலும் இதற்கு முன் நடாத்தப்பட்ட கொடித்தினங்களாலும் பெரும் தொகையான பணத்தை மிகவும் சிரமபபட்டும் சேர்த்துள்ளார்கள். கட்டிடவேலைகளை இந்த வருடத்தில் கட்டிமுடிப்பதற்கும், கட்டிடத்திற்குதனிக் கவர்ச்சியைக் கொடுக்கவிருக்கும் டோம்புகளையும் கட்டி முடிப்பதற்கும், மேற்கொண்டு ரூபா 1,27,737 திரட்டவேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

இந் நிதியைத் திரட்டுவதற்கு இந்த வருடத்தில் கைத்தொழில் களியாட்ட விழாக்களை நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளார்கள்.

சிக்கன வாழ்விற்கும் நீடிய பாவினைக்கும்
கைத்தறி ஆடைகளையே வாங்கிப் பாவியுங்கள்
விஜயம் செய்ய மறவாதீர்கள்
"ஹண்லூம்ஸ்"
47, மெயின் வீதி, : : யாழ்ப்பாணம்.
(பறங்கித்தெரு)

**நிர்வாகச்செலவுகள்:-**

நூல்நிலையத்தை நிர்வாகம் செய்வதில் ஆண்டுதோறும் 26.000 ரூபாய் செலவாகின்றது. இவற்றை யாழ்ப்பாணம் மாநகரசபையே பொறுக்கின்றது. இங்கு தினமும் 10 பேருக்குமேல் சம்பளம் பெறும் ஊழியர்கள் கடமையாற்றுகிறார்கள்.

**நூல்நிலையத்தில் உள்ள நூல்களும் வாசகர்களும்:-**

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தின் தற்போது 25 ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்கள் உண்டு. வருடம் தோறும் 2000 புதிய நூல்கள் வாங்கப்படுகின்றன. நாள் தோறும் 200-400 பேர் வரை தங்களுக்கு தேவையான நூல்களை இல்லங்களுக்கு எடுத்துச் சென்று வாசித்து வருகின்றார்கள் அந்நூல்களை இருவாரங்களுக்கு மட்டும் வாசகர்கள் வைத்திருக்கலாம். இங்கு உடன் உதவும் நூல்கள் (Reference library) நிலையம் விசேஷமாக அமையப் பெற்று இருக்கின்றது. இதனால் தினமும் 25 பேருக்கு மேல் அந்நூல்களை உபயோகித்து பயனடைந்து வருகின்றார்கள். அதிக விலைகளைக்கொடுத்து நூல்களை வாங்கமுடியாதோருக்கு இங்குகாணப்படும் நூல்கள் பெரும் பலன்களை கொடுக்கின்றன. பெரும் தொகையான உயர்வகுப்பு மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் இங்கு உள்ள நூல்களை உபயோகித்து பயன் அடைகின்றார்கள்.


சுன்னாகத்திற்கு
வரும்போது

V

## பிராமணாள் கிளப்பிற்கு

விஜயம் செய்ய
மறவாதீர்கள்

சுத்தமரன
இனிய
சைவ உணவு

நறுமணம் மிகுந்த
காப்பி, தேநீர்
பழரச பானம்.

V

## பிராமணாள் கிளப்

அறிவுக்கு விருந்தளிக்கும்
பத்திரிகைகள், புத்தகங்கள்

(Prop. S. ஜெகநாதன்)

ஸ்டேசன் வீதி : சுன்னாகம்

ஆராய்ச்சியாளர்களும் இங்கு உள்ள நூல்களை உபயோகித்துப்பயன் அடைகின்றார்கள்.

**மாதசஞ்சிகைகளும் பத்திரிகைகளும்:-**

இலங்கையில் வேறு எந்த நூல்நிலையத்திலும் இல்லாத 185க்குமேற்பட்ட ஆங்கிலதமிழ் மாதவார சஞ்சிகைகளும், 15க்கு மேற்பட்ட தினப் பத்திரிகைகளும் இங்கு உண்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சஞ்சிகைள் எல்லாம் இங்கு அதிகமாக காணப்படுகின்றன தினமும்500க்குமேற்பட்டவாசகர்கள் அங்கு சென்று பத்திரிகைகளை படித்து பயன் அடைகிறார்கள்.

**வருங்காலத்திட்டம்:-**

தகுதி வாய்ந்த நூல் நிலைய பொறுப்பாளர் ஒருவரை நியமிப்பதுபற்றி மாநகரசபை ஆலோசனை செய்கின்றது இங்கு ஒரு சிறுவர் நூல்நிலையம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளார்கள் நூல்களை தரம்பிரித்து தசமபின்ன இலக்கம் இடும்முறைகளையும் கூடிய கெதியில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

**சேவையும் பயனும்.**

யாழ்ப்பாணத்தின் எப் பகுதியிலிருக்கும் பிரஜையும் இந்நூலகத்தைப் பயன் படுத்திக் கொள்ளலாம். இது ஒரு பொதுசன இலவச நூல்நிலையம், காலை 8.00 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரையிலும் இது பொதுமக்களின் உபயோகத்திற்காக திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. இந் நேரங்களில் எவரும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் அங்கிருந்து வாசிக்கலாம், குடா நாட்டின் எப்பகுதியிலிருக்கும் பிரஜையும் இந் நூலகத்தில் அங்கத்தவராகச் சேர்ந்து இலவசமாக நூல்களைப் பெற்று இரண்டு வாரங்களுக்குள் திருப்பிக் கொடுக்கலாம்.

ஆகவே யாழ்ப்பாண பொதுசன நூல் நிலைய நிதிக்குக் கொடுக்கும் ஒவ்வொருசதமும் குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் பயனுடையதாகும் என்பதை நினைவிற்கொண்டு இதன்பொருட்டு நூல்நிலையக் குழுவினால் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலிலும் அவர்களுடன் ஒத்துழைத்து யாழ்ப்பாண குடாநாட்டில் வசிக்கும் மக்களுக்கு பெருமையும் பயனும் தரும் இந் நூல் நிலையத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பெருமளவில் நிதியுதவி செய்யவேண்டியது எல்லோரினதும் கடமையாகும்.

சுத்தமாக
✽
சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

**விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு**

தயாரிக்கும்

# பேபி BABY BRAND மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

— தயாரிப்பாளர் —

## சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ராஜா ஸ்ரோர்ஸ்

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி ESVES

# ஈடு மீட்கவா! வீடு கட்டவா!!
# சீதனம் கொடுக்கவா!!!

இதைப்போல் எதற்கும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

## நவீன சேமிப்பிற் சேருங்கள்

| மாதவீதம் | இலாபத்துடன் கொடுக்கும் தொகை | | |
|---|---|---|---|
| கட்டுவது | 30 மாதங்களில் | 60 மாதங்களில் | 100 மாதங்களில் |
| 10 ரூபா | 330 ரூபா | 720 ரூபா | 1300 ரூபா |
| 25 ரூபா | 825 ரூபா | 1800 ரூபா | 3250 ரூபா |
| 50 ரூபா | 1650 ரூபா | 3600 ரூபா | 6500 ரூபா |

**மேற்குறித்த இலாபத்துடன் ஒவ்வொருமாதமும் அதிட்டசாலிகளுக்கு அதிட்ட இலாபமும் கொடுக்கப்படும்**

கட்டுபவர் இறந்தால் உரித்தாளிக்கு

கட்டிய பணத்துடன் கால் பங்கும் கொடுக்கப்படும்

மறு விபரத்திற்கு:-இலங்கா நிதி லிமிற்றெட்
தலைமைக் கந்தோர்:-திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்
கிளை:- 284, காங்கேசந்துறை வீதி, வண்ணார்பண்ணை

# ஆசிரியர் சொன்ன கதை

செல்வி மீனலோஜனி குமாரசாமி
தபாற்கந்தோர் வீதி
சங்கானை

யாழ் நகரின் ஒரு பகுதியான உடுவில் என்னும் கிராமத்திலுள்ள பெண்கள் கல்லூரியில் நான் ஐந்தாவது வகுப்பிற் படிக்கும் பொழுது இச்சம்பவம் நடந்தது.

நான் ஒரு தேயிலைத் தோட்ட முதலாளியின் மகளாகப் பிறந்தேன். அத்துடன் குறும்புத் தனமும் சேர்ந்து என்னோடு பிறந்துவிட்டது.

நான் எனது வகுப்பறையில் நுழைந்து விட்டால் எல்லாப் பிள்ளைகளும், தங்கள், பொருட்களையோ புத்தகங்களையோ பத்திரப்படுத்தி விடுவார்கள். ஏனெனில், நான் கொண்டு செல்லும் புத்தகப் பையிலுள்ள கத்திரிக்கோல், ஒவ்வொரு பொருளையென்றாலும் தினமும் பதம் பார்த்து விடும்.

ஒரு வெள்ளியன்று எல்லோரும், தம், தம், பொருட்களிற் கவனமாய் இருந்தபடியால், என் கை கத்திரிக்கோலுடன் ஏங்கித் தவித்தது. அன்று சாயந்தரம் மூன்றரை மணிக்கு கடைசி வகுப்பு முடிய வேண்டுமாதலால், மூன்று மணியிலிருந்து, சரித்திர ஆசிரியை அவசரமாய்க் குறிப்புகள் தந்து கொண்டிருந்தார்.

என் மனம் அதில் ஈடுபடாமல் வேறெங்கோ சென்று கொண்டிருந்தது. திடீரென்று என் முன்னால் அமர்ந்திருந்த ஒரு மாணவியின் நீண்ட கூந்தல் என் கண்ணிற் பட்டு விட்டது. இதே ஏக்கத்திலிருந்த என் கை சட்டென்று பின்னலைப் பிடித்து இரண்டு அங்குல நீளமளவிற்கு வெட்டி விட்டது.

இன்றும் கத்திரிகோலுக்கு வேலைகிடைத்து விட்டது. என்ற பெருமிதத்தில் நான் ஆழ்ந்துகொண்டிருக்கையில், எனது செய்கையை எப்பொழுதென்றாலும் நேரிற்கண்டு பிடிக்க வேண்டுமென்று எத்தனையோ தினங்களாக ஆவலுடன் காத்திருந்த ஆசிரியையும் மாணவிகளிருவரும் நான் வெட்டியதைப் பார்த்து விட்டார்கள். உடனே ஆசிரியை தனக்குட் சிரித்து விட்டு, வகுப்பு மாணவரைப் பார்த்து, இன்று குறித்துக் கொண்டதை இவ்வளவு

டன் நிறுத்தி விட்டு, நான் ஒரு சிறு கதை கூறுகிறேன், கேளுங்கள் என்று கூறத் தொடங்கினார்.

''நான் முன்பு திருகோணமலையில் உள்ள ஒரு சிறு பள்ளிக் கூடத்தில் இரண்டாம் வகுப்பு ஆசிரியையாக இருந்தேன் அந்தவகுப்பில் ஒரு ஏழைச் சிறுவன் இருந்தான். அவனுடைய தகப்பன் பட்டாணிக்கடலை விற்பது வழக்கம். அப்படி விற்று வரும் தொகை வீட்டுச் செலவிற்குப் போதவில்லை. அதனால் அவனுடைய தாயார், அச் சிறுவனிடமும் சிறிது கடலையைக் கடதாசியிற் செய்த சுருளிற் போட்டுக்கொடுத்து, வகுப்பு முடிந்தவுடன், பாடசாலை வாசலில் வைத்து இவற்றை விற்று வந்தால் சீவனத்திற்கு உதவும் என்று சொல்லிக் கொடுத்து அனுப்புவதும், பையன் அவற்றை விற்றுச் செல்வதும் வழக்கமாகிவிட்டது. அதன்பின் அவர்கள் முன்பிலும் பார்க்கச் சிறிது நிம்மதியாய் வாழ்ந்து வந்தனர்''.

அதேபோல இந்த வகுப்பிலும், யாருக்காகிலும், தாமே விரும்பிச் செய்யும் தொழில் ஏதும் இருப்பின் பாடநேரங்களிற் தாமும் படியாமல், மற்றவரையும் கஷ்டப் படுத்தாமல், பாடசாலை முடிந்ததும் தலைவியைச் சந்தித்துத் தம் எண்ணத்தைச் சொல்லி உத்தரவு பெற்று அத்துடன் பெண்பிள்ளைகளான படியால், உள்ளேயே ஓரிடமும் நியமிக்கும்படி கேட்டு, அதில் ஆசைதீரும் வரை தாம் விரும்பிய தொழிலைச் செய்து வரலாம் என்று கூறிமுடித்ததும் அவர் என்னைப் பார்த்துச் ''சரிதானே'' நான் கூறியது பிரேமா! என்று கேட்டார். அதற்குள் எல்லாப் பிள்ளைகளும், என்ன நடந்ததென்றறிந்து என்னைப் பார்த்துச் சிரிக்கத்தொடங்கி விட்டனர் நானும் இவ்வளவு நாட்களும் செய்த செயல்களை எண்ணி வெட்கம் அடைந்ததோடு அன்றுமுதல் என் குறும்பையும் விட்டு விட்டேன்.


**சாந்தா நேயர்களுக்கு :**

கடிதம் எழுதும்போது தங்களுக்கு அனுப்பப்படும் பிரதிகளின் மேலுறையில் விலாசத்திற்கு மேலுள்ள எண்ணை மறவாது எழுதுங்கள். அதுதான் உங்கள் சந்தா எண். அது தங்கள் கடிதங்களை துரிதமாகக் கவனித்து ஆவன செய்ய உதவும்.

**சந்தா இலகா**

# அன்பு அன்னை

— நீர்வைமணி —

என்னைப் பெற்ற என் அம்மா
என்னை வளர்ப்பாய் என் அம்மா
என்னை விட்டுப் பிரியாயே
என்மேல் அன்பு கொண்டாயே
காலையில் தினமும் எழுந்தவுடன்
கட்டியணைத்துக் கொள்வாய்
காலைக் கையைத் தடவி என்றும்
கனிவுடன் பாடம் சொல்வாயே.

நேரமறிந்து உணவளித்து
நிறைய இன்மொழி பேசிடுவாய்
ஆரத் தழுவி அணைத்திடுவாய்
யாது குறையும் பொறுத்திடுவாய்
பள்ளிக்குரிய வயதினிலே
பட்சணம் தந்து அனுப்பிடுவாய்
பள்ளி முடிந்தது திரும்பியதும்
பட்சமுடனே அழைத்திடுவாம்.

துள்ளித் திரியும் வேளையிலே
தூக்கி ஒளிந்து சென்றிடுவாய்
துன்பம் மிகுந்த போதெல்லாம்
தூய இன்மொழி பேசிடுவாய்
இம்மை முழுதும் எனை வளர்த்து
என் துயரெல்லாம் போக்கிடுவாய்
இத்தனை செய்யும் உன்னைவிட
எனக்கு வேறு தெய்வமில்லை.

---

**கலைச்செல்வி விற்பனையாளர்கள்:**

சந்திரலெட்சுமி ஸ்டோர்ஸ்
15, பிரதான வீதி
மஸ்கெலியா.

எஸ். ஏ. முத்துச்சாமிப்பிள்ளை
369, நுவரெலியா வீதி
புசல்லாவை

# மலர்ந்தது ஒரு நிலா

செ. யோகநாதன்

## 4. ஏழாம்பிறை

தீல்பமகாராஜனைப் போல அரசகேசரி திண்தோள் வீரனாய் உலவப் போகிறானா? இராமனைப்போல அரக்கரைக்கொன்று வீரத்திருமகனாய் பவனி வரப்போகிறானா?

யமுனை ஏரியின் கரையிலும், அரச முற்றத்திலும், வயல் வெளிகளிலும் போர்ப் பயிற்சி ஓயாது நடக்கிறது. பரநிருப சிங்கனோடு அவன் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறான்.

அரச ஆணை எங்கும் கொடி கட்டிப் பறக்கிறது.

எல்லோரும் ஓய்வெடுக்கத் திரும்புகிறார்கள்.

“என்ன இராச்சியம்... போரும், படையும்' அரசகேசரி அலுப்புடன் வானவன்மாதேவியைப் பார்க்கிறான்.

கண்களில் தவிப்பு மின்னுகிறது

யௌவனத்தின் பிடியில் சிக்கி அவள் திணறுகிறாள்.

அவளது அரைகுறையாகக்குவிந்த குவளை மலர்க்கண்கள், மென்மையான பூககளால் தொடுக்கப்பட்ட சிகழிகையென்னும் மாலையைச் சூடிய இருண்ட கூந்தல், செந்நிறத்திரு மேனி, மூங்கில் தோள்கள், தளிர்க் கரங்கள், ஆடையின் கொய்சகத்தில் ஒளிரும் இடை.........

ஒரே மோகக்கிறக்கம்.

‘அவள் சீதையா?’

“என்ன மலைத்து நிற்கிறீர்கள்?”

அவன் தடுமாறிச் சுயநினைவடைந்தான்.

அவள்தான் பேசினாள்: நீங்கள் ஒரேயடியாகப் பயிற்சிக்களத்தில் நின்றுவிட்டீர்களாக்கும் என்று நினைத்தேன். இன்றைக்கு ‘மேகதூதம்’ படிக்கலாமா?”

அரசகேசரிக்கு ஒரு கணத்தில் களைப்பெல்லாம் மறைந்து போய்விட்டது.

அவளை, அவன் காதலித்த அந்த நாட்கள் நினைவுக்கு வந்தன.

சின்னஞ்சிறுவயதிலேயே தமிழையும், வடமொழியையும் நன்கு கற்றுத் தேறிவிட்டு காடும் மேடும் கவிதையுடன் மானசீகமாகப் புலம்பிக்கொண்டு திரிவான் அரசகேசரி.

ஒரு நாள், பொன்பூச்சொரியும் கொன்றையொன்றின் கீழிருந்து சிலப்பதிகாரத்தின் கானல் வரியைப் பாடிக்கொண்டிருந்த பொழுது தான் அவள் ஆவ்விடம் வந்தாள். அவள் அவனை அப்பொழுது பார்த்த பார்வை......

அவள், அவனின் காவியத்தலைவி ஆனாள்.

பரராசசேகரர் அரசகேசரியின் மனமுணர்ந்து அவளை அவனுக்குக் கலியாணம் செய்து வைத்தான்.

வட-தென்மொழி இலக்கியப் பரப்பிலே சின்னஞ்சிறுவயதிலேயே உலவி வரத்தொடங்கினான். அரசகேசரி அந்த இலக்கியங்களைப் படித்துக் கொண்டிருக்கும்பொழுது அவன் நெஞ்சம் எங்கெல்லாமோ பறந்து செல்லும் அரசகேசரி அந்தக் கணத்திலேயே உலகை மறந்து விடுவான். அவனது நெஞ்சம் நினைவு - உடல் அரசபோகம் அத்தனையையும் மறந்து மேலே மேலேபோய்க்கொண்டிருக்கும் பஞ்சாய் மிதந்து, பனியாய் உருகி அவன் காவியங்களோடு உறவாடி விட்டு உலக நினைவை அடையும் பொழுது அவனிற்கு ஒரு தவிப்பு; இனந்தெரியாத ஏக்கம்.

மனதின் தன்மைகளை புரிந்து கொள்வது மிகமிகச்சிரமம். அடி மனத்திடையே புகுந்து கிடக்கும் எண்ணங்கள் திடீரெனத்தலைதூக்கி மனிதனைப் படாத பாடுபடுத்துகின்றன. அந்த மனக்குரங்கின் மாயச் செயல் யாரைத்தான் விட்டது? மன்னர்பரராசசேகரரின் மருமகன் அரசகேசரியைவிட்டதா?'

அவனின் இலக்கியக் காதலில் அவனோடு சமனாக நின்றாள் வானவன்மாதேவி. ஆனாலும் அவளாலும் அவனைப் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த நினைவுகளுக்கூடாக அரசகேசரிக்கு அந்த நிகழ்ச்சி நெஞ்சிற்குள் அம்பைப்போல பீறிடுகிறது'

அந்த நிகழ்ச்சி.........

அது பலவருடங்களுக்குமுன்பு நடந்தது.

அன்றைக்கு யாழ்ப்பாண இராச்சியம் மகிழ்வில் மூழ்கியிருந்தது. அரசர் பரராசசேகரர் தம்முடைய முன்னோர்கள் கொண்டாடிவந்ததைப் போல ஆலயத் திருவிழாவை அன்று விமரிசையாகச்செய்தார். ஊரெங்கும் மகரதோரணங்கள்... அரகரா கோஷம்..

அரசகுடும்பம் கோவிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் அப்பொழுது அரச குடும்பத்துடன் திருமணம் செய்யாமலே உறவுவைத்திருந்த அரசகேசரியைமட்டும் காணவில்லை.

பரராசசேகர் அரசகேசரியை எங்கும் தேடிப்பார்த்தார். கடைசியில் அரண்மனையின் மூலையொன்றில் தன்னை மறந்து 'அரசகேசரி' 'இரகுவம்சத்தைப் படித்துக்கொண்டிருப்பதை அவர் கண்டார்.

மறுகணம் 'இரகுவம்ச' ஏடுகள் புற்றரையில் பொத்தென்று வீழ்ந்தன. அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்துச் சிதறின.

''உனக்கு எப்பொழுதுமே இது தானா வேலை? இப்படியானால் நீ பரந்து கிடக்கும் தமிழ் இராச்சியத்திற்கு என்ன செய்யப்போகிறாய்? நீ காளிதாசனைப் போலக் காவியத்திலா வாழப்போகிறாய்? அல்லது எல்

லாள மன்னனைப்போத்தலால் வீர, பெருந்தன்மையால் இத்தாயகத்தை வாழவைக்கப்போகிருயா?"

அவர் போய்விட்டார்.

ஆனல் அவர் கிளப்பிவிட்டுச் சென்றகேள்வியோ, ஓமாக்கினிபோல நெஞ்சினுள் அடர்ந்து பரவியது......

∴ ∴ ∴

மீண்டும் அவள்தான் வருகிருள்.

நாணம் கண்களில் தொனிக்க, செங்கனிவாயை இறுகமூடிய படியே அமுதமதியத்து அலர்நிலாவாய் அவள் அவன் முன் சுடரொளியாகின்ருள்.

ஏன் இந்து மதியென்று என்னைச் சொல்லப்போகிறீர்களோ பிரபு......? அவள் குரலில் அவன் கள்ளுண்ட மதுகரமாளுன்.

நயனமலர்கள் அரைகுறை மயக்கத்தில் ஆழ்கின்றன.

உள் மனதின் உள்ளே உள்ளொளி சுடரிடுகிறது.

இந்துமதி!

அவள் இரகுவம்சக் காவிய நாயகியருள் ஒருத்தி! அவளைப்பற்றிக் காளிதாசன் எவ்வளவு அழகாகப் பாடியிருக்கிருன்: 'அவள் கழுத்து சங்கு, கூந்தல் கருமணல், வயிற்றின் மடிப்பு வளைந்த செழிய திரைகள், கண்கள் கயல், பற்கள் முத்து... அவள் ஒரு கோமளக்கொடி, சிந்துர திலக மணிந்த இந்துமதி ஒரு நிலாப்பிஞ்சுதான்...?'

நெஞ்சுக்குள் ஏதோ ஒரு தவிப்பு.

வானவன்மாதேவியின் சிலம்பு கோபத்தால் குலுங்க அவன் நினைவு மண்ணிற்கு வருகிறது. குரல் கெஞ்சுகிறது. "மாதேவி நீ உண்மையிலேயே இந்து மதிதான்!"

உடல் வளைவு நீங்காத பிறை போன்ற அவள் நெற்றியில் வேர்வை துளிர்த்திருக்கிறது. எள்ளுப் பூ போன்ற அவள் மூக்கில் அணிந்திருந்த மூக்குத்தி வைகறைப் பொழுதில் தோன்றும் விடிவெள்ளி போல ஒளிர அவள் சிரிக்கிருள்,

மீண்டும் அவன்தான் பேசுகிருன்: "தேவி, காளிதாசன் ஓரிடத்தில் ஆபரணஸ்யாபரணம் என்று சொல்லியிருக்கிருன். அதைப் போல ஆபரணங்கள் உனக்கு அழகை அழிக்கவில்லை. நீதான் ஆபரணங்களை அணிந்து கொண்டு அவைகளுக்கு அழகைக் கொடுக்கிருய்...?

அவள், முகத்தில் நாணம் சிந்தத் தலைகுனிகிருள். செங்கழுநீர் அளகக்காடு அவள் முகமலரை மூடித் திரையிடுகிறது.

அவன், அவள் கூந்தலை வாரி அள்ளிப்பின்னே தள்ளி அவள் கன்னங்களில் கரங்களை இணைத்து...

பரவசம்.

இந்துமதி!

அவள் அனிச்சப்பூ மேனி நடுங்குகிறது. மோகமான ஒலியூடே குரல் வருகிறது: "பிரபோ! உங்களுடைய இந்துமதிக்கு மகன் பிறக்க......" அவனுக்கு அதுகேட்கவில்லை.

சுதக்கிணை—
இந்துமதி—
சீதை—
நினைவு செத்துவிட்டது.
மலர், இதழ்களை விரிக்க—
துடி துடிப்பு.
உத்வேகம்.

கதிரொளியைக்காண ஏக்கம்.

வானவன் மாதேவிக்கு வயிற்றுள் சிசு புரளும் இன்பக்குதுகுதுப்பு.

அவனே?

ஒல்லாம்து தேசத்தின் உன்னத தயாரிப்பான


ஏறஸ்

றேடியோவுக்கும்

நம்பிக்கையான சேவைக்கும்

றேடியோ மனுயலை

நாடுங்கள்.



என்ன உயர்தரம்

என்ன
நம்பிக்கையான
சேவை

அதனால்தான் எல்லோரும் றேடியோ மனுயலை நாடுகின்றார்கள.
றேடியோவுக்கும் அதன் உப உறுப்புகளுக்கும் வடமாகாணத்தில் நற்பெயரும் புகழும் பெற்றவர்கள்.
ஓர்முறை எங்கள் காட்சிச் சாலையையும் சேவை இலாக்காவையும் பார்வையிடுங்கள்

நம்பிக்கையான சேவைக்குத் துலங்கும் சின்னம்

றேடியா மனுயல் 23/4, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்.

## 5. அரை நிலா

பூந்தாதுகள் நிலத்தில் சிந்துகின்றன.

அவன் அனனுமதனைப் போல— வாழ்க்கையில் யாதும் உடன் பாடு இல்லாதவனாய் திரிகிறான்.

போர்ப்பயிற்சி; உணவு; உறக்கம்

ஓய்வு— ?

வானவன் மாதேவி அவனுக்கு இருளிடையே ஒளிசிந்தும் கலங்கரை விளக்கு. ஆனால்—

விடியாத பொழுது.

பரராசசேகரர் ஒருநாள் அவனுக்குப் போர்ப் பயிற்சியினின்றும் விடுதலை கொடுத்து விட்டார்: "நீ உன் மனம்போனபடி எதை வேண்டுமானாலும் செய்... உனக்கு வேண்டிய வசதிகளை நான் செய்வேன்"

எல்லாம் அந்தக் குறும்புக்காரியின் வேலை. தந்தையின் கடுமையை அவள், தன் கெஞ்சலால் நொருக்கி விட்டாள்.

அவள் அவனின் ஆதாரம்.

கால்கள் நீரைக் கலக்குகின்றன.

மனது, காரணம் அறியாமல் துள்ளிக்குதிக்கின்றது.

மேலே... மேலே நினைவுபோக—

தென்றல் வந்த திக்கை நோக்கி முகம் திரும்புகிறது.

மெல்லிய பனித்துளிகள் சிந்தும் காலம்.

அவனது கனவு நடந்து வருகிறது.

அவளது தாமரை மலர்ப் பாதங்களின் மாவண்ணத்தில் புல்லின்

# S SINNATHURAI & BRO,




786 கல்கி பீடி

Importers & Exporters.
Sole Agents for

**786 Kalki Beedies**

நீங்கள்

உல்லாசமாகப்
புகைப்பதற்கு

## 786 கல்கி பீடிகள்

**திறம் பீடிப் புகையிலை, பீடி இலை.**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

**39, K. K. S. றேட் : : யாழ்ப்பாணம்.**

கிளை:
44, 3ம் குறுக்குத் தெரு : : கொழும்பு.

தொழிற்சாலை:
118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

பனி நீர்கள் வண்ணமற்ற கோலம் வரைகின்றன, கற்பவதியான அவள் மோகினி போல எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இதயத்தில் இனிக்கிறது. அவள் சௌந்தர்யங்களின் தாய், மென்மையின் மறு பெயர் பெண்மை என்பதை அவள் பூவுடல் கண் முன்னே காட்டிச் சிரிக்கிறது.

அவள் கைகளில் எழுதாத ஏட்டுக் கட்டு; எழுத்தாணி.

முகத்தில் இன்ப வேதனை தவழ அவன் பக்கத்தில் அவள் கால்களைக் நீட்டிக் கொண்டு அமர்கிறாள்.

விழிக்கடையில் செவ்வரிகள் தோன்றி மறைகின்றன. மைவிழிகளின் மணிப் பாவையிலே அழகு கொலு அமைத்து எழில் கூட்டும் பணியில் ஓயாது உழைக்கிறது.

''மாதேவி... இந்த நேரத்தில் இங்கே ...''

மாதேவி கலகலவென்று சிரிக்கிறாள்: ''ஏன் மகனில் அவ்வளவு கவனமோ ?''

அவள் கன்னத்தை அவன் செல்லமாக நிமிண்டுகிறான்.

''பிரபு''

''மாதேவி''

''அதோ பாத்தீர்களா, சந்திரனை ரோகிணி நெருங்கிக்கொண்டே போகிறாள்... அதைப்பார்க்கும் பொழுது எனக்கு நெஞ்சு துடிக்கிறது பிரபு. இக்காட்சியை காவியமாக்கி நீங்கள் பாட... நான் எழுத, ஆ !'

அவள் அவன் மடியில் தலையை வைத்துக்கொண்டு, கந்தர்வக்கன்னியைப்போல தன்னை மறந்துமிழற்றுகிறாள் ''பிரபோ! நீங்கள் இதைப் பாடினால்...''

அவள் வதனம் ஏக்கத்தின் ஒளி காட்டி அவனைக் கெஞ்சுகிறது.

தவிப்பு.

''மாதேவி''

''பிரபோ''

''......''

சீதமலரின் குளுமையில் நெஞ்சம் தோய்கிறது.

சிலைகள் அசையவில்லை.

உலகம் இயங்குவதை மறந்தாற் போன்ற அமைதி.

அவள் குரல் அமைதியினூடே மெல்ல ஒலிக்கின்றது: ''பிரபோ ! நிலவின் கதிரில் குளித்துக் கிடக்கும் இக்காட்சியைப் பார்க்கும் பொழுது எனக்கு காவியம் பிறக்கும் போல இருக்கின்றது. அதோ! நீலத்தடாகத்தில் செங்கொழுந்துகளும், வெண் கொழுந்துகளும் எரிகின்றன. மூடிய இதழ்களின் முனையால் அவை வானைக காட்டி ஏதோ ரகசியம் பேசுகின்றன. உயர்ந்து நிற்கும் கமுக மரங்கள் தங்கள் பசிய குருத்துக்களை மேலே காட்டி என்னசொல்கின்றன? வயற்பரப்பிலே பீறிட்டெழும் நெற் பயிர்களின் உயிர்க்கரங்கள் வானகத்தை நோக்கி ஏன் மோனத்தவம் செய்கின்றன ? அவை மனிதனை உயர்ந்து அழியாது வாழ் என்று தம் கரங்களை உயர உயரக் காட்டி உபதேசிக்கின்றனவா ?''

நெஞ்சின் கபாடம் திறக்க, மெல்லிய தென்றல் மனோகரமாக வீசுகிறது.

பரவசமாய் நிலைத்துவிட்ட நித்திய நிலை.

கண்கள் காட்சியை விழுங்க மாதேவியின் சொற்கள் அவனை ஆகாயத்திற்கு அள்ளிச் செல்கின்றன.

நெஞ்சம் விம்மித் தணிகிறது.

விசித்திரமான கலகலப்பால் இதயம் கானமெழுப்பிடத் துடிக்கிறது.

காளிதாசனின் வர்ணனை, காட்சியின் உருவாய் கண்மணிப்பாவையுள் நிறைய நிறைய—

வாய் துடிக்க—

பிரபஞ்சகானம் நெஞ்சுள் உருகிப் பிழம்பாய் வழிய ...

(கரும்புகளையும்) வாழைகளையும் தொட்டு வளைந்து நிற்கும் நெற்கதிர்கள் அரிவாளாயும்; பாரிய நெடிய குலையையுடைய கமுகின் மீது போய் விழுந்த கதிர்கள் பாக்குக் குலைகளைப் பிடுங்கும்படி கொழுவிய தோட்டியைப் போலவும் ......?

''வயல்ப்பரப்பிலே பச்சைக் கதிர்களுக்கூடே குவிந்து நிற்கும் செந்தாமரையும், அலர்ந்து நிற்கும் குமுதமலர்களும் நெருப்புச்சுடர்களைப் போல தென்றலில் அசைந்து சிரிக்கவும்......'

எல்லாக் கபாடங்களும் திறக்க — இதயமே வெட்ட வெளியானது

அந்த வெட்டவெளியில் அரூபக் குரலொன்று அரும்புகிறது.

நெஞ்சு துடித்துச் சிதறப் போகிறதோ?

அவள் தழுவிய கரங்கள் விலகவில்லை.

டெலிபோன் நம்பர் 671, டெலிகிராம் ''பேல்ஸ்''

**உமர் பிரதர்ஸ்**

எங்களிடம் உயர்ந்தரக O B மார்க் ஸ்பிரிட்டும்
பள்ளிக்கூட உபகரணங்களும்
எனுமல், கிளாஸ், சாய்ப்புச் சாமான்கள்
மற்றும் இதர சாமான்களும்
நிதானமான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

உங்களைத் திருப்தி செய்வதே எங்கள் நோக்கம்.

**உமர் பிரதர்ஸ்**

**44, பெரியகடை, யாழ்ப்பாணம்.**

புதிய மலர் ஒன்று குளத்தில் இதழ் விரித்து மலர்கிறது.

'பறவை யொன்று சிறகையடித்த படி, வளர்ந்து, கருமுதிர்ந்து பச்சைக் கதிரவிழ்ந்து செம்பவளக் குலே காய்க்கும் நெற் கதிர்களின் மேல் பறந்து சென்று மறைகிறது ......'

'கரும்பின் தலையில் குருவி உட்கார்ந்து களைக்கூத்திட, சேல்கள் நெற்கதிர்களை தழுவி விழும்......'

இனி நெஞ்சு தாங்காது—

அவன் மேலே மேலே போய் அண்டவெளியில் நின்று கதறினன்.

எலும்புகள் உருகின.

இதயம் கரைந்தது.

தசை நிணநீராகி ஆனால் ஓடாமல் உறைந்து.........

அந்த இனிமையான நிலையில்...

காட்சியோடு கண்கள் இணைய நெஞ்சத்தோடு காவியம் அணைய இதுவரை அவனை ஆட்டிப் படைத்த அவனால் உணரமுடியாத அந்தக் கனவை உணர்ந்துவிட்ட வெறியிலே அவன் பாடிக்கொண்டேயிருந்தான்...

அவள் எழுதிக்கொண்டேயிருந்தாள். ஏடுகள் நிறைந்தன.

கவிதைத்தேவி அவனேடு ஒரேயடியாய் இணைந்துபிணைந்தாளோ?

களைப்பை மேவிய வெறி; படைப்பின் திமிர்; சிருஷ்டியின் அகோரப் பசி.

காவியத்தின் கரு பிறந்தது.

பாட்டு முடிந்தது.

சூல்கொண்டிருந்த வானம் நிர்மலமானது.

நெஞ்சின் ஏக்கமெல்லாம் எங்கோ ஓடிவிட்டன.

தெளிவா?

'இதை நான்... நான்... நான் தான் பாடினேனு?

ஆனாலும் பிரசவ வேதனை தீர்ந்த நிறைவு.

## 6. நிறைநிலா

அந்தக் கவிதைகள்...

"மாதேவி மீண்டும் அதைப்படி.

மாதேவி, தான் எழுதிய, அவன் வெறியில் பாடிய பாட்டைப் படிக்கிருள்.

'தண்ணெனும் நீர்மையில் தலைதனை
    தடங்கதிர் தழீ இய
வண்ண நீலத்தொடரும்
    பவிழாய் மலர்க்குமுதம்
வண்ண மாநில மடந்தை தன்
    மகமக வினைமைக்
கண்ணிநெற்றி வாய்
    முத்தமிட்டன வெனக்கவினும்'

இனிமையான பாட்டு! அவன் முன்னே நிகழும் காட்சியை அவன் பாடியிருக்கிருன். ஆனல் அந்த உவமை—

எல்லாமே—

அவைகளை அவன் எங்கே படித்தான்?

சற்று முன்பு கூட...

காளிதாசனின் கவிதையின் சாயலா அவை?

மீண்டும் குமைச்சல்,

மனம் ஆவேசமாய் குமுறுகிறது. தெளிந்த நீரின் ஊடே தெரியும் தங்கப் பிளம்பைப்போல மனதின் சிக்கலூடே புதிரின் விடைகள் அவிழ்கின்றன.

'ஏன் அரசகேசரி சிந்திக்கிருய்? உன்மனம் இப்பொழுது இலேசாகியிருப்பதற்குக் காரணம் என்ன தெரியுமா? சின்னஞ்சிறுவயதிலேயே உன் உள்மனத்திற்குள் கற்பனைத் துடிப்பு நிறைந்திருந்தது. அதை வளர்க்கும் விதத்தில் நீ இலக்கியங்களைப் படித்தாய்... நீ விரும்பிப்படிக்கும் காளிதாசனின் இரகுவம்சம் உன் மனதின் உள்ளே வச்சிரம் போல் உறைந்துவிட்டது. ஆனால் அதை நீ உணரவில்லை. உன் மாமா உன் இலக்கிய வெறியை ஒரு நாள் திட்டினர். அது உன்மனதில் ஆழப் பதிந்து உன்னையே மாற்றியது. பல விடயங்களைச் செய்யாதே என்று யாராவது தடுத்தால்தான் அதைச் செய்வதற்கு மனிதன் துடிக்கிருன்'

'உன் மாமா உன்னைப் பார்த்துக் காளிதாசனைப்போல நீ காவியத்திலேயா வாழப்போகிருய் என்று கேட்டார். அன்றிலிருந்து நீ காளிதாசனைப்போல வாழவே துடித்தாய். ஆனால் உன் மன உதைப்பை உன்னால் உணரமுடியவில்லை. அதன் சாயையைத்தான் நீ மங்கிய கோடுகளாய்க் கண்டாய். உன் மனைவியை நீ இரகுவம்சக் காவியநாயகிகளாய்க் கண்டு மயங்கினல்.'

'உன் ஆசைக்கு எண்ணெய் வார்த்தவர் பரராசசேகரர். அந்த ஆசையைச் சுட்டிக்காட்டி உன் உள்ளப்புதிரை அவிழ்த்து...உன் ஆசைத் திரியை எரியவைத்தவள் வானவன் மாதேவி. அவள் உன் கனவிற்கு ஆக்கம் தந்தவள்'

'அரசகேசரி... நீ சாகமாட்டாய். நீ வாழப்பிறந்த கவிஞன். நீ வாழ்ந்து நிலைக்க ... காளிதாசனின் காவியத்தைத் தமிழில் பாடு. சரித்திரம் உருவாக்கிய அரசகேசரி சரித்திரத்தை உருவாக்கியே தீருவான் என்ற உன் சபதத்தை நீ நிறைவேற்று.'

மனதில் தெளிவும் ஒளியும் பிறந்தன.

அவன் இரகுவம்சத்தைத் தமிழில் பாடப்பாட அவள் எழுதிக் கொண்டே இருக்கிருள்.

அவள் சுடர். அவன் விளக்கு. அவர்கள் காவிய ஒளியை ஏற்றுகிருர்கள்.

ஆனல் அது அழியாச்சுடர்.

அன்றைக்குத் தமிழ் மறவர்கள் தோள்நிமிர்த்திப் பெருமையுடன் விழாவெடுத்தனர்.

கும்மியடித்த தமிழ்ப்பெண்களின் தளிர்ப்பாதங்கள் புதியவேகத்தில் குதித்தன. சதங்கையொலி எங்கும் சிதறியது.

எங்குமே மகிழ்வு... மகிழ்வு.

திருவாரூர்.

இளங்கோவிற்குப்பின் காவியம் பாடிய கவிஞனைக்காணப் புலவர்கள் திரண்டிருந்தனர்.

அரசகேசரி 'இரகுவம்ச'த்தைக் கையிலெடுத்துப் படிக்க ஆரம்பித்தான்.

ஏடுகள் புரள, இதயங்களும் காவிய வேட்கையில் ஊறித்திளைத்து விம்முகின்றன.

நேரமலர்கள் வாடுகின்றன.

அரங்கேற்றம் முடிந்தது.

வழியில் விழிவைத்துக் காத்திருக்கிருள் வானவன்மாதேவி.

நிலவின் கதிரொளியில் அவள் முகம் அலர்கிறது.

முழுநிலா!

அவனும் வந்துவிட்டான்:

அவளது துடிதுடிக்கும் பவள இதழ்கள்...

அரசகேசரி ஆசையுடன் சென்று அவளது மலர்முகத்தைக் கரங்களால உயர்த்தி...

''பிரபோ! எனது இதழ்கள் காவியநாயகியரின் இதழ்களைப்போல கோவைக் கனியல்ல. கடித்துவிடாதீர்கள்'

நிறைவின் கலகலப்பில் அவர்ள் இணைந்தனர்.

முழுநிலா மேகத்திரையுள் மறைந்து சிரித்தது.

(நிறைவு பெற்றது)

வெளிவந்துவிட்டது!

# கதைப் பூங்கா

பேராதனைப் பல்கலைக்கழகத்து மாணவர்களால் புனையப்பட்ட
பன்னிரண்டு கதை மலர்கள்.

தொகுப்பாசிரியர்கள் :

க. குணராசா

க. நவசோதி

முன்னுரை :

க. கைலாசபதி B. A. (Hons).

விலை ரூபா 1-50.

விற்பனையாளர்கள் :

பூபாலசிங்கம் புத்தகசாலை

பெரியகடை, யாழ்ப்பாணம்.

பாரி நிலையம்

பிராட்வே :: சென்னை—1.

# என்னை உருவாக்கியவர்கள்

—'நாவேந்தன்'—

எண்ணத தொட்டிலில் உருண்டு, புரண்டு, தத்தித், தளர்நடை பயின்று, வளர்பவன் கலைஞன். இயற்கையின் அசாதாரண தூண்டுதல் அவனின் இயல்பாகி, வாழ்வின் சூழ்நிலைகளினால் பாதிக்கப்பட்டுப் பருவமடைகிறது. அந்த 'பருவப்போதை'யுணர்வில் அவன் புதிய பிரபஞ்சத்தைப் படைக்கும் கலைஞனாகிறான். எழுத்தாளன் கலைஞன் அவன் எழுத்தில் அவனாகப் பரிணமிக்கிறான். அந்தப் பரிணமிப்புக்கு நிகழ் காலத் தேவைகளுக் கடிமையான என்னென்ன காரணங்களையோ கற்பிக்க முனைந்தாலும் கலைத்தாய்மையுணர்வுக்கு களங்கம் வந்துவிடாது.

கிராமப் பள்ளிக்கூடத்தில் இரண்டாம் வகுப்புப் பையனாகப் படிக்கும் போதே எனக்கு அசாதாரண கலைத் தாகமிருந்தது. பெரிய எழுத்து மதன காம ராசன் கதையை அந்தச் சின்னஞ் சிறுவயதில் உரத்த வாசிப்புப்பாடமாக வீட்டில் நிகழ்த்த அதனை ஆவலோடு கேட்டு மகனின் படிப்பறிவைப் பாராட்டிக் கொண்டவன் கையெழுத்துப் போடவும் கற்றுக் கொள்ளாத என் அன்னையார்! என்னை உருவாக்கியவர்களில் முதலிடம் என் அன்னையாருக்குத்தான்! பள்ளிப் படிப்பற்ற அவரது இலக்கியப் பற்றும் எனக்கு ஆதர்சமாக ஒளி காட்டுகிறது.

தமிழில் எட்டாம், ஒன்பதாம்வகுப்புகளில்பயின்று சித்தியடைய உதவிய திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையும் அந்த நாட்களில் அதனோடு தொடர்பு கொண்டிருந்த ஆசிரியர், மாணவர்களும் எனது எழுத்துத் தாகத்திற்கும் தூண்டுகோளாயிருந்தனர். சிறந்த சொற்பொழிவுகளை ரசிக்கவும், மகாகவி பாரதியார் பாரதிதாசன், கல்கி புதுமைப்பித்தன் முதலான கவிஞர்களையும் இலக்கிய ரீதியாக தெரிந்து கொள்ளவும் உதவியது இந்தச்

சூழலே. என்னை உருவாக்கிா சூழல் இஃதெனினும் பொருந்தும்!

என்னுடைய சொந்த ஊரான புங்குடுதீவில் என் மாணவப் பருவத்தின பெரும் பகுதியைச் செலவழிக்குமிடமாக விளங்கிய இளைஞர் கழக வாசிகசாலையும், அஃதமைந்துள்ள அழகிய சூழலும் எழுத்துலகப் பரிச்சயத்துக்கு என்னை இழுத்துச் சென்று எதையேனும் எழுதியே ஆகவேண்டுமென்ற அவசியத்தை என்னிலாக்கின.

கலைஞன் வெறும் ஏட்டுப் படிப்பினுல், ஆசான்களின் புகட்டுதலினுல் ஆபவன் அல்லன். அவனையுருவாக்குவதில் எந்த இயற்கை வலிவுமிக்க சக்தியாக உதவுமோ அஃதே என்னை யுருவாக்குவதில் அன்றும் உதவியது இன்றும் உதவுகின்றது.

தமிழில் எஸ். எஸ் ஸி வகுப்பில் சித்தியடைந்துவிட்டு தமிழகத்தில் எதையோ படிக்கப் போய் எப்படியோ கழித்த ஒரு சில மாதங்களில் யான் கண்ட' கற்ற படிப்பனைகளும், அவற்ருேடு தொடர்பு கொண்டவர்களும் என்னை உருவாக்கியவர்களின் பட்டியலைச் சேர்கிருர்கள். இங்கே தான் ''நாவேந்தன்'' என்ற என் புனைபெயரையும் 'தேடிக்' கொண்டேன்.

1949 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் சில மாதங்கள் ''வீரகேசரி''ப் பத்திரிகையில் 'புரூப் ரீட'ராக வேலைபார்த்தபோது பெற்ற அனுபவங்கள், தெரிந்துகொண்ட நண்பர்கள் என்னையுருவாக்க உதவினுர்கள். அதற்குப் பின்னர் ஏதோ எழுதத் தொடங்கி முதற் சிறுகதையொன்றுக்காகவேஊரில் 'சண்டைக்கார'னுகி நீதி மன்றம் வரை போய்த் திரும்பும் வரை நான் கண்டுகொண்ட கொடுமைகளும், அரக்கத் தனமான 'மனித'ச் செயல்களும் என்னை யுருவாக்கின.

கட்டுரைகளுக்காகப் பேனுவை நாட்டத் 'தொடங்கிய போது''இந்துசாதனம்' ஆசிரியராயிருந்து காலஞ்சென்ற மதிப்புக்குரிய தமிழறிஞர் பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தர் அவர்களும், கதைகள் எழுதிய போது ''சுதந்திரன்'' ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அவர்களும் அளித்த ஆதரவும் அன்பும் பெரிதும் என்னையுருவாக்கின. இலக்கியரீதியில் என்னை யுருவாக்கியவர்களைக் குறிப்பிடும் போது, அரசியல் வாதிகளைக் குறிப்பிடுவது மரபன்றெ

னினும், காலஞ்சென்ற, தமிழர் தலைவர் திரு. கு. வன்னியசிங்கம் அவர்களின் நட்பும் அன்பும் உண்மையான மொழிப்பற்றினை எனக்கு கோடிட்டுக்காட்டியதைக் குறிப்பிட வேண்டும்.

மொழியுணர்வைப் பொறுத்த வரை 'மூர்க்கத்தனமானவன், என்று சிலர் என்னைச் சுட்டிச் சொல்வதற்குக் காரணமாயமைந்தவர்கள் இவர்கள் என்று சொல்வதில் எனக்குப் பெருமை; தமிழ் நலியச் சகியாதவர்கள் மேற்கண்ட பெரியார்கள்.

இயற்கையும், ஆசான்களும் தவிர என்னை உருவாக்கியவேறுஞ் சில 'சக்தி'களைக் குறிப்பிடவேண்டும். 'இலக்கிய விமர்சனம் பண்ண வந்து 'நாவேந்தன் ரொம்பப் பணக்காரன்' என்ற மாதிரி எழுதித் தமது மேதாவித் தனத்தைக் காட்டிக் கொண்டிருக்கிற நண்பர்களு மிதனை யுணரவேண்டும். அன்றும் - இன்றும் நானனுபவித்த, அனுபவிக்கின்ற வறுமை, அதன் தோழமை என்னை யுருவாக்குகிறது என்பதை நான் மறைக்கக்கூடாது! எப்படிப்பட்ட சூழலில் எழுத்தாளனிருக்க வேண்டுமென்று எண்ணினேனோ, அதற்கெதிராகன சூழலாக வந்து வாய்த்துவிட்ட என்புத்தகமும் உறவினர்களும் என்னையுருவாக்கியவர்கள். பாடசாலை மாணவனாக இருந்தபோதும், உழைப்பாளியாக உள்ள இப்போதும்' கண்டவுடன் 'பத்திரிகை வாங்கப் பணம் தாருங்கள்!' என்றால் 'நீ இன்னும் திருந்த வில்லையோ? என்று கேட்டுச்சிரித்தபடியே பணம் தருகின்ற என்தந்தை யாரும், என் எழுத்துக்களைப் பிரதி செய்தும், அடிக்கடி புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கித் தந்தும் உதவுகின்ற என் சோதரர் துரைசிங்கமும் என்னை உருவாக்கியவர்கள்தாம்! வாழ்வு என்ற நீண்ட யாத்திரையில் பல்வேறு துருப்பு முனைகளைக் காணச் செய்துகாட்டிய இலக்கிய ரசனையுள்ளம் படைத்த என் ஆண்-பெண் நண்பர்களும் என்னையுருவாக் கியவர்கள்.

கட்டுரை, கவிதை, கதை நாடகம் முதலாம் பல்வேறு துறைகளிலும் பன்னிரு ஆண்டுகளுக்கு மேலாக எழுதிவருகின்ற என்னை, நெஞ்சத்தில் நினைத்துக் கொண்டுள்ள அத்தனை வாசகர்களையும் பற்றிய எண்ணமும் என்னையுருவாக்குகின்றது. வாசகர்கள் அளிக்கும் அன்பு' என்ற எழுத்தாளன் பெறக்கூடிய, ஆகக்கூடிய சன்மானம் ஒன்றே என் சோம்பலையும், சோர்வையும் விரட்டி இப்பொழுதும் எழுதவைக்கிறது. இவைகளும், இவர்களுமே என்னை உருவாக்கியவர்கள்!

## தமிழ் மொழிப்பயிற்சி DESK WORK IN TAMIL

(வித்தியாபகுதியாரின் புதிய பாடத்திட்டப்படி எழுதப்பட்டது)

| | | |
|---|---|---|
| 2 ஆம் | வகுப்பு | 1-00 |
| 3 ஆம் | ,, | 1-25 |
| 4 ஆம் | ,, | 1-25 |
| 5 ஆம் | ,, | 1-80 |

# கலைவாணி புத்தக நிலையம்

பாடநூற் பிரசுரிப்பாளர்

**10 மெயின் வீதி, யாழ்ப்பாணம்.**

**கிளை:**

*130, திருகோணமலை வீதி, கண்டி.*

தொலைபேசி: 7196. கண்டி

தொலைபேசி: 221. யாழ்ப்பாணம்

---

**உங்கள் பற்களை நோயிலிருந்து**

காப்பாற்றுங்கள்

ஆயுள்வேத முறையில் தயாரான

## ஸ்ரீ அம்பிகா

# கல்நார் பற்பொடியை

உபயோகியுங்கள்

பற்கூச்சம், முரசு கரைதல், கிருமி அரித்தல், முதலியவற்றைத் தடுக்கின்றது; நறுமணம் கொண்டது.

ஒரு பைக்கற் விலை 15 சதம்

இலங்கை முழுவதற்கும் விற்பனையாளர்கள் தேவை.

விபரங்களுக்கு:

## ஸ்ரீஅம்பிகா ஆயுர்வேத வைத்தியசாலை

வட்டுக்கோட்டை.


# நான்கண்ட கவியோகி

## "இவன்"

பூரணஞானம் பொலிந்த நன்னாட்டின் அருந்தவப் புதல்வர் அருட்பெரியார், புனிதமுனிவர், கவியோகி சுத்தானந்த பாரதி அவர்களுடன் நான்கு நாட்கள் கூடிப் பழகும் பாக்கியம் சென்ற ஆண்டின் இறுதியில் எனக்கு கிடைத்தது. அவருடைய அருள் வெள்ளத்தில் மூழ்கி, அன்புப் பெருக்கில் களித்தேன்.

பூர்வ ஜன்மத்தில் விட்ட குறையால் தொட்டுக் கொண்டு பிள்ளைப் பருவத்திலே ஆத்மசாதனம் செய்து, ஆத்மானுபவங்களை எளிதாக அடைந்தார். இந்த யோகதீரரின் உள்ளமெல்லாம் தெய்வபக்திப் பெருக்கமே

கட்டுரையாளர் 'இவன்' வவுனியா மாவட்டத்தில் பொது மராமரத்து என்ஜினியராகப் பணி புரிகின்றார். கவியோகியிடம் அளவு கடந்த ஈடுபாடுடைய இவர் தன் வீட்டிலேயே அவரைத் தங்கச் செய்து உபசரித்தவர். அப்போது எடுக்கப்பட்ட படம் இது.



நிறைந்துள்ளது. அவர் 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வை யகம்' என்று, பொய்மையின் நின்று மெய்மைக்கும், இருளி னின்று ஒளிக்கும், துன்பத்தின் நின்று இன்பமான அமரத்தன் மைக்கும்- அனைவரும் உலகமும் உயரவேண்டு மென்று விரும்பு கின்றார். அந்த விருப்பத்தின் நிமித்தமாகவே உலகு அனைத் தும் சென்று அருட் சத்தியைப் பொழிகின்றார்.

முதலாவது நாள் (31. 11. 61)ல் செட்டிகுளமக்கள் அன்பு பெருக் கெடுத்தோட பெரிய வரவேற்பு அளித்தார் கள். அதில் அவர் பெரிய கவியா கக் காட்சி யளித்தார். தமிழன் தலைநிமிர்ந்து நடக்க, பெற்ற தாயின் மனங்குளிர, சொந்த வுரிமையை வெல்ல, காலவேகத் தினைச் செயிக்க திசை யெங்கும் தமிழ்க் கொடிதிகழ இங்கே விண்ணரசைக் கொண்டுவர வழி சொன்னார். "நல் வேலையே சூழநாளு மிருப்பாயேற் பொல் லாவினை யெல்லாம் போம்" என ப்பகர்ந்தார். "உள்ளொன்றி னுலே யுலகொன்று மாதலினல் உள்ளத்திலொற்று மையை யூன்று" என்ருர்.


பின்பு வவுனியா மாவட்ட மக்கள் நகரசபை மண்டபத்தில் வரவேற்பு அளித்தார்கள்- அதில் பெரும் பக்தனுக காட்சிய ளித்தார். பக்தியால் இறைவனை அடையலாம், நேசம் பதிந் துள்ளே நின்றுருகி நெஞ்சாரப் பேசினுன் பேசும் பிரானை ஆரவ முடன் கூவுக. உள்ளன்பாலும் மனச்சாட்சிக்கு விரோதமில் லாத உண்மையான சன்மார்க்க வாழ்வாலும் வழிபடுக" என் ருர்.

**2. 12. 61.** யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்தில் திவ்ய ஜீவன சங்கம் அளித்த மாபெரும் வரவேற்பில் ஓர் பூர ணயோகியாகக் காட்சியளித் தார்.

யோகமென்றால் வாழ்வை யும் உலகையும் வெறுத்தோடும் வறட்டுத்துறவன்று, உண் மைப் பொருளை உள்ளும் புற மும் பொருந்தி, அன்பும், அரு ளும், அமைதியும் அழகும், இன்பமும் கூடிய பூரண வாழ்வு வாழ்வதே யோகமென்றார். வளர்ந்து வரும் விஞ்ஞான அறிவு விழிப்படைந்த சமூக முன்னேற்ற சம்பந்தமான அறிவு, உலக ஒருமையில் ஏற் பட்டுள்ள சிரத்தை ஆகிய இவைகளே இன்றைக்கு ஆன் மீக லட்சியத்தில் அவநம் பிக்கைப் பிரச்சனையை உண் டாக்கி விட்டிருக்கின்றது. நமது சமூகம் பலபெரிய ஸ்தாபனங்க-

ளின் கூட்டுறவை மாற்றிக் கொண்டு வருகின்றது. யந்திரங்கள் நமது வாழ்க்கையைச் சிக்கல் நிறைந்ததாக ஆக்கிவிட்டன. நம்மனதுக்கு அமைதியில்லாமல் செய்துவிட்டது. சமநிலை உறுதி, சாந்தி இவைகளை நாம் அடையவேமுடியாதோ என்று தோன்றுகின்றது. நமது எண்ணங்கள் குழம்பிக்கிடக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் இருந்து உலகு விளிப்படைய யோக வாழ்வே அவசியம், என்றார். யோகத்தினால் ஆத்மசக்தி பெற்று பேரின்ப வாழ்வு மலரும் -அதிமனிதர், தீரர், அருட்சக்தி மைந்தர் புதுயுகவீரர் பொலிக வேண்டும் என்று விளக்கி கூறினார்.

3. 12 61ல் உரும்பிராய் முருகன் கோவிலில் ஓர்பூரண ஞானியாக- மகரிஷியாக, காட்சியளித்தார். தன் வாழ்வில் நடந்த சில சம்பவங்களை எடுத்துக்காட்டி, தாம் பெற்ற அறிவொளியைக் கொண்டு உலகின் மடமை யிருளை ஒழிக்க அறவோர் என்ன செய்யவேண்டும் என்று எடுத்துக் கூறினார். ஒவ்வொருஊரிலும் ஒரு சுத்த சங்கம் அமைத்து, எல்லாத் தேவைகளும் எல்லா நுட்பங்களும் நிறைவுற்று மாந்தரின் அழகியதெய்வீக வாழ்வு இயல்பாக அமை




யுப்படி யோகசித்தியால் பணி செய்ய வேண்டும் என்றார். அருட்குலம் வளரவேண்டும் உலகில புத்துணர்வும் தேவஜாதியும், சத்யுகமும் புலரவேண்டும் - புதுயுகக் காலை புலர்க என்றார்!

4 12. 61. காலை பலாலி விமானத்துறையில் ஏறி இந்திய நாடு சென்றார். ஒரு சிலநாட்கள் பழகினும் பெரியார்களுடன் பழகுவது பல ஆண்டுகள் பழகி ஐக்கியப் பட்டது போல் இருக்கின்றது. - அவர் எங்களை விட்டுப்பிரியவும், நாங்கள அவரை விட்டுப்பிரியவும் மனமில்லாமல் இருந்தது - , 'தில்லை வெளியில் கலந்து விட்டால் அவர் திரும்பியும் வருவாரோ'', என்று சொன்னது என்காதில் இப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் வாழும் ''மண்ணவன்'' ''கலைச் செல்வி'' வாசகர்களுக்கு அறிமுகமாகும் புதிய எழுத்தாளர் யாழ்-இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டி யில் இவருக்கு இரண்டாவது பரிசுகிடைத்தது. கல்யாணத்திற் காக ஏங்கி நிற்கும் குரூபி ஒருத்தியின் எண்ணச் சிதறல்களை ஒன்ருக்கி வரையப்படடதுதான் ''மனக் கோலம்''

# மனக்கோலம்

மண்ணவன்

முழுமதி!

நான் பிறந்தபோது என் பெற் ரோர் எனக்கிட்ட பெயர். சொற் சுவையும் பொருட்சுவையும் கலந்த இனிமை. பெயரின் இனிமையில் ஒரு அழகுப் பெண்ணின் உயிர் உருவம் மனநிலவில் குழைகின்றது. வான் மதியுடன் ஒட்டிப்பிறந்து பிரிந்து விழுந்தவளா? மயிலின் குலத்தவளா? பெண்மானின் உறவி னளா? எவள் என்று தெரியாத மனஅலைப்பு.

நெற்றி முன் பெருத்த, சப்பை முகம், அதில் எலும்பற்ற மூக்கு; பொருக்கான மேனி; தொய்ந்து தலைகுனிந்த மார்பகங்கள் எப்பொ ழுதும் காய்ந்து வரண்ட தோற்றம்; இத்தனைக்கும் முடியாக கருமை நிறம். இப்படியான குரூபியின் தோற்றம் பெயரோடு தெரிவதில்லை. உருவப் படுத்தவும் முடியாது,

நான் தான் அந்தக் குரூபி; எனக் குத் தான் முழுமதி என்ற பெயர். முகம் சுருக்கமெடுத்து, அருவருப்பில் கோணுகிறது, இது இயற்கை. ஏனென்ருல் மனம் அழகை நேசிக் கின்றது. நான் அழகை விரும்புகின் றேன்.

எப்படி இவளை அழைப்பது என்று மனம் உவமை தேடுகின்றது. அது மனத்தின் குற்றமல்ல; இந்த உருவில் நான் வாழ்கிறேன். என்குற் றம்.

தங்கநிறத் தழகிகளும் திங்கள் முகத்தழகி களும் வாழும் உலகில், நானும் பெண் நானும் கூட என்று நானும் வாழுகிறேன். காகநிறத்தழகி பெண் என்னும் போது அதற்குள் முக்கால் பங்கு அழகு: பெண்ணும் மென்மை, உணர்வு எல்லாம் மிகுதிக் குள் என் ஒரு அணுவில் கூட அழ கைக் காணமுடியாது. என்னையும் பெண்ணுக வாழவிட்டிருக் கிருர்கள். நானும் பெண் என்பதற்கு வெளி ஆதாரம் என்ன? எனக்கு அதிசயம்! பெண் என்ற பெயருள் வாழ விட்டி ருப்பதால் தான் எனக்கு இவ்வளவு- துன்பம்! வேதனை! மனஉளைவு!

கடவுள் தான் மனிதனைப் படைத்தாராம். அவருடைய உன்னத

சிருஷ்டி பனிதகுலம் அவரின் உன்னதங்களில் நானும் ஒன்று என்பதில் எனக்கு மகிழ்வு.

அவர் எனக்கு அழகைத்தர மறந்தார்; நிறத்தை தரமறந்தார்; உருவில் செம்மைதர மறந்தார். மற்றவர் சகிக்க கூடிய முகத்தைத் தந்தாரா?

என்னை நானே வெறுக்கின்றேன் நானே வெறுக்கும் கோலத்தில் என்னை சிருஷ்டித்தவர் எனக்கேன் உணர்வைப் படைத்தார்? உள்ளத்தைப் படைத்தார்?

ஒரு அசையாத கல்லாகப் படைத்திருந்தால் எவ்வளவு நன்றி கூறுவேன் தெரியுமா? என் நன்றியில் அவருக்கு அருவருப்பு போலும்!

அழகு மயில் கூட்டத்துள் நான் ஒரு அவலட்சணம்! இப்படிப்பட்டவர் மனிதரின் அழகுணர்வை அளித்திருக்க வேண்டும்.

இரண்டும் இல்லே. அமைதி இல்லே. வாழ்வே இல்லே. நான் விரும்பாமலே என்னைப் படைத்தார். நான் வாழ்வதை யாருமே விரும்பவில்லே!

நான் தெருவீதியில் நடந்து செல்கிறேன் என் முன்னுல் வேறு பெண்களும் செல்கிருர்கள். அவர்களேக்கண்டதும். சிரிப்பார்கள் விழுங்கு பவர்கள் என்னேப் பார்த்ததும் முகத்தைக் கடுக்கி தலேயைத் திருப்பிக் கொள்கிருர்கள். என் பின் உருவைப் பார்த்து. பெண் என இரசித்து, எட்டிநடந்து முன் உருவைப் பார்த்தும் "ஐயே!" என இறுக்கி நடக்கிருர்கள்.

"இந்தப் பெண்ணேக் கண்டதும் எனக்கு கடவுளிடம் ஐயம் எழுகிறது. இதையும் அவர்தான் படைத்தாரா?" என்று பலர் கூறும்போதும், சிறுவயதில் பள்ளிப் பிள்ளேகளோடு கூடி


தத்ரூபமான
புகைப்படங்கள்
தேவையானேர் மறக்கமுடியாத
பெயர்
பிறின்ஸ்
[உரிமையாளர் : M. நடராஜா]
கே. கே. எஸ். வீதி. : சுன்ஞகம்.

விளையாடும் போது. "குடுவை", "காகம்" என்று அவர்கள் என்னைப் பெயரிட்டு அழைத்தது எண்ணத்தில் விழும் போதும் நான் எனக்குள் செத்துவிடுகிறேன்.

பிறப்பது ஒருமுறை என்னைப் பழிப்பவர்கள் மீண்டும் ஒரு பிறப்பெடுத்து. என் உருவில் வாழ்ந்தால் என்னைப் பளித்த குற்றத்துக்காக அழுதழுதே மரணித்து விடுவார்கள். இந்த உயிர் படும் வேதனை யாருக்குத் தெரியப்போகிறது.

இரவை கோட்டான், ஆந்தை வரவேற்று, கள்ளர் கொலைஞர், காமாந்தகாரர் மலர் மாலை சூட்டும் போது நான் அந்த இனத்தைச் சேர்ந்த வனல்லாதபோதும், வாழ்த்துப் பாடுகிறேன்.

எல்லோரும் வடிவை எதிர் நோக்க, நான் பகல் மடிய ஏங்குகிறேன் இரவோடு இரவாக, இரவின் இரவாக மாறி மறைந்து விடுவதில் எனக்குள்ள இன்பம், மனப்பேரமைதி?மற்றவர்கள் என்னைக் காணுது நான் அமைதிகொள்ள பகல் இரவின்றி உலகம் முழுதாய் இருண்டு விடாதா? என ஏங்குகின்றேன்,

இரவு முழுதும் அமைதிகொண்டு. விடிந்ததும் என்லட்சணத்தில் ஏதும் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்ற சபலத்தில் கண்ணுடிமுன் ஓடிச்சென்று நிற்கின்றேன் அது பழைய அலங்கோலத்தைக் காட்டுகிறது. திரும்பி விடுகின்றேன்.

மனதுள் உழைவு, வேதனை

என்ன செய்வது, நான் அழகு உலகில் இருந்து அழகு வேண்டும் உலகுக்குத் தூக்கி எறியப் பட்டவள்.

என்பெற்றேருக்கு நான் மூத்த மகள். எனக்குப் பிறகு மூன்று பெண்கள். அவர்கள் மணஞ்செய்து இன்று தாய்மார்கள். நான் இன்றும் குமரி,

என்பெற்றேருக்கு சொத்துக்கள் ஏராளம். சீதனம் பெருமளவு என்று கேட்டு ஓடிவருபவர்கள். என்னைக் கண்டதும் முண்டியடித்துக் கொண்டு ஓடி விடுகிருர்கள். ப‌ம‌ர்? அருவருப்பா?

நானும் என்னைப்போல ஒருவன் வருவான் எனக்கு வாழ்வு தருவான் என்று எதிர் பார்த்தேன். பார்த்த அளவு தான்!

என்ருலும் எனக்கு ஒருவர் இருந்தார். நாதன் என் அடுத்த வீடு. நான் வாழும் வரை அவர் என் நினைவில் இருப்பார் அவர் என்னைக் காதலித்தார். எனக்கே வியப்புத்தான்— அவர் அவ்வளவு அழகு என்று சொல்லி விடமுடியாது. அவர் ஒரு வரிசையின் முதலில் என்ருல் நான் கடைசியில். உலகில் என்னை நேசிக்கும் ஒரு மனித இருதயம் இருக்கிறது என்பதில் எனக்கு பூரிப்பு. என் அடக்கிய ஆசைகளும், உணர்வுகளும் வெளிப்பட்டு, அவரையே உயிராக எண்ணினேன். அந்த எண்ணத்தில் என் சுதந்திரத்தை அவரிடம் கொடுத்தேன்.

இன்று கறைபட்டுக் கிடக்கின்றேன்.

அவர் இரு பிள்ளைகளுக்குத் தகப்பன். அவருக்கு வழக்கா வைககிறது? என் பருவ ஆசைகளை, சரியோ, முறையோ நிறைவெய்தச் செய்தவர் என்ற மட்டில் பெருமதிப்பு உ[illegible] லுற வுக்கு மட்டும் அழகு, தகுதி பின்னனி முழுவதையும் மறந்து விடுபவர்கள் உன் வாழ்வுக்கு [illegible]தனை யையும் எண்ணி விடுகிருர்க

நான் கூட என் வரையில் கன்னியாக இருக்க முடியவில்லை. பேருக்குக் குமரிதான்.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்கிறார்கள். நான் வாழ்வை நம்புகிறேன். ஆனால் அந்த வாழ்வு என்வரையில் ''மனவதைப்பில்' 'அளிவதற்கே' என்றாகிவிடுகிறது. என்றாலும் நான் வாழ்வை விரும்புகிறேன். எனக்கு வாழ்வுதரத்தான் ஒருவருமில்லை எனக்கு வாழ்வுதர அழகு வேண்டுமாம். கண்ணாடியில் பார்க்கும் நேரத்தை விட என் உருவம் எனக்கு தெரிவதில்லை. என்நேரமும் 'நான் ஒரு பெண் என்ற உணர்வுதான். அழகு உணர்வில் வடிவதில்லை. எனக்கல்ல எல்லோருக்கும் அது தான் உண்மை என் வரையில் எனக்கு வேண்டாத அழகு. நான் பார்க்கமுடியாத அழகு மற்றவர்களுக்காக என்னில் இருக்க வேண்டுமாம். என்ன கொடுமை அப்போதுதான் இன்பவாழ்வு! என்னளவில் அதுதான் உண்மைஎன்று நம்பவேண்டியிருக்கிறது.

என் ஆத்தாக் கொடுமை, உலகம் விரும்பும் அழகை நானும் பெற வேண்டும் என்னும் தவிப்பு!

பலவித மேல் மினுக்குகளை முகத்தில் தடவினேன். பல வண்ணப் பட்டுப் புடவைகளை நாகரீக பாணியில் அணிந்தேன். பல வண்ண நகைகளை பூட்டினேன்.

நான் நானேதான்.

பழைய பழிப்புச் சொற்கள் மெருகூட்டப் பட்டு எனக்கு அளிக்கப்பட்டன. வேறு என்னால் என்ன செய்ய முடியும்! முடிந்ததெல்லாம் செய்தாகி விட்டது.

என் உடற்பருவ தினவுகள் எனக்கு உறுதி தந்தது. என்னால் இருக்கமுடியவில்லை. என் அப்பா விடம் சென்று உங்களுக்கு ஒரு ஊமை, குருடாவது கிடைக்க வில்லையா''? என்றுகேட்டு விட்டேன். அவர் 'மதிப்பை' விரும்புவர். என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றும் மாப்பிள்ளை கிடைப்பான் என்ற நம்பிக்கை!

என்னை எல்லோரும் வெறுத்தாலும், என்னைப் புரிந்து கொண்ட ஒரு கூட்டமும் இருக்கிறது. என் இதயம் மலர என்னோடு சிரித்து மகிழ்பவர்கள், அன்போடு அளவளாவிஎன்மனதுக்கு சாந்தியளிப்பவர்கள் அவர்கள் தான். அவர்களுக்கு என்உருவம் தெரிவதில்லை. என் அன்பு, பண்பு, மனம் தான் தெரிகின்றன.

அவர்கள் நான் படிப்பிக்கும் குருடர்செவிடர் பாடசாலைப் பிள்ளைகள்.

என்னிடம் வாழும் துடிப்பு இருக்கிறது. அன்பும் பண்பும் இருக்கிறது. உலகம் அவற்றை விட்டு அழ

**கேள்விக்கு பதில் வேண்டுமா?**

இன்றே தபால் அஞ்சலட்டையில் கேள்விகளை எழுதி, கலைச் செல்வியில் வெளியாகி இருக்கும், தாண்டவக்கோன் மே/பா என்ற முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவும்.

ணைக் கேட்கிறது. நான் என்ன செய்ய முடியும்?

நான் திருமணத்தை ஆசையோடு எதிர்பார்க்கிறேன். என்னை, இவள் கறைப்பட்டவள் இப்படிக் கூறுகிறாள் என்ற எண்ணம் சிலரிடம் எழும் என்மனம் அந்நிலையில் இல்லை. திருமணம் என்றதும் துள்ளிக்குதிக்கிறது. நான் என்ன செய்வது?

எனக்குள்ளே எழும் பருவ உணர்ச்சிகள், கற்பனைக்கனவுகள், இன்பஉள்உந்தல்கள் எனக்குள்ளேயே சிதைந்து அழிந்து விடுகின்றன. என்மனம் இவற்றின் கல்லறை.

குருபீ, அவலட்சணம் என்பதால் உலகம் என்னை வெறுக்கிறது. நான் உலகை நேசிக்கின்றேன். அதனால்தான் என்னை அருவருக்கும் உலகில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

''டக்!...... டக்!......''

என்னை எழுப்புவதற்கு அம்மா வந்து விட்டாள், பள்ளிக்கூடத்திற்குப் போக நேரமாச்சு என்று அவசரப்படுத்த அவள் வந்து விட்டாள், உள்ளும் புறமும் சூனியஇருளில் உடலே உணர்வாகிக் கிடந்துதுடிக்கும் என்னை, பெற்றவளாலேயே புரிந்து கொள்ள முடியவில்லையே!

''முழுமதி''– அம்மா அழைக்கின்றாள்.

அவளை என்னால் கோபிக்க முடியவில்லை, என்னைத் தம் உயிராகக் கருதி நேசிக்கும் என் மாணவர்களிடம் அனுப்பத்தானே அவள் அழைக்கிறாள்!

எவரிடமும் தீமையைக் காணாது நன்மையை மட்டும்தான் நான் காண்கின்றேனோ?

அம்மாவை வாழ்த்திக் கொண்டு நான் எழும்புகிறேன்.........


## "ஆசீர்" வெளியீடுகள்

படிமுறைக் கணிதம்:

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2, | 3, | 4, | 5, | 6, | 7, | 8ம் வகுப்புகளுக்கு | |
| 1.20 | 1.40 | 1.60 | 1.80 | 2.00 | 2.00 | 4.00 | ரூபா |

படிமுறை எண்கணிதப் பயிற்சி

| | | | |
|---|---|---|---|
| மத்திய வகுப்பு, | உயர்தர வகுப்பு தமிழ், | ஆங்கிலம் | சிங்களம் |
| 1.60 | 1.60 | 1.60 | 1.60 |

மாதிரிகை வினாப்பத்திரங்கள்:

| | | |
|---|---|---|
| 5, | J. S. C. | G. C. E. |
| -/50 | -/75. | 1.00 |

படிமுறை அட்சர கணிதம்

| | |
|---|---|
| 6, | 7, |
| 1.60 | (அச்சில்) |

ஏனைய வெளியீடுகள்:

இலக்கண விளக்கமும் பயிற்சியும் 4ம் 5ம் வகுப்பு, பயிலுந் தமிழ் முதலாம் பாகம், பாடக்குறிப்பும் பதிவும், இலங்கைப் பூமிசாத்திர வினாவிடைகள் முறையே 70, 80, 2.00, 2.00, 1.25

கிடைக்குமிடம்

**ஆசீர்வாத அச்சக-புத்தகசாலை,**

32, கண்டிவீதி—யாழ்ப்பாணம்.

தொலைபேசி. 274

ஈழத்து இளம் எழுத்தாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

# யாழ்-இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்தும்

## கட்டுரை, கவிதை, நாடகப்போட்டிகள்

முடிவு திகதி : 10-3-62

## போட்டிவிதிகள்.

1. ஒரே எழுத்தாளரே ஒரு துறையில் எத்தனை விடயங்களையும் எழுதலாம். மேலும், ஒருவரே மூன்று துறைகளிலுள்ள போட்டிகளிலும் பங்குகொள்ளலாம்.

2. விடயங்கள் எழுத்தாளர்களின் சொந்தமுயற்சியிலானதாய், இதுவரை அச்சிலேறுததாய் இருத்தல் வேண்டும். அதை உறுதிப்படுத்தி விடயங்களில் தங்கள் பெயர்களை இடாது தனியான ஒருதாளில் விபரங்களை கொடுத்தல் வேண்டும்-

3. விடயங்கள், 'புல்ஸ்காப்'தாளில் ஒரேபக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.

4. போட்டிகளில் அங்கத்தவர்கள் தவிர்ந்த மறுபேர் 50 சதம் போஸ்டல் ஓடர் மூலம் தங்கள் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும். (ஆடர் சு. துரைசிங்கம், கந்தரோடை என எழுதவும)

5. பரிசுக்கான விடயங்களை தேர்ந்தெடுக்கும் விடயத்தில் நீதிபதிகளின் தீர்பே இறுதியானது.

6. விடயங்கள் ''கலாபரமேஸ்வரன் யாழ் இளம் எழுத்தாளர்சங்கம், புத்தூர் என்னும் முகவரிக்குஅனுப்பப் படல்வேண்டும்.

7. பரிசுகளாக தங்க, வெள்ளி பதக்கங்கள், பணமுடிப்புக்கள், நூல்கள் முதலியன வழங்கப்படும். இளம் எழுத்தாளர்களும் மாணவர்களும் போட்டிகளில் பங்குபற்றலாம்.

### கட்டுரைப்போட்டி.


''இலக்கியம் ஏன்?'' என்னும் விடயம் பற்றி எழுதல் வேண்டும். 5 பக்கங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்-

### கவிதைப்போட்டி.

''தணியா ஆவல்'' என்பதே போட்டிக்கான விதியின் தலையங்கம், கருத்துச் செறிவு அவசியம்-

### நாடகப்போட்டி.

போட்டிக்கு ஓரங்க நாடகங்களே எழுதப் படல் அவசியம். நமது நாட்டை பின்னணி யாகக்கொண்ட சமூகநாடகமாக இருத்தல்வேண்டும். எழுதப்படும் எந்த நாடகமும் இதற்கு முன் வெளிவராததாகவோ அன்றி நடிக்கப் பெருததாகவோ இருத்தல் வேண்டும். 10-18 பக்கங்களுள் நாடகம் அடங்கியிருக்கவேண்டும்.




ஐ. அ. தர்மகுலசிங்கம், 5 ம் வட்டா நெடுந்தீவு.

கே. இலங்கையில் இப்போது எத்தனை தினசரிப் பத்திரிகைகள் இருக்கின்றன?

ப. ஆங்கிலத்தில் டெயிலி நியூஸ், ஒப்சேவர், ரைம்ஸ் ஒப்சிலோன், டெயிலிமிறர் ஆகிய நான்குமாம், சிங்களத்தில் தினமின ஜனதா, லங்காதீபா, தவஷ ஆகிய நான்கும். தமிழில் வீரகேசரி, தினகரன், ஈழநாடு ஆகிய மூன்றுமாக மொத்தம் பதினொரு தினசரி பத்திரிகைகள் இருக்கின்றன.

மதியமுதன், ஆசிரிய கலாசாலை, மட்டக்களப்பு.

கே. "மதியமுதன் என்ற என் புனைபெயரைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப. கவர்ச்சியானதாக, அர்த்தம் பொதிந்ததாக இருக்கின்றது. ஆனால் தரம் மிகுந்த, புதுமை நிறைந்த படைப்புகள் இப் புனைபெயரில் வெளியாகும் போதுதான், வாசகர்களின் நெஞ்சில் பெயர் நிலைத்து நிற்கும்.

பொ. சண்முகநாதன், சங்குவேலி தெற்கு, மானிப்பாய்,

கே. கவிஞர் கண்ணதாசனைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப. வாழும் கவிஞர்களுள் வளமும் திறனும் பெற்ற நல்ல கவிஞர் அவர் அரசியல் தொடர்பை அறுத்தெறிந்தாரானால் இலக்கிய இரசிகர்கள் மகிழ்வார்கள். தமிழ் இனிமையான மொழி என்பதை மற்றைய மொழியினர் உணர வேண்டும் என நாம் விரும்பினால் கண்ணதாசனின் பாடல்களை பாடிக் காட்டலாம்!

அ. செந்திவேலாயுதம், சன்னதி வீதி, தொண்டைமானாறு,

கே. ஊர்சுற்றுவதில் உள்ள இலாபம் என்ன?

ப. 1. கையிலுள் பணத்தைக் கஷ்டமின்றிச் செலவு செய்யலாம்.

2. கடன்காரருக்கு டிமிக்கி கொடுக்கலாம்.

3, யாராவது பத்திரிகை நிருபர்களின் துணையுடன் அதை இலக்கிய யாத்திரையாகக் கயிறு திரிக்கலாம்.

4. ஊர்சுற்றி முடிந்தபின், எங்காவது கூட்டத்தில் பேச வாய்ப்பு ஏற்பட்டால், சந்தர்ப்பத்தை மறந்து, தான் சாதித்த மாபெரும் சாதனைகளை அளந்து, கேட்போரின் பொறுமையைச் சோதிக்கலாம்!

மு. கதிர்காமநாதன். வண்ணார் பண்ணை.

கே, இந்தியாவின் கல்வி மந்திரி யார்?

ப, ஒவ்வொரு இராச்சியத்திற்கும் (State) தனியே கல்வி மந்திரிகள் உளர். மத்திய அரசாங்கத்தில் கல்வி மந்திரியாக (Union Minister for Ebucation) இருப்பவர் டாக்டர். ஸ்ரீமாலி அவர்கள்.

லோ. சச்சிதானந்ம், 1ம் வாட், கிண்ணியா.

கே. இளம்பட்டதாரிகளை அறிவாளிகள் என்று கருதலாமா?

ப. பட்டப்படிப்பு வேறு, அறிவு வேறு பட்டதாரிகளல்லாத கிருபானந்தவாரியும் மணி பாகவதரும் எண்ணிறந்த அரிய பெரிய அறிவுரைகளை இனிய எளிய முறையில் விளக்கி வரும்போது, எத்தனையோ பட்டதாரிகள் சிவில் சேவிஸ் பரீட்சையில் சிரிப்புக்கிடமான விதத்தில் டதில் எழுதுகின்றார்களே!

கே. சமுதாயத்தொண்டு என்றால் என்ன?

ப. கடிதத் தலைப்பில் சமுதாயத் தொண்டன் என்று அச்சிடுவதும், சேகரித்த பணத்தை சுருட்டிக்கொண்டோடுவதும் அல்ல, தன் சொந்த நலன்களைக் கவனியாது, சமுதாயம் முன்னேற வேண்டும் என்ற உண்மையான விருப்பத்துடன் அதற்கு வேண்டிய வேலைகளில் ஈடுபடுவது தான் சமுதாயத் தொண்டு.

தமிழன்பன். ஆரவயல்பிட்டி, வேலணை 5.

கே. உமக்கு நம் அறிஞர் தமிழ்வாணனிடமும் ஈழத்து தமிழ்வாணன் ......அவர்களிடமும் ஏனோ இத்தனை வெறுப்பு?

ப. ''தன்னைத் தானே புகழ்ந்தால் தமிழ்வாணன் ஆகிவிடலாம்'' -என்ற கொள்கை ஏதாவது உம்மிடம் இருக்கின்றதோ? இல்லாவிட்டால் ஒரு கற்றுக் குட்டிக்கு ஏன் அந்தப் பட்டத்தை சூட்டினீர்? போகட்டும். தமிழ் வாணனிடம் கொஞ்சமாவது திறமை இருக்கின்ற படியால், அவரைப் பற்றிப்பேசுவோம். தமிழ் வாணனிடம் எனக்குத் துளியும் வெறுப்புக் கிடையாது. அவருடைய கொள்கைதான் எனக்குப்பிடிக்கவில்லை. எப்படி எழுதினால் இளைஞர்களுக்குப் பிடிக்கும் என்பதற்காக, எப்படி எழுதினால் 'கல்கண்டு' அதிக அளவில் விற்பனையாகும் என்பதற்காக எழுதும் அவருடைய கொள்கை எனக்கு பிடிக்கவில்லை. ''எவ்வழி நல்வழி, அவ்வழி நம்வழி'' என்பதுதான் அவருடைய கொள்கை என்றால்; சினிமா நட்சத்திரங்களைப் பற்றி எழுதுவதுதான் நல்வழியோ? தனிப்பட்ட முறையில்தான் யாரையும் தாக்குவதில்லையாம்? ஆனால் கருத்தடை, குழந்தைப்பேறு பற்றிய கேள்விகளில் கண்ணதாசனை வலிந்து வம்

புக் கிழுப்பதன் காரணம் என்ன? ரஜாஜிக்கும், அண்ணுவுக்கும் இலக்கணப் பிழையின்றித் தமிழ் எழுதத்தெரியாதாம். ஆனுல் இவருடைய எழுத்துக்களில் பிழைகளை எடுத்துக் காட்டினுல், அச்சுக் கோப்பவர்மீது பழியைப் போட்டுவிடுகின்ருர்! தன்னம்பிக்கைக்கும் தற்புகழ்ச்சிக்கும் வேறுபாடு தெரியாமல் தடுமாறும் இந்தத் தலைவீங்கித் தம்பிரானைப் பற்றி தனியாகவே ஒரு கட்டுரை எழுதவிரும்பினேன். ஆனுல் பண்புள்ளம் கொண்ட நல்ல தமிழறிஞர்களால் மதிக்கப்படாத இந்தப் பேர்வழியைப் பிரமாதப் படுத்தக்கூடாது என்பதால் அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன்.

ஆர். மனோகரன், எட்டியாந் தோட்டை,

கே. "சபாஷ் மாப்பிள்ளை" பார்த்தீர்களா? ஹாஸ்யம் எப்படி?

ப. பார்த்தேன் சொல்லிச் சிரிப்பதற்கு ஒன்று மில்லாவிட்டாலும், பார்த்துச் சிரிப்பதற்கு நிறைய இருக்கின்றது.

முகில்வண்ணன், பாண்டிருப்பு, கல்முனை

கே. இளம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பத்திரிகையாகிய 'கலைச் செல்விக்கு' நான் ஒரு கதை எழுதி அனுப்பினேன். அது இதுவரை ஏன் பிரசுரிக்க வில்லை?

ப. இதற்குரிய சரியானபதிலைப் பகிரங்கமாகக் கூறினுல், இளம் எழுத்தாளர்களாய தங்களின் ஊக்கம் குறைந்து விடுமே!

க. யோகேஸ்வரி, ஊர்காவற்துறை.

கே. அரசாங்க எழுது வினைஞர் பத்திரிகையான 'நவஉதய'தில் "கலப்பையும் பேனையும்" என்ற பரிசு பெற்ற சிறந்த சிறுகதையை எழுதிய "செந்தாரகை" யார்?

ப. சென்ற ஆண்டு கார்த்திகை இதழில் அவர் அறிமுகமானுரே, தாங்கள் பார்க்கவில்லையா? அவருடைய இயற்பெயர் துளசிகாமணி. இப்போது மாத்தறைக் கச்சேரியில் வேலைபார்க்கிருர்.

க. சுப்பிரமணியம், 'தாயகம்' காரைநகர்,

கே. கல்யாணமான புதிதில் பெண்கள் சாப்பிடக் கஷ்டப் படுகின்ருர்களே, ஏன்?

ப. அவர்களுடைய நெஞ்சு முழுவதும் கணவன் நிறைந்திருப்பதால், உணவு உள்ளே செல்வதற்கு வழிஇல்லயோ என்னவோ!

கே, பெண்களின் சிரிப்புக்கா, அழுகைக்கா வலிமை அதிகம்?

ப, ஆண் ஏமாளியாய் இருந்தால் பெண்களின் அழுகைக்கும் சிரிப்புக்கும்மட்டுமல்ல, அவர்களின் மெல்லிய அங்க அசைவுகட்குமே வலிமை அதிகமாகத்தானிருக்கும்!

கே. எம் யூசுப், அரசினர் சிரேஷ்ட பாடசாலை, மூதூர்.

கே. உலகில் குட்டிபோட்டு பால் கொடுக்கும் பறவை எது?

ப. சில அரசியல் வாதிகளின் அந்தரங்க குருநாதராக விளங்கும் திருவாளர் வௌவால்!

எம். எஸ். பாலசிங்கம், அம்பன்.

கே. பள்ளி மாணவிகள் பரீட்சையில் பலமுறை மட்டை அடிப்பதன் காரணம் என்ன?

ப. காதல்! ஒரே வகுப்பிலேயே நெடுநாட்களுக்கு இருக்க வேண்டும் என்ற காதல்!

அ. ந. இராசகோபால், 25 ஜமுனு வீதி, நல்லூர்.

கே. எழுத்தாளனுக்கு புனைபெயர் அவசியமா?

ப. ஆமாம்! புனைபெயருக்குள் மறைந்திருந்தாற்றுனே, சொந்தப் பெயரில் தான் எழுதும் கதைகள் அத்தனையும் சிறந்தவை என்று இலக்கிய சர்ச்சை பண்ணலாம்!

சுந்தரன், சுவினை, புன்னாலைக்கட்டு -வன்.

கே தாண்டவக்கோன் மாமா! உங்களுக்கு இரு மனைவிகள் உண்டாமே உண்மையா?

ப. உண்மையைச் சொன்னுல் எனக்கு மனைவி ஒரே ஒருத்திதான் நான் ஏகபத்தினி விரதத்தைக் கடைப்பிடிப்பவன். ஆனுல் அடிக்கடி வெளியேகிளம்பும் போது என் மனைவி செய்துகொள்ளும் புதுப்புது சிகையலங்காரங்களைப்பார்த்துவிட்டு,எனக்கு ஒன்றல்ல பல மனைவிமார் இருக்கின்றனர் என்று என் நண்பர்களே முடிவு பண்ணிவிட்டார்கள்! தலையலங்காரத்திஞல் தன்னையே மாற்றிக் கொள்ளும் என் மனைவியின் திறமையே திறமை!

தமிழ்மோகன், தெய்யன்னவெலை கண்டி.

கே. மலைநாட்டு எழுத்தாளர் இருவரைக் கூறும்படி கேட்டதற்கு, ஒருவரைமட்டும் குறிப்பிட்டு, மிகுதியை விட்டுவிட்டீரே! உமக்குத் தெரிந்தது அவ்வளவுதான் போலும்!

ப. ஆமாம்! எனக்குத் தெரிந்தது அவ்வளவுதான்! திரு சி. வி. வேலுப்பிள்ளை தமிழிலும் ஆங்கிலத்திலும் நன்ருக எழுதுகின்ருர். வேறு நல்ல எழுத்தாளர்கள்மலைநாட்டில்இருப்பது எனக்குத் தெரியவில்லை. எழுத்தார்வமுடைய சில இளைஞர்கள் இப்போது எழுதப்பழகுகின்ருர்கள். எனக்குத் தெரிந்த இந்த உண்மையைக் கூறிஞல் தாங்கள் கோதிப்பானேன்?

A. R. சய்புன்னிசா, அ. மு. ம.வித்தியாலயம், பெரியகிண்ணியா.

கே. ஜெமினிகணேசன், சிவாஜி கணேசன் ஆகிய இருவருள் சிறந்த நடிப்புத்திறன் யாரிடம் உண்டு?

ப. சிவாஜி கணேசனிடம் தான் என்பதை நான் சொல்லித்தாஞ தாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்?

இரா. சிவசந்திரன், வேலணை கிழக்கு வேலணை.

கே. யார் உள்ளத்தில் நீங்கள் தாண்டவமாடுகிறீர்கள்?

ப. தன் உள்ளத்தில் நான்தான் தாண்டவமாடுவதாக என் மனைவி சில சமயம் கூறியதைக்கேட்டு என் சம்பளப் பணத்தை அவளிடம் கோட்டை விட்டிருக்கிறேன்! வேறு எந்தப் பெண்ணும் வாய்திறந்து இப்படிக் கூறியதாக நினைவு இல்லை!

த. அப்துல், வதூது அரசினர் வித்தியாலயம், மூதூர்.

கே. இன்று உலக அரங்கில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

ப. ஆபிரிக்கா! ஆங்கில நெடுங்கணக்கில் 'A' யில் தொடங்கும் முதல் நாடு அதுதான்!

"தாடிவாலா" ஸ்டான்லி ரூட் யாழ்ப்பாணம்.

கே: ரஷ்யாவில் இப்பொழுது பலர் தாடிவளர்க்கிருர்களாமே!

ப: முகத்திலுள்ள மயிரை எடுப்பதுபற்றி அங்குள்ளோர் மேலிடத்தில் ஆலோசனை கேட்டிருப்பார்கள். அவர்களுடைய குரு-ஷேவ் எடுக்க வேண்டாம் என்று சொல்லியிருப்பார்! கம்யூனிஸ்ட் ரஷ்யாவில் குருஷேவ் வைத்ததுதானே சட்டமாயிருக்கிறது!

செல்வி, சித்தி செயினு எ, ஆர், எஸ், தீன், பெரியகிண்ணியா,

கே இன்றைய ஈழநாட்டின் முதல் தரமான எழுத்தாளன், கவிஞன் யார்?

ப ஈழத்து எழுத்தாளர்களின் சிறு கதைத் தொகுதிகள், கவிதைத் தொகுதிகள், கட்டுரைத் தொகுதிகள், நாவல்கள் ஆகியவை அதிக அளவில் வெளிவந்தபின் பாரபட்சமற்ற விமர்சகர்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய இவ்விஷயத்தில், சில எழுத்தாளர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கலந்துகொண்டு தங்களுக்குத் தாங்களே முடிசூட்டிக்கொள்கிறார்களே! இந்த நிலையில் நான் என்ன சொல்ல இருக்கின்றது? ஆனால் தமக்கெனப் பெரிய அளவில் வாசகர் கூட்டத்தையுடைய மூவரை என்னால் குறிப்பிடமுடியும். அவர்களுள் இருவர் வீரகேசரி ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ரஜனி, எஸ்,டி. சிவநாயகம். மற்றவர் 'மரகதம்' ஆசிரியர் இளங்கீரன்.

கே. ஆர். கல்யாணி, புதுச்செட்டித்தெரு, கொழும்பு.

தமிழ்நாட்டுச் சட்டசபைத் தேர்தலில் எம், ஜி. ஆர். வெற்றியடைந்தால்...?

ப. "புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் எம். எல். ஏ. நடிக்கும் படம்" என்று அவருடைய படங்களை விளம்பரப்படுத்துவார்கள்!

இரா. பாலச்சந்திரன். நவாலி மானிப்பாய்.

கே. "அமுதம்" பத்திரிகை பற்றிச் சில வரிகள்......?

ப. அழகான அட்டையுடன் ஒழுங்காக வெளியாகும் பத்திரிகை என்பதைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியவில்லையே! இதுவரை வெளியான ஆசிரியத் தலையங்கங்களுள் ககாரின் விஜயம் பற்றிய தலையங்கம் குறிப்பிடும்படியாக அமைந்தது. பரிசுக் கதைகள் எதுவும் மனத்தில் நிற்கவில்லை. புரட்சி எழுத்தாளன் என்றும் அறிஞன் என்றும் தன்னைத்தானே புகழ்ந்து கொள்வதால் முன்னேற முடியாது என்பதை ஆசிரியர் உணர்ந்துகொள்ள வேண்டும். பேனாவும் பத்திரிகையும் இருக்கின்றன என்பதால் எதையும் எழுதிவிடலாமா? வாசகர்களுக்குத் தேவையான, இலக்கியத் தரம் நிறைந்த ஈழத்து எழுத்தாளரின் படைப்புகளை வெளியிட்டால் "அமுதம்" வாழும்!

"சிவாஜிப்பித்தன்," வத்துகாமம்.

கே. "சிவாஜி அண்ணா எங்களுக்கெல்லாம் "செட்"டில் வைத்தே நடிப்புச் சொல்லிக் கொடுப்பார்" எனச் சில நடிகர்கள் பெருமையுடன் சொல்லிக் கொள்கிறார்களே! அப்படியானால் சிவாஜிக்கு நடிப்புச் சொல்லிக் கொடுப்பது யார்?

ப. நடிகர் திலகத்திற்கு யாருமே நடிப்புச் சொல்லிக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. பாத்திரத்தின் தன்மையைப் பரிபூரணமா

உணர்ந்துகொண்டு நடிப்பவர் அவர். படப்பிடிப்புக்குப் போவதற்கு முன், தன் பிரத்தியேக அறையினுள்ளிருக்கும் நிலைக்கண்ணாடியின் முன் நின்று, முக பாவங்களை அதில் பார்த்து வேண்டிய திருத்தங்களைச் செய்துகொள்வார். ஆகவே சிவாஜியின்குரு அந்த நிலைக்கண்ணாடிதான்!

கே. ''பாசமலர்'' பார்த்தீர்களா? அழுதீர்களா?

பார்த்தேன், அழுதேன், பார்த்துப் பார்த்து அழுதேன். சிவாஜியும் சாவித்திரியும் அண்ணன் தங்கையாக வந்து நடிப்பின் சிகரத்திற்கு ஏறிச் சோகத்தின் சிகரத்துக்குத் தாவுகின்றார்கள். தன்னுடைய வீட்டிற்குப் போவதற்கு முன் ''நான் உள்ளே போகலாமா?'' என்று காவற்காரனிடம் சிவாஜி அனுமதி கேட்பதும், கண் அவிந்தபின், தங்கையின் மகளைத் தூக்கிக்கொண்டு ''எங்களுக்கும் காலம் வரும்'' என்று சிவாஜி பாடுவதும் கல்நெஞ்சையும் கரைய வைக்கும் கட்டங்கள்.

சி. கமலவேணி, அரியாலை, யாழ்ப்பாணம்.

கே. யாழ்-இளம் எழுத்தாளர் சங்கத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப. இலங்கையிலுள்ள எந்த எழுத்தாளர் சங்கமும் செய்யாத பல வேலைகளைச் செய்தவர்கள், செய்து வருபவர்கள் இச்சங்கத்தினர். ஒழுங்கான முறையில் சிறுகதைப்போட்டி நடாத்தினார்கள்; மாதந்தோறும் ஒழுங்காகக் கூட்டம் வைக்கின்றார்கள்; ஒழுங்காக வராதவர்களை ஒழுங்காகப் பதவியிலிருந்து நீக்கியும் விடுகின்றார்கள்! எழுத்தாளராக வர விரும்புபவர்கள் இச்சங்கத்தில் அங்கத்தவராகச் சேர்வது நல்லது. பதவியிலிருப்பவர்களும் ''தாம் இன்றியமையாதவர்'' என்ற எண்ணத்தை விட்டுவிட்டு, பொறுப்பைப் பகிர்ந்து கொடுப்பது நல்லது.

''தமிழ் மன்னன்'' கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

கே. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எழுத்தாளர் ஒருவர் கொழும்பிற்குச் சென்று மூக்குடைபட்டாராமே!

ப. 'இப்படிப்பட்ட' இளம் எழுத்தாளர் 'அப்படிப்பட்ட' கற்றுக்குட்டிப் பத்திரிகையாசிரியரிடம் சென்றால் வேறு 'எப்படிப்பட்ட' நிகழ்ச்சியை எதிர்பார்க்கலாம்?

பதில் வேண்டுவோர், தம் சொந்தப் பெயரையும் சரியான முகவரியையும் தெரிவிக்க வேண்டும். இங்குள்ள முகவரியையும் வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

**தாண்டவக்கோன்**
மே/பா 'கலைச்செல்வி'
226, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

When You in Jaffna
Visit
**"Handlooms"** (Good of India)
*47, Main Street, : : Jaffna.*

# வெண்தாமரை

(மாதம் இருமுறை)

புதிய பல அம்சங்களுடன் வெளிவரும் இலக்கிய இதழ்.

அரசகேசரி எழுதும்
**“அகல் விளக்கு”**
என்னும் தொடர் நவினமும்

பகவதி எழுதும்
**“வீரத்தின் விருது”**
என்னும் தொடர் நாடகமும்

வெண்தாமரை இதழில் ஆரம்பமாகின்றன.

சந்தா விபரம்:
1 வருடம் ரூபா 5-00 6 மாதம் ரூபா 2-50
தனிப்பிரதி சதம் 20

விபரங்களுக்கு:

நிர்வாகி,
**வெண்தாமரை**
சிவன்கோவில் வீதி, பருத்தித்துறை.

---

இலங்கை முழுவதும் மங்காப்புகழ்பெற்ற
**903**
# கபூர் & ஸ்டீம் பீடிகளையே
புகையுங்கள்.

ஊக்கமளிக்க வல்லது! உற்சாகம்தர உகந்தது !!
உவகையளிக்க உற்றது !!!
உயர்ந்தரக அக்குல் புகையிலையால்
உன்னத தொழிலாளரைக்கொண்டு
ஒப்பற்ற மேற்பார்வையின்கீழ் தயாரிக்கப்பட்டது.
இலங்கையில் எல்லாப்பகுதிகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்:
# N. B. அப்துல் கபூர்
**பாலக்கரை, திருச்சி.**

இலங்கையில்:
102-3 ஆதுருப்பள்ளி வீதி, கொழும்பு-13

# வளருந்தமிழ்

ஓவியக்கலை: ஆசிரியர். ஆ. தம்பித்துரை, மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை; பதிப்பாசிரியர் கனக செந்திநாதன்; வெளியீடு: குரும்பசிட்டி சன்மார்க்க சபை; விலை : ரூபா ஒன்று

ஓவியக்கலையைப் பற்றி தமிழில் நூல்கள் மிகச்சில; அதனுல் அக்கலை வளர்ச்சிக்கு தமிழின்பம் தயாராக இல்லை. இதை உணர்ந்தே ஓவிய ஆசிரியராகஇருந்து பணியாற்றி வரும் அன்பர் அநுபவத்தால் இந் நூலை எழுதியுள்ளார். ஓவியக்கலை பயிலும் மாணவர்க்கு இந்நூல் மிக அவசியமானது. கலையின் தத்துவம், ஓவியப்பிரிவுகள் (கோடு - உருவம் - வர்ணம்) இவற்றைப்பற்றிய விளக்கங்களும்- மூலவர்ணம் உபவர்ணங்களின் கலப்புகள் பற்றிய விபரங்களும் அமைந்துள்ளன. ஈழத்து தலைசிறந்த விமர்சகராக விளங்கும் கனக; செந்திநாதன் அவர்களே இந்நூலைப் பதிப்பித்தார் என்பதிலிருந்து நூலின் பெருமைபுலனுகின்றதல்லவா? நூலை வெளியிட உதவி புரிந்த குரும்பசிட்டி சன்மார்க்கசபையினரது முயற்சியும் பாராட்டிற்குரியதாகும்.

''பானு',

சங்கிலியன்:

சிறப்புமலர் — 1961: வெளியீடு யாழ்கலை அரங்கம், 21, தட்டார ஒழுங்கை கொழும்பு-12

சங்கிலியன் போன்று வீரத்துடன் காட்சியளிக்கும் மலரில் நாடகக் கலை சம்புந்தமாக பல அம்சங்கள் இடம்பெற்றிருப்பது, மலருக்கு தனிசசிறப்பையளிக்கின்றது. ''நடிப்பு என்பது ஒரு கலை,. அதுவும் விதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும் அமைந்து பக்குவமாய வளரவேண்டிய ஒரு கலை" என சாணு தன் ஆராய்ச்சிக் கட்டுரையில் குறிப்பிட்டிருப்பது நாடகப்படியில் கால் எடுத்து வைப்பவர்களுக்கு நல்ல அறிவுரையாகும். கா. சிவதம்பியின் ''நாடகம் வளர" என்னும் கட்டுரை, சினிமாவையும், நாடகத்தையும் ஒப்பிடுபவர்களுக்கு தகுந்த போதனே. மலரில் புதிய பல நாடக மன்றங்களை அறிமுகம் செய்திருப்பது நாட உலகிற்கு செய்த நற்பணியாகும். மலரில் இன்னும் பல நாடக வல்லுனரின் கட்டுரைகள் இடம் பெற்றிருப்பதால், நாடகத்துறையில் ஈடுபாடுடைய எல்லோரும் படித்துப் பலனடையலாம்.

மலர் போன்று நாடகமும் இருந்திருந்தால் போற்றத்தக்கது.

—சம்பத்

கலைச்செல்வி விற்பனையாளர்கள்

ஜெயசோதி ஸ்ரோர்ஸ்
180, பிரதான வீதி,
இங்கிரியா.

நல்லதம்பி ஹோட்டல்
8-10 பசார் வீதி,
சிலாபம்.

## ஒரு படத்திற்கு ஒருலட்சம் வாங்கும் நடிகை

# "ரங்கூன் ராதா"

"குகஜி"

அது ஒரு தாசியின் வீடு. கொள்ளைக்கார லட்சுமிகாந்தன் அடிக்கடி அங்கே செல்வதை அறிந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர், ஒரு செட்டியாரைப்போல் மாறுவேடமணிந்து அங்கே செல்கின்றார் கொள்ளைக்காரனைப் பிடிப்பதற்காக. ஆனால் அங்கே அவர் கண்டது ......? தாசியுடன் வேறும் இரண்டு பெண்களையே! இன்ஸ்பெக்டர் அந்தப் புதிய பெண்களைக் குறுக்கு விசாரணை செய்கின்றார், "நீங்கள் யார்"? என்று உறுமுகின்றார், "நான்தான் பிரபல சினிமா நடிகை ரங்கூன் ராதா, இவள் என் தோழி ரங்கூன் கமலா" என்றாள் அவர்களுள் ஒருத்தி. "நீங்கள் ஒரு படத்திற்கு எவ்வளவு பணம் வாங்குகின்றீர்கள்?" — இன்ஸ்பெக்டரின் கேள்வி இது. "ஒரு லட்சம்" என்றாள் அவள்.

யார் இந்த ரங்கூன் ராதா? என்பது நேயர்களுக்குத் தெரியுமா? சாட்சாத் எம். ஆர். ராதாவேதான். "லட்சுமி காந்தன்" படத்தில் போலிஸ் இன்ஸ்பெக்டரிடமிருந்து (O. A. K. தேவர்) தப்புவதற்காக நடிகவேள் ராதாவும் கள்ளபார்ட் நடராஜனும் பெண் வேடமணிந்து பிரமாதமாக நடித்துள்ளனர். இக்காட்சி சமீபத்தில் மெஜஸ்டிக் ஸ்ருடியோவில் படமாக்கப்பட்டது. R. S. மணி டைரக்ட் செய்யும் இப்படத்தின் காமிராவை R. R. சந்திரன் கையாளுகின்றார். பாடல்கள் கண்ணதாசனுடையவை. புகழ்பெற்ற இரட்டையர்களான விஸ்வநாதன்—ராமமூர்த்தி இசையமைக்கின்றனர். வசனம் திருவாரூர் தங்கராசு. மார்ச் மத்தியில் இப்படம் வெளிவரலாம்.

---

கலைச்செல்வி விற்பனையாளர் :

**எஸ். எல். சவுந்தரநாயகம்**

**இலுப்பைக்குளம், நேரியகுளம்.**

# பாகவதரைக் கைதுசெய்த போலிஸ் அதிகாரி ஒரு இலங்கையர்.

நாடக உலகிலும், திரை உலகிலும் மன்னனாகவே வாழ்ந்து மன்னனாகவே மடிந்தவர் காலஞ்சென்ற தியாகராஜ பாரவதர் அவர்கள். பத்திரிகை ஆசிரியர் லட்சுமிகாந்தனின் கொலை சம்பந்தமாகப் பாகவதர், என். எஸ். கிருஷ்ணன் முதலியோர் கைதுசெய்யப்பட்டுச் சிறைவைக்கப்பட்டது நேயர்களுக்கு நினைவிருக்கலாம். பாகவதரைக் கைதுசெய்தவர் யார் தெரியுமா? இலங்கையில் பிறந்து வளர்ந்து சென்னையில் உத்தியோகம் பார்க்கும் ஒரு பொலீஸ் அதிகாரி! "பாகவதரைக் கைதுசெய்யவேண்டிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தத் துக்ககரமான வேலையைச் செய்வதற்குத் தயக்கத்துடனும், அதேசமயம் தகுந்த பாதுகாப்புடனும் நான் பாகவதரின் இல்லத்திற்குச் சென்றேன். வழமைபோல் பட்டுடை அணிந்துகொண்டு விலையுயர்ந்த கம்பளமொன்றில் சாய்ந்தபடி நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார் பாகவதர். கோர்ட்டாரின் உத்தரவை நான் அவரிடம் காட்டியதும், உடுத்திருந்த உடையைக்கூட மாற்றாது என்னுடனே கிளம்பிவிட்டார் அவர்" என்று கூறினார் அந்தப் போலீஸ் அதிகாரி. இவர் இப்பொழுதும் சென்னையிலேயே பணிபுரிகின்றார். இவருடைய உறவினர்கள் வட இலங்கையிலுள்ள வட்டுக்கோட்டை என்னும் கிராமத்தில் வாழ்கின்றார்கள்.

---

யாழ்
இளம் எழுத்தாளர் சங்கம்
நடாத்திய
**சிறுகதைப் போட்டி**
முடிவுகள்.

முதற்பரிசு:
செ. யோகநாதன் — கண்டி.

இரண்டாவது பரிசு:
மன்னவன் — நல்லூர்.

மூன்றாவது பரிசு:
கு விஜயன் — வெள்ளவத்தை

இன்னும்
ஏழு கதைகள்
பிரசுரத்திற்கெனத்
தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

---



பூஞ்சோலையில்

கிருஷ்ணகுமாரி

# இலங்கை
# தமிழ் சினிமா ரசிகர்கள் சங்கம்

"இலங்கையிலிருந்து வரும் கலைஞர்கள் ரசிகர்கள் அளவளாவித் தென்னிந்திய நடிகர் நடிகைகளைச் சந்திக்கும் வசதியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வருங்காலத்தில் சென்னையில் இதற்கென்று ஒரு தனி விடுதியைக்கட்டத் திட்டமிட்டுள்ளேன்" இவ்வாறு பிரபல தென்னிந்திய நடிகர் சி. எஸ். ஆனந்தன், மருதானை புகாரி ஹோட்டலில், இலங்கை தமிழ் சினிமா ரசிகர்கள் சங்கம் அளித்த விருந்துபசாரத்தின்போது கூறினார்.

சங்க உபதலைவர் ஜனாப் எஸ் எம். கமால்தீன் விழாவிற்குத் தலைமை வகித்தார். மேலும் பேசுகையில் நாடகங்களில் சினிமா உத்தியைத் தாராளமாகக் கையாளலாம். மேல்நாட்டுச் சண்டைக்காட்சிகளைப்போல நம்நாட்டிலும் எடுக்க ஏற்பாடுசெய்யவேண்டும் என்பதே எனது அவா என்றார் திரு. ஆனந்தன். ரசிகர்சங்கக் காரியதரிசி திரு. பாலச்சந்திரன் பேசுகையில் எம் நாட்டிலிருந்து தமிழகம் செல்லும் கலைஞர்களையும் ரசிகர்களையும் தக்க மரியாதையோடு கௌரவிக்க இளைஞர் நடிகரும், குட்டி எம். ஜி. ஆர். எனப் பெயர் வாங்கிக்கொண்டு வரும் ஆனந்தன் ஏற்ற வழிவகைகள் செய்யவேண்டும்" என்றார்.

வீரகேசரி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், முன்னை நாள் அமைச்சர் திரு. வி. குமாரசாமி, அன்பர் பூபதிதாஸர், எஸ். மணவைத்தம்பி ஆகியோரும் பேசினார்கள்.

கலைச்செல்வி விற்பனையாளர்கள் :

**T. பெருமாள் செட்டியார்**

நியூஸ் ஏஜன்ட்


மாங்குளம்.

“பாதை

தெரியுது

பார்”

என்ற
படத்தில்



புதுமுகம் விஜயனும் விஜயலட்சுமியு

காதல் மலர்கின்றது அவனுக்கும் அவளுக்குமிடையில். அன்பு வளர்கின்றது மாமிக்கும் மருமகளுக்குமிடையில் விதி செய்த சதியால் காதல் கருகிவிடுகின்றது.
அன்பு......?

# பொன் விளக்கு

## "யாழ்நங்கை"

வெண்மதி தண்ணிலவைப் பூமியின்மேல் பொழிகிறது. அதன் தண்மையும் மென்மையும் கூடிய அணைப்பில் சிலிர்த்தெழும் செடி கொடிகளும் மரங்களும் 'தகதக'வென்று மின்னுகின்றன. தென்றலின் தாலாட்டு வேறு விதம்விதமான இன்பக்கற்பனைகளை எழுப்பி உள்ளத்தில் கிளர்ச்சியூட்டுகின்றது. இரண்டு மனிதச் சிலைகள் – ஒன்று தென்னமரத்தில் சாய்ந்த படியும், மற்றொன்று கிணற்றுக்கட்டின்மேல் உட்கார்ந்தபடியும் மோனத்துவம் இயற்றுகின்றன. நிலவோடு விளையாடும் அந்தப் பெண்சிலை தன் அழகை ஆவலோடு பருகிக்கொண்டிருக்கும் அந்த ஆணுருவைத் திருட்டுத்தனமாக நோக்கி 'களுக்'கென்று சிரிப்பொலி எழும்புகிறது. அவள் நகைப்பினால் தன்னிலை அடைந்த அவன் "ரோகிணி" என்று அன்போடு அழைக்கிறான். எவ்வளவு நேரம் இப்படிக் கால்கடுக்க நிற்பதாக உத்தேசம்? இப்படி என்னருகே வந்து உட்காரேன்!"

அவள், மாட்டேன் என்று தலையசைக்கிறாள்.

"ஏன் ரோகினி?" என்றான் அவன்.

"வெட்கமாக" இருக்கிறது!" அவள் குரலில் இழையும் யாழின் இனிமை அவனைக் கிறங்கவைக்கிறது.

"அடடே! வெட்கமா?... அதுவும் என்னிடமா? சரிதான்! இவ்வளவு நேரமும் வெட்கப்பட்டது போதும். இனி இப்படி உட்கார்ந்து ஏதாவது பேசேன், கேட்கிறேன்!" என்றவன் அவள் பூங்கரத்தை "வெடுக்"கெனப் பற்றியிழுத்து தன்னருகே அமரச்செய்கிறான். பருவத்தின் புது மெருகோடு மின்னும் அவள் அங்கங்கள் நடுங்குவது நிலவொளியில் அவனுக்குத் தெரிகிறது.

"ஏன் ரோகினி! ஏன் இப்படி நடுங்குகிறாய்? என்னிடம் உனக்குப் பயமா?"

"இல்லையே!" என்றாள் அவள்.

"பின்னே யாருக்குப் பயமாம்?"

"மாமிக்கு! நான் இங்கே வந்து ஏறக்குறையப் பத்துவருஷமாகிறது. இந்தப் பத்து வருஷ காலத்திலும் நான் மாமிக்குத் தெரியாமல் ஒரு காரியமும் செய்ததில்லை. ஆனால்

இப்போது ஒரு பெரிய திருட்டைச் செய்யத் துணிந்திருக்கின்றேன், நித்திரை கொள்ளுவதாகப் பாசாங்கு செய்து அவரை ஏமாற்றிவிட்டு உங்களைச் சந்திப்பதற்காக இங்கே ஓடிவந்திருக்கிறேன். இல்லையா? உங்கம்மா சாதாரணபெண்ணேயல்ல அறியாப்பருவத்திலே அன்னையையும், பிறகு தந்தையையும் இழந்து சிற்றன்னையின் கொடுமைக்குள்ளாகி அவதியுற்றபோது சகோதரனின் பெண் என்ற ஒரே பாசத்தினுல் என்னை அந்த நரகத்திலிருந்து மீட்டு வாழ்வு தந்தவர். அன்பை மழையாக வருவித்துச் சீராட்டுகிற வர். அவரையே ஏமாற்றி உங்களிடம் வந்திருக்கிறேன் தற்செயலாக அவர் நம்மைக் கண்டால் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? அதுதான் எனக்குப் பயமாக இருக்கிறது!''

''அப்பாடி! என் மனநிலையே இப்போது எப்படியெல்லாம் மாறி விட்டது! நான் சிறு பெண்ணுக இருந்தபோது உங்களைக் கண்டால், எனக்கு எவ்வளவு வெறுப்பும் ஆத்திரமும் வரும் தெரியுமா? ஏன், என்னைக் கண்டால் உங்களுக்கும் பிடிக்கவே பிடிக்காதே! பாவம் மோகன்! அது சாது! ஒன்றுமே செய்யாது! நீங்கள் என்னடாவென்ருல் என்னைக்கண்டாலே, எலிவால்பின்னல், கோழிமுட்டை முழி, என்று கேலிசெய்து என் தலையெல்லாம் குட்டுவீர்களே! இப்ப நினைத்தாலும் தலையெல்லாம் வலிக்கிறது!"

விஜயன் கலகலவென்று நகைக்கிருன் ''ஐயோ பாவம், வலிக்கிறதா? இதோ பார் ரோகிணி! இனிமேல் நான் அப்படிச் செய்யமாட்டேன். ஏனென்ருல் நீ இப்போது பெரிய பெண் அல்லவா? ரோகிணி நாணத்துடன் தலைகுனிகிருள். அவன் பேச்சு ஏன் இப்படிக் கற்கண்டாக இனிக்கிறது? அவன் உருவத்தின் கவர்ச்சி அவளை ஏன் இப்படி ஈர்க்கிறது? உலகம் ஏன் இப்படிப் புதுமையாகத் தென்படுகிறது? உடலெல்லாம் ஏன் இப்படி ஒரு இன்பக் குறுகுறுப்பு? இதைத் தான் பருவமென்கிருர்களோ?

''ரோகிணி!''

''உம் என்ருள்!,. அவள்

''அம்மாவைப் பற்றி நீ பயப்படத் தேவையே இல்லை!"

''ஏன்?"

''நீ கல்லூரிக்குப் போன பிறகு அம்மா அப்பாவிடம் என்ன சொன்ணு தெரியுமா?

,,என்ன சொன்ணு? ஐயோ!...' நம்ம விஷயம் தெரிஞ்சு போச்சு?' ரோகிணி படபடக்கிருள்.

''அட அசட்டுப் பெண்ணே! அம்மாவுக்குத் தெரியாத விஷயம் ஏதாவது எங்க வீட்டிலே இருக்க முடியுமா? 'பிள்ளைகள் இரண்டிற்கும் வயது வந்திட்டுது. இரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பினம் போலை இருக்கு. ரோகிணி எங்கவீட்டு மருமகளாய் இருப்பதை யெண்ணி எனக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுமா? இதைத் தாமதிக்கக்கூடாது. கூடிய கெதியில் கல்யாணம் செய்து போடவேணும்!' என்று சொன்ணு ரோகிணி!"

''உண்மையாகவா அத்தான்? என் மாமி தங்கமாமி! நான் அதிர்ஷ்டசாலி அத்தான்! நான் அதிர்ஷ்ட

க்கலி !'' ரோகிணி சிறுகுழந்தையைப் போல் மகிழ்ச்சியினல் துள்ளிக்குதிக்கிருள் ! கைகொட்டிச் சிரிக்கிருள் !

''இதோபார் ரோகிணி! நிலவு படிந்து உன்வதனம் என்ன மாதிரி ஒளிவீசுகிறது தெரியுமா? உன் ஒவ்வொரு அங்க அசைவும் ஆயிரம் ஆயிரம் இன்பக்கதைகள் கூறுகின்றனவே! அம்மாடி! இப்படிக் கொள்ளை அழகை நீ எங்கேதான் அள்ளிக் கொண்டாயோ ! இதோ இந்தக் கைகள்கூட.........விஜயன் அவள் இரு கரங்களையும் சேர்த்திழுத்துத் தன்மார்போடுஅணைத்துக் கொள்ளுகிருன். அவள் உடல்முழுவதும் அதிவேகமாக மின்சாரம் பாய்கிறது......

''விஜயன் !''

யார் குரல் அது ? சந்தேகமில்லை ராஜாம்பாளினுடையதுதான் ! இருவரும் ஒரே சமயத்தில் திடுக்கிடுகின்றனர். ரோகிணி கூச்சத்துடன் கைகளை இழுத்துக்கொண்டு எழும்பி நிற்கிருள். விஜயனும் கலவரத்துடன் எழும்புகின்ருன். ராஜாம்பாள் முன்னே வருகின்ருள். ''என்னடா இது?'' ஐயையோ! அவள் முகத்தில் கடுமை தென்படுகிறதே!

''நிலவுதானே! ஏதாவது பேசலாம் என்று இதுதான் அம்மா......'' என்று ரோகிணியின்மேல் பழியைப் போடுகிருன் அவன். ரோகிணியென்ருல் அம்மாவின் தண்டனை கொஞ்சம் குறைவாகவே இருக்கும் என்பது அவன் நம்பிக்கை. ரோகிணிக்கு அச்சம் அதிகரிக்கிறது.

''சரிதான் போடா ! பெரிய பேச்சாளி இவர் !'' விஜயன் இதுதான் சமயமென்று மெதுவாக நழுவுகின்ருன். ரோகிணி கையைப் பிசைந்த படியே நிற்கிருள். அவள் முகம் திடீரென்று வெளிறியிருப்பது ராஜாம்பாளின் கண்களுக்குப் புலனுகின்றது.

அவள் ரோகிணியை நெருங்குகின்ருள். 'ஏன் அம்மா! அரண்மனை மாதிரி வீடுவாசல் இருக்க, இந்தக் கொட்டும் பனியில் தானு அத்தானேடு பேசவேண்டும்?'' அந்தக் குரலில் தொனித்த பரிவும் பாசமும் நெருப்பாகச்சுட்ட ரோகிணியின் உச்சியைப் பனியைப்போல் குளிரவைக்கிறது, ''நானில்லை மாமி! அவர்தான் என்னை......''என்று தினறுகிருள் ''அது எனக்குத் தெரியாதா? அவன் எப்போதுமே இப்படித்தான் நீ வா படுக்கலாம் !'' ராஜாம்பாள் அவளை அணைத்தபடியே நடக்கிருள் ரோகிணியின் உடல் சிலிர்க்கிறது...

அதன் பிறகு எத்தனையோ எதிர்பார்த்ததும் எதிர்பாராததுமான சந்திப்புக்கள். இன்பம்தரும் பேச்சுக்கள், இனிமை கொட்டும் சல்லாபங்கள், ஆறுமாதங்கள் எப்படியோ கரைகிறது. அதுமட்டுமல்ல ரோகிணியின் வாழ்வின் திசையுமல்லவா சுழன்று போய்விடுகிறது.

∴ ∴ ∴

இன்னும் அதே நிலவு அதே கிணற்றுக்கட்டு ரோகிணி கிணற்றுக்கட்டின்மேல் உட்கார்ந்திருக்கிருள். ஆனல் விஜயன்? அவன் அங்கு இல்லை ! அவளை விட்டுப்பிரிய அவனுக்கு எப்படி மனம் வந்தது?

கலைந்திருந்த கூந்தலும் கண்ணீருடன் உறவாடிக் காய்ந்து விட்ட கன்னங்களும், கசங்கி அழுக்குப் படிந்த உடையும், காலவோட்டத்தின் நிலைமாற்றத்தை உணர்த்துகின்றன.

அவள் ஒளியைப் பொழியும் நில வைப் பார்க்கிறாள், அதனால் புது மெருகோடு காட்சிதரும் சுற்றுடலைப் பார்க்கிறாள். கால்களோடு சேர்த்துக் கட்டியிருக்கும் தன் கைகளைப் பார்க்கிறாள்.

"இதோ, இந்தக் கைகள்கூட... விஜயன் அவள் காதோடு கூறுகின்றானே? இல்லை! எல்லாம் வெறும் பிரமை! அவள் நெஞ்சு வேதனைச் சுமை தாங்காது விம்முகிறது. கண்களினின்று நீர் குளம் குளமாக வழிகிறது. "உன் கண்களிலும் நீரா ரோகிணி?" என்று பாசத்தோடு துடைத்துவிட விஜயன் அங்கில்லை. கோழி தன் குஞ்சை இறகுக்குள் வைத்துக்காப்பதுபோல அரவணைத்து வளர்த்த ராஜாம்பாள் கூட அவளை இப்போது ஏனென்று கேட்கின்றாளில்லை. அவள்தான் என் செய்வாள் பாவம்! பெற்ற மனத்தினால் அந்தக பேரிடியை எப்படித்தான் தாங்க முடியும்? அவள் பேசிக்கூட அனேக நாட்கள் ஆகிவிட்டதே!

∴ ∴ ∴

ரோகிணியைத் தன் வீட்டுக்குக் கூட்டி வந்த நாள்முதல் அவளைத் தன் மூத்த குமரனான விஜயனுடன் இணைத்துவிட வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருப்பவள் ராஜாம்பாள். அவர்கள் தோட்டத்திலே கையும் மெய்யுமாகப் பிடிபட்டதிலிருந்தே உஷாராகி விடுகிறாள் அவள் கல்யாண முஸ்தீபுகள் தீவிரமாக நடைபெறத் தொடங்குகின்றன. அவள் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அடிக்கடி ரோகிணியை அழைத்து அவளைச் சிங்காரித்து ஒத்திகை பார்ப்பது அவள் முக்கிய வேலைகளுள் ஒன்று. ரோகிணிக்கு அவளைக் காணும்போதெல்லாம் அப்படியே ஓடிச்சென்று அவள் காலைக் கட்டிக்கொண்டு கண்ணீரால் கழுவ வேண்டுமென்று உள்ளம் பரபரப்படைவதை அவளால் கட்டுப்படுத்த முடிவதேயில்லை! இத்தகைய ஒரு பண்பு வாய்ந்த ஒரு மாமி அவளுக்குக் கிடைப்பாளா? விஜயனின் படிப்புக்கும் மதிப்புக்கும் லட்சம் லட்சமாகக் கொண்டு பெண்கள் வருவார்களே! அதையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு அவள்மேல் வைத்த அன்பு ஒன்றனுக்காக மாண்புள்ள ஒரு மகனைப் பரிசளிக்கத் தயாராயிருக்கிறாளே! ரோகிணிக்கு அவள் மாமி மட்டுமல்ல வாழ்வு அளித்த தெய்வம் அல்லவா?

∴ ∴ ∴

திருமணத்திற்கு இன்னமும் நான்கே நான்கு நாட்கள் இருக்கின்றன. கண்டியில் உத்தியோகத்திலிருந்த விஜயனின் தம்பி மோகனும், முக்கியமான சில உறவினர்களும் வந்துவிடுகின்றனர். ராஜாம்பாளுக்கு ஓய்வே இல்லை. அங்கும் இங்கும் ஓடுவதும் வேலைகள் கொடுப்பதுவும் வாங்குவதுமாக நிற்கிறாள். அவள் இல்லத்தில் முதன் முதலாக நடைபெறும் மங்களகரமான காரியமல்லவா? சம்பத்து நிறைந்த இடம் கோலாகலத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. நாணத்தின் செம்மை படர மலர்ச்சிரிப்புடன் அங்குமிங்கும் அன்னநடை பயில்கிறாள் ரோகிணி. "நீ அதிர்ஷ்டசாலியடி ரோகிணி"! என்று அவள் தோழிகள் கேலிசெய்த போதெல்லாம் அவள் உள்ளம் மகிழ்ச்சியால் விம்

மிப் பூரிக்கிறது. சந்தேகமென்ன? அவள் அதிர்ஷ்டசாலியேதான்!

ஃ ஃ ஃ

ரோகிணிக்குத் தலைவாரிப் பின்னிக் கொண்டிருக்கிருள் ராஜாம்பாள். ''அம்மா!" என்று அழைத்தபடியே ஓடிவருகிருன் விஜயன். 'இந்த அத்தான் எபோதுமே சின்னக்குழந்தை மாதிரித்தான்!' என்று பெரிய மனுஷியாக நினைத்துக்கொண்ட ரோகிணி குறும்பாக அவனைப் பார்க்கிருள்.

''என்னம்மா! இன்னமும் நாலே நாட்கள்தானே இருக்கிறது. கூறைச் சேலை இன்னும் எடுக்க வில்லையே!''

''ஓம் தம்பி! நானும் அதைத்தான் நினைச்சுச் கொண்டிருக்கிறேன். ஏனடா தம்பி, இன்றைக்குப் புதன் கிழமை தானே நீயும் அப்பாவும் போய்ப் பார்த்து எடுத்துக்கொண்டு வாருங்கோவன்"!

''போம்மா! நீயும் ஒன்று! ஆண் பிள்ளைகளுக்குச் சேலையைப் பற்றி என்ன தெரியும்? நாங்கள் ஒன்றை எடுத்து வந்த பிறகு... ஒருவேளை உடுக்கிறவர்களுக்குப் பிடிக்காமல் இருந்தால்......" என்று ஓரக்கண்ணுல் ரோகிணியைப் பார்த்து முறுவலிக்கிருன். ''ஏனம்மா, மாமியும் மருமகளுமாகப் போய் 'செலக்ட்' பண்ணிக் கொண்டுவந்தால் விஷயம் 'கொம்பிளீட்!' நான் இனித்தான் மேளகாரருக்குச் சொல்ல இணுவிலுக்குப் போகவேணும். சொல்லம்மா;" என்று அவசரப்படுத்திக் கொண்டிருக்கிருன் விஜயன்.

''படுகள்ளனடா நீ! அதற்குள்ளேயே பெண்டாட்டிக்குப் பரிந்து கொண்டு வந்துவிட்டாயே!" என்று ரோகிணியைப் பார்த்துச் சிரிக்கிருள் தாய் ஒரு சிறுதுளி பொறுமைகூட அவளிடம் ஏற்படவில்லையே! என்ன அன்பான இதயம் அவளுக்கு! நன்றியுடன் மாமியாரை நோக்கிய ரோகிணி ஏதோ நினைத்துக் கொண்டவளாக''வந்து...மாமி...இவர்..."என்று இழுக்கிருள். தன்மேல் என்ன பாரமான குற்றச்சாட்டோ என்று பயந்தபடி அவளை ஆவலோடு பார்க்கிருன் அவன். ரோகிணி தலையைக் குனிந்து கொண்டு ''மோட்டார் சைக்கிள் ஓடும்போது கண்முன் தெரியாமல் ஓடுகிருராம்; இவர் கொஞ்சம் கவனமாகத்தான் ஓடச் சொல்லுங்கோ மாமி!"

''ஓமடா தம்பி! பிள்ளை சொல்லுகிறதும் சரிதான். கொஞ்சம் கவனம் வை. காலம் என்றைக்கும் ஒரு மாதிரியா என்ன?"

''போம்மா! நல்ல பயந்தாங் கொள்ளி மாமியும் மருமகளும்! ஏதோ இன்றைக்குத்தான் மோட்டார் சைக்கிள் ஓடத்தெரிந்ததைப் போல! என்று சிரித்துக்கொண்டே கூறியவன், உல்லாசமாகச் சீட்டியடித்தபடி போகின்ருன். ரோகிணியின் நெஞ்சம் வானம்பாடியைப் போல் இன்பகீதம் இசைக்கின்றது...

ஃ ஃ ஃ

மாமியாருடன் போய்த் தனக்குப் பிடித்தமான சேலையை எடுத்து வரும் ரோகிணி வழியெல்லாம் இன்ப நினைவுகளில் மூழ்கியபடியே வருகிருள். 'சேலையைக் கண்டவுடன் அத்தான் என்ன சொல்லுவார்? என் ரசிகத்தன்மையைப் புகழுவாரா?' என்று அவள் உள்ளம் கேளவிகளால் சிலந்திவலை பின்னுகிறது

ராஜாம்பாளின் மனமோ திருமண அழைப்புக் கிடைக்காத உறவினர்கள் யாராவது பாக்கியிருக்கிருர்களோ என்று எங்கெல்லாமோ சுழல்கிறது அவர்களின் எண்ணக் கனவுகளுக்கு 'பிரேக்' போடுமாப்போல வீட்டுவாசலில் நிற்கிறது டாக்ஸி.

வாசலில் ஏன் இத்தனை கூட்டம்? ஐயையோ! ஏன் முகத்திலேயே கலவரத்துடன் திண்டாடுகிருள்? ராஜாம்பாளின் கணவர் ஏன் இப்படித் தலையைப் பிடித்துக்கொண்டு தள்ளாடுகிருர்? என்ன காரணம்? மாமி மருமகள் இருவருக்குமே திகில் நெஞ்சைக் கவ்வுகிறது. இருவரும் இறங்கிப் பாய்ந்தோடுகிருர்கள்? அவர்கள் சொன்ன செய்தி! "விஜயன் மோட்டார் சைக்கிளில் போகும்போது தந்தித்தூணோடு மோதி...... பிரக்ஞையற்று...... பெரியாஸ்பத்திரியில்......" ரராஜாம்பாளோ ரோகிணியோ அதற்குமேல் ஒன்றுமே கேட்கவேயில்லை."என் செல்வமே!" என்ற ராஜாம்பாளின் அழைப்பும் "அத்தான்!" என்ற ரோகிணியில் அலறலும் ஒருங்கே வானத்தை முட்டுகின்றன. சரியாக மூன்றே மூன்று மணித்தியாலங்களுக்கு முன்தானே தற்செயலாக இந்த விஷயத்தை ரோகிணி வார்த்தையாடியிருக்கிருள்? இன்று நேற்றல்ல. இரண்டு வருடங்களாகவல்லவா விஜயன் மோட்டார் சைக்கிளில் சுற்றுகிருன். இன்று மட்டுமேன் அந்தப் பேச்சு ரோகிணியின் நாக்கில் வரவேண்டும்? விபத்து ஒன்று கண்டிப்பாக ஏற்படப் போகிறது என்ற சூசகமா அது?

ஆஸ்பத்திரியிலிருந்து விஜயனின் உயிரற்ற வெறும் கூடு வீட்டுக்குக்கொண்டு வரப்படுகிறது. மணப்பந்தல் பிணப்பந்தலாக மாறுகிறது. ஊரெல்லாம் இதே பேச்சு, மணப்பந்தலிலே மாலைதரித்து மணவாளனகக் காட்சிதர வேண்டியவன் செயலற்ற நிலையில் கண்மூடிக்கிடந்த நிலை அங்கு குழுமியிருந்த எல்லோரையும் கதற வைக்கிறது. ராஜாம்பாளுக்கு நினைவு வருவதும் தப்புவதுமாக இருக்கிறது. ரோகிணி அடங்கி ஒடுங்கித் தன்னுள்ளே கரைந்து உருகி, சிதைந்துவிட்ட ஓவியம் போலக் காட்சிதருகிருள். யார் எப்படித்தான் அழுதாலும் கதறினாலும் ஈமக்கிரியைகள் யாவும் முறைப்படி மற்றவர்களால் நடத்தப்படுகிறது.

அருமை அண்ணனின் திருமண விழாவைக் கண்டு களிக்கப்போகும் ஆவலோடு வந்த மோகன் தாங்க முடியாத துயரச் சுமையுடன் கண்டிக்குப் பயணமாகிருன். சிரிப்பும் கும்மாளமும் நிறைந்திருந்த இல்லத்தில் மயான அமைதி நிலவுகிறது ரோகினி தனியாளாகித் தன் அறையிலே முடங்குகிரு . "ரோகிணி!" என்று பாசம் பொங்க அழைத்து அரவணைத்த ராஜாம்பாள் இப்பொழுது அவளை ஒன்று கூடக் கேட்பதில்லை. ...ரலிப்பில் செழித்து வளரும் செடி கடும் வெட்பத்தில் வாடிக் ...குவதைப் போல இந்த ரோகிணி கொடி விதி செய்த சதியால் ...ங்கி முடங்குகிறது. ஒரே யோசனை. ஒரே வேதனை. ராஜாம்பாள் இனி அவளுக்கிரக்கங்காட்டி அரவணைப்பாளா? இல்லை மகனின் வாழ்வி குறுக்கிட்டு அவனை ஒழியச் செய்த அபாக்கியவதி

என்று நிராகரித்து விடுவாளா? வானத்தையும் பூமியையும் பார்த்து அலுத்த ரோகிணி உள்ளே செல்கிருள்...

ஃ ஃ ஃ

ஏழு மாதங்கள் மேலும் புரள்கின்றன. ரோகிணியின் உள்ளத்தே தோன்றிய கேள்விகளுக்குப் பதிலே பிறக்கவில்லை. ராஜாம்பாள் எந்நேரமும் பித்துப்பிடித்த நிலையிலே உட்கார்ந்திருக்கிருள். அவள் யாருடனும் இப்பொழுது அதிகமாகப் பேசுவதில்லை. இந்த மௌனநிலைக்கு முடிவே கிடையாதா? இனி ரோகிணிக்கு வாழ்வு கிடைக்குமா? அவள் இளமனதிலே நிரம்பித்ததும்பும் ஆசைக்கனவுகள் விரித்து படர வழி பிறக்குமா?

அன்புக்கரம் நீட்டி ஆதரவுதந்தவள் உவந்தளித்த மாண்புள்ள பரிசை அவள் துர்ப்பாக்கியம் குழி தோண்டிப்புதைத்து விட்டது. இனியும் அவர்களுக்கு ஒரு பாரமாக இருப்பது சரியாகுமா? கூடாது! கூடவே கூடாது!

ரோகிணி ஒரு முடிவுக்கு வருகிருள். பத்திரிகையில் படித்த செய்தி ஒன்று அவள் எண்ணத்தை வலுப்படுத்துகிறது. இரண்டு கிழமைகள் நகர்கின்றன.

ஃ ஃ ஃ

கடிகாரம் காலை ஒன்பது மணியென அறிவிக்கிறது. சுவாமி அறையிலே அமர்ந்திருக்கிருள் ராஜாம்பாள். கையில் ஒரு பெட்டியுடன் முன்னே வந்த ரோகிணி ''மாமி' என்றழைக்கிருள் மெதுவாக முகட்டைப் பார்த்துக் கொண்டிருந்த ராஜாம்பாள் திரும்புகிருள். பெட்டியைக் கீழே வைத்துவிட்டுத் தன் கைகளைச் ''சடக்'' கென இறுகப் பற்றிக்கொள்ளும் மருமகளை அவள் வியப்புடன் நோக்குகிருள். தழுதழுத்த குரலிலே ''நான் போய் வருகிறேன். மாமி!" என்கிருள்ரோகிணி.

"எங்கே போகப் போகிருய்?"

''காங்கேசன் துறையிலே ஆஸ்பத்திரி ஒன்றில் தாதிவேலைக்கு ஆட்கள் வேண்டுமென்று மனுப்பண்ணியிருந்தார்கள். அதன் பேரில் நானும் மனுப்பண்ணியிருந்ததால் என்னையும் வரச்சொல்லியிருக்கிருர்கள். அனுதையாய்க் கிடந்த அவதிப்பட்ட என்னை சுபபோகம் என்ற கோபுரத்திற்குத் தூக்கிவைத்தவர்கள் நீங்கள். ஆனல் என் துர்ப்பார்க்கியம் அங்கும் சதிசெய்துவிட்டது. இன்பம் உலவும் இல்லம் துன்பக்கடலுள் அமிழ்ந்தியது இனியும் இப்படியான துன்பநிலைக்கு நான் காரணமாக மாட்டேன். ஆனுலும் உங்கள் மேலான அன்பை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன் மாமி! நான் போய் வரட்டுமா?" ரோகிணி ஒரே மூச்சில் தன் மனத்தில் உள்ளதை அப்படியே கொட்கிடுருள்.

தூக்கத்தினின்று விழித்துக் கொள்பவள்போல் விழித்துக் கொள்கிருள் ராஜாம்பாள். இறந்து போன தன்மகனை விட்டு, உயிருள்ள ரோகிணியைப் பற்றி அவளுக்கு அப்பொழுதுதான் நினைப்பில் வருகிறது. ரோகிணியை அப்படியே தன்பூட்டிய கைகளுக்குள் சிறைப்படுத்திக்கொண்டே பேசுகிருள். ''போகப் போகிருயா? நீயும் என்னைத் தனியாக விட்டுப்போகத் துணிந்து விட்டாயா ரோகிணி? எங்கேயும் போய் விடா

தேடி என் ராசாத்தி! என் கலி தீர்த்த முதற் கொழுந்தைப் பறி கொடுத்த ஏக்கத்திலே உன்னை அடியோடு மறந்து விட்டது என்குற்றந் தானடியம்மா. எனக்காக அதைப் பொறுத்துக்கொள்! பாவம் நீ! நல்லாய் மெலிந்துவிட்டாயேடி! என்ன தான் நேர்ந்த போதிலும் நீ என் மருமகள்தான். நான் உன் மாமி தான்! கவலைப்படாதே! உனக்கு வாழ்வுதர நானிருக்கிறேன். உன் வாழ்வை ஒளிவீசச் செய்ய என்னால் முடியும் ரோகிணி! என் மற்றப் பிள்ளை மோகன் இருக்கிறானல்லவா? நான் சொன்னால் என் சொல்லை மீறவே மாட்டான்!"

"ஆ! உண்மையாகவா? எனக்கு வாழ்வு! எனக்குப் புனர்வாழ்வு தரப் போகிறீர்களா? மாமி! மாமி! என் வாழ்வின் சுடர்விடும் பொன்விளக்கு நீங்களேதான்!

ரோகினி வாய்திறந்து கூற வில்லை. அவள் உள்ளம் அப்படி அறைகூவிற்று. ஆனால் அவளோ ஒன்றும் பேசமுடியாத மயக்க நிலையில் அந்தப் பொன்விளக்கின் மார்பில் சாய்ந்து விடுகிறாள்!


மலிவுவிற்பனை!

## கவிதைச்செல்வம்

இருபத்தொன்பது ஈழநாட்டு இளங் கவிஞர்களின் இனிய கவிதைகள் அடங்கியது.

தொகுத்தவர்
ச. வே. பஞ்சாட்சரம்
முன்னுரை
முருகையன் B. A. B. Sc.

தனிப்பிரதி: 75

விபரங்கட்கு
கலைச்செல்வி அலுவலகம்
கந்தரோடை
சுன்னாகம்.

விற்பனையாகிறது.

## 'கனவுக் கன்னி'

(கவிதைத் தொகுதி)

ஆசிரியர்:- 'தில்லைச்சிவன்'

விலை ரூபா- ஒன்று

## டில்லிக் கடிதம்

A. R. Rayamani
Journalist
New Delhi - 31-2-62

பேரன்புடைய ஆசிரியர்
அவர்கட்கு

வணக்கம் 'கலைச்செல்வி' யின பொங்கல்மலர் கண்டு மகிழ்ச்சியடைந்தேன். 'கலைச் செல்வி'யின் தரம்மிகுந்த சேவையைக் குறித்துக் கேள்விப் பட்டுள்ள என் நெஞ்சிறகு- முதல முறையாகப் பார்த்து- படிக்க நேர்ந்த 'பொங்கல் மலர்' ஏமாற்றத்தை அளிக்க வில்லையென்பதைப் பெருமிதத் தோடும்- நேர்மையோடும் கூறி பெருமையடைகின்றேன்..

ஈழத்திலே எந்தப் பத்திரிகையும் செய்யாதஅரும் பெரும் இலக்கியச் சேவையை 'கலைச் செல்வி' செய்து வருகிறது. மதிப்புக்குரிய பண்டிதமணி அவர்களின் கட்டுரை தொடரின் பயன் மிகப் பெரியது. இலக்கிய வளர்ச்சிக்கு அவைக் களனாக விளங்கும் கலைச்செல்வி மென்மேலும் வளர, மன மாரப் போற்றுகிறேன்.

அன்புள்
இராசமணி


# 'எழுத்து'
(மாதஇதழ்)

ஆசிரியர்
சி. சு. செல்லப்பா

தமிழ்ப் பத்திரிகை உலகில்,

இலக்கிய ரசிகர்களுக்காகவே நடத்தப்படும் ஒரே ஒரு இலக்கிய விமர்சனப் பத்திரிகை.

**ஆண்டுச் சந்தா 5-00**
**தனிப் பிரதி 50 சதம்**

விபரங்களுக்கு:
**'எழுத்து'**

19-A, பிள்ளையார் கோயில் தெரு
சென்னை-5


யாழ்-தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, ஐ. தி. சம்பந்தன் அவர்களால் சுன்னாகம், கலாதேவி அச்சகத்தில்அச்சிடுவித்து வெளியிடப்பட்டது.

ஈழநாட்டினர்
ஆசையோடு
அருந்தும்
மால்டெட்
பால்




நான் விரும்புவது நெஸ்டோமோல்ட்

அதெனக்கு நன்மையை அளிக்கிறது!

Registered at the G. P. O. as a Newspaper KALAICHELVI
Regd. No. Q. C. 59/300



சி. சி. சி.
தாவர

உரப்பசளைக்
கலவைகள்

அதிக விளைச்சலுக்கு
உத்தரவாதமளிக்கிறது.

மமது உரப்பசளைக் கலவைகளின் உதவியால் பெருந்தொகையான நல்ல விளைச்சலைப்பெறுவதற்கு நீங்கள் திடமாக நம்பியிருக்கலாம்.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவு செய்து எழுதுக:-

கொழும்பு
கொமர்ஷியல்
கம்பனி லிமிட்டட்.

[பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது]

தபால்பெட்டி 33.
கொழும்பு



*Cover Printed at* ***THE NEHRU PRESS*** 282 ***Wolfendhal Street Colombo***